மெய்கண்டசாத்திர மாநாடு, திருநெல்வேலி.

3-வது வரிசை :—(1) தென்காசி குருக்களையா, (2) தென்காசி குருக்களையா, (3) ந. சிவகுருநாத பிள்ளை, (4) **காசிவாசி ஈசான சிவாசாரியார்** (தலைவர்) (5) டி. எ. சுப்பையா பிள்ளை, B A.,B.L., (திறப்பாளர்) (6) மா. வே. நெல்லையப்ப பிள்ளை, B.A., (7) நல்ல சிவன் பிள்ளை, B.A.,B.L., (8) கருணைலய சுவாமிகள், (9) துடிசைக்கிழார், அ. சிதம்பரனார், (10) **கா. சுப்பிரமணிய பிள்ளை**, M.A.,M.L., (தலைவர்) (11) M. S. பூர்ணலிங்கம் பிள்ளை, B.A.,L.T.

செந்தமிழ்ச் செல்வி

சிலம்பு-கக] விசு—வைகாசி [பரல்-உ

கண்ணார் நுதலோய் கழலிணைகள் கண்டேன் கண்கள் களிகூர
எண்ணா திரவும் பகலுநான் அவையே எண்ணும் அதுவல்லால்
மண்மேல் யாக்கை விடுமாறும் வந்துன் கழற்கே புகுமாறும்
அண்ணா எண்ணக் கடவேனோ அடிமை சால அழகுடைத்தே.

—திருவாசகம்

அன்பின் இயல்பு எப்படியிருக்கும் என்பது இத திருவாசகச் செய்யுளில் மிகவும் அழகாக விளங்கித் தெரிகின்றது. அன்பின் இயல்பு முடிவில் வேண்டாமை யியல்பாகவே மாறி மிளிர்கின்றது. என்ன வியப்பு!

ஒருவர்பால் ஒருவர் அன்புடையராயிருந்தால் அவ்வன்பு பெருகுந்தோறும் 'தனது நலங் கருதுதல்' என்பது குறைந்துகொண்டே வருகின்றது. அன்பு இனிப் பெருகுதற்கு இடனில்லை என்னும்படி நிறைந்து நிற்கும்போது, யார்க்கும் தனக்கென்று ஒன்று விரும்புதல் என்பதும் முழுதும் இல்லாமலே போகின்றது. இங்ஙனம் இறைவன்பால் அன்புகொண்டு விடுதலே அவர்க்கு அடிமையாதல் என்பது; அன்பினால் அடிமையாதலின் இது தன்னுரிமையோடு கூடிய அடிமையாகும். இவ் வடிமை நிலையில் உள்ளம் ஏதொரு வேண்டுதலும் அற்றுப் பளிங்குபோல் தூய்தாய் ஒளிவிரிந்து திகழ்கின்றது.

மண்மேல் யாக்கை விடவேண்டுமெனவும் இறைவன் கழற்கே புக வேண்டுமெனவும் வேண்டுதல் உயர்வகையான வேண்டுகோளேயாயினும், அதுதானும் 'வேண்டுதல்' என்னும் முறையில் அடங்கி, 'வேண்டாமை' என்னும் பேரன்பு நிலைக்கு இழுக்குத் தருதலின், அந் நிலையில் அடிமை இலக்கணம் பிழைபடுதல் கருதி 'அடிமை சால அழகுடைத்து' என்று மாணிக்கவாசகப் பெருமான் அதனை இகழ்கின்றார்.

'வேண்டாமை' என்னும் இந்த அடிமை அன்பியல்பே வீடுபேறாகலின், சைவசித்தாந்தம் வீடுபேற்றின்கண்ணும் அடிமை நிலைகூறுதல் எவ்வளவு இயற்கை உண்மையாயிருக்கின்றது!

திருநெல்வேலி
மெய்கண்ட சாத்திர மாநாடு

சிவபெருமானுக்கு ஒருகாலத்தில் வடக்கே பனிமலையில் திருமணம் ஆயிற்றன்றோ! மலையரசன் தன் புதல்வியைச் சிவபிரானுக்கு அளித்தனன். அக்காட்சியைக் காணத் தேவர் முதலியோர் அனைவரும் பனியையும் பாராமல் அவ் வடமலையிற் குழுமினர். சிவபெருமானுக்குத் திருமணமென்றாற் சொல்லவேண்டுமா? கூட்டத்துக்குக் குறைவேயில்லை. எல்லாரும் ஒருங்கு திரளவே வடகோடு தாழ்ந்து தென்கோடு உயர்ந்தது. உலகம் திகைத்துப் போயிற்று!

சிவபிரான் மெல்ல அகத்தியரை அழைத்து, 'அகத்தியரே, நும்மாலேதான் நமது திருமணத்துக்கு நல்ல பெயர் கிடைக்கவேண்டும்; நமக்கு அடிக்கடி இம்மலையரசன் திருமணவிழா நடத்தி மகிழ்வன் என்பது உமக்குத் தெரியும்; ஏதாவது ஒரு விழாவில் நீர் அருகில் இருந்து கொள்ளலாம்; இப்போது நீர் உடனே புறப்பட்டுத் தென்னாடு நோக்கிச் செல்லவேண்டும்; சென்று நிலத்தைச் சமப்படுத்தவேண்டும்; இல்லாவிட்டால் உலகமே தலைகீழாய் நிலை மாறி விடும்போல் இருக்கின்றது' என்றார்.

என்ன செய்வார் அகத்தியர்! வருகிறவர்களையெல்லாம் சிறப்பாக வரவேற்க வேண்டுவது திருமண வீட்டார் கடமையா யிருக்க, மாப்பிள்ளையே 'நீர் தொலைவிற் போம்' என்று அகற்றுவதா யிருந்தால், அந்த மாப்பிள்ளை எவ்வளவுதான் பெரியவரா யிருந்தாலும் அவர் திருமணம் எவ்வளவுதான் சிறப்புடையதா யிருந்தாலும் அங்கே கொடி நேரமாவது தங்கியிருக்க யாருக்குத்தான் மனம் வரும்? சிவனே என்று அகத்தியர் பொதியமலை

யாகிய தென்கோட்டுக்கு வந்து சேர்ந்தார். நிலம் சம மாயிற்றும்.

அன்று வந்த அகத்தியர் பின்பு எங்கும் அசை யவே யில்லை. பொதியமலைச் சாரலில் தென்றலும், செந்தமிழ்த் தேறலின் இனிமையும் அப்பனிமலை மன்ற லின் காட்சியினும் எத்துணையோ மடங்கு அவர்க்கு இன் பம் அளித்திருக்கவேண்டும்! கடைசியிற் சிவபெருமா னும் பழையபடியே தம் தேவியுடன் மெல்ல மெல்லத் தெற்கு நோக்கி வந்து இத் தென்னாட்டிலேயே நிலைத்து விடும்படி நேர்ந்துவிட்டது. இவையெல்லாம் பழைய கதைகள். ஆயினும், அகத்தியர் மட்டும் அப்போதே, 'ஆகட்டும்; வடகோட்டில் எல்லாரும் ஒருங்கு கூடியது போல ஒரு காலத்தில் இத் தென்கோட்டிலும் எல்லாரும் ஒருங்கு கூடிவிடும்படி செய்து விடவேண்டும்!' என்று கட்டாயம் நினைத்திருப்பா ராதலின், அந்நினைவு இப் போது உண்மையாகவே நிறைவேறி விட்டதென்பதை, நிகழ் விசு ஆண்டு வைகாசித் திங்கள் 8-ம் நாள் முதல் தொடர்பாக ஏழு நாட்கள் பெருந்திரளான மக்கட் கூட் டத்துடன் மிகச் சிறப்பாக நடைபெற்ற '**மெய்கண்ட சாத் திர மாநாடு**' மெய்ப்பித்து விட்டது.

பொதியமலைச் சாரலிலுள்ள திருநெல்வேலி நகரில் நாடெங்குமிருந்து சைவநல்லன்பர்கள் திரளாகக் கூடின ரென்றால், இத் தென்கோடு எப்படி கனமுடையதாகா மற் போகும்? அதுவும் முன் வடகோடு பெற்ற கனத்தை விட இரு மடங்கு கனமுடையதென்றே கூறவேண்டும். ஏனென்றால், சிவபிரானும் உமையம்மையும் தொண்ட ருக்குள் அடக்கம். அத்தகைய தொண்டர்கள் ஒருங்கு குழுமினால் கனம் மிகுதியாகாமற் போகுமா? மாநாட் டின் ஏழாம்நாள் இரவு மக்கட்கூட்டம் ஆறாயிரவர்க்கு மேற் சென்று கடல் போலப் பரந்து விரிந்திருந்தது. இதனால் இம்மாநாட்டோடு தொடர்பு கொண்ட 'விபுலா

ஞானந்த அடிகள்' வட நாட்டைச் சமப்படுத்தும் பொருட்டு வடக்கே பனிமலைச் சாரலின் தவப்பள்ளியில் தங்கியிருக்கும்படி நேர்ந்து விட்டது. ஆதலின் திருநெல்வேலியின் மெய்கண்ட மாநாட்டு நிகழ்ச்சி, முன் வடமலையில் நிகழ்ந்த சிவபிரான் திருமன்றல் நிகழ்ச்சியைப் பலவகையாலும் நினைவு கூர்விப்பதா யிருக்கின்றது.

வேதியர், மாதவர், யாழோர், அடியார், தொண்டர் முதலியோர் புடைசூழ இம் மெய்கண்டமாநாடு சிறப்பாக நடைபெற்றது. மாநாட்டு மேடையில் ஆதிசைவ நல்லந்தணராய்த் திருநீறு சிவமணி முதலியன அணிந்து சிவப் பொலிவுடன் திரு. ஈசான சிவாச்சாரிய அடிகள்போன்ற வேதியர் ஒருபாலும், திருவாவடுதுறை ஆதீனம் முதலியவற்றிலிருந்து காவியுடையும் திருநீறு சிவமணிகளும் திருமுடியும் பொற் குண்டலங்களும் திருவடிக் குறடுகளும் அணிந்த சிவக்கோலக் காட்சி மிக்க திரு சங்கரலிங்கத் தம்பிரான் அடிகள் போன்ற மாதவர் ஒருபாலும், இனிய யாழ் ஏந்தி இசைமிழற்றி இன்னொலி எழுப்பி விளங்கிய திரு இலக்குமணப் பிள்ளை பி. ஏ., அவர்கள் போன்ற யாழோர் ஒருபாலும், நீலம் சாந்தமும் அப்பிய மெய்யினராய்த் தலைமாலை முதலியன அணிந்து, சைவநல்லுலகின் ஞானத்தந்தையென விளங்கும் திரு. ந. சிவகுருநாத பிள்ளையவர்கள் போன்ற அடியார்கள் ஒருபாலும், மாநாட்டுக் குறிகளும் அடையாளமுங் கொண்டு தொண்டர்கள் ஒருபாலுமாய் விளங்க இம் மாநாடு ஒளி விளங்கிய காட்சி இஃதொரு தென் கயிலாயத் திருவோலக்கக் காட்சியோ என விம்மிதங் கொள்ளுமாறு மிளிராநின்றது.

வேதியர் நான்மறை ஓதினர்; மாதவர் வாழ்த்து வழங்கினர்; யாழோர் இன்னிசை இயக்கினர்; அடியார் சொற்பொழிவு நிகழ்த்தினர்; தொண்டர்கள் சிவமுழக்கஞ் செய்தனர். மாநாடு சிவநாடாய்ப் பொலிவுற்று

விளங்கியது. அவையோர் தம்மை மறந்த உணர்வினராய் அவ்வெற்றில் ஈடுபட்டுப் பேரின்பத்தில் தேக்கினர். சொற்பொழிவுகளில் வியக்கத்தக்க நுண்பொருள்கள் வெளிப்பட்ட காலங்களில் அறிஞர்கள் தம் உள்ளக் குறிப்புத் தோன்ற மகிழ்ந்து வியந்த காட்சி, இம் மாநாட்டில் அவ்வப்போதும் மின்னிய ஞானத்தின் திருவென்றே கூறுதல் வேண்டும்.

இங்ஙனமெல்லாம் இம்மாநாடு தென்மலைத் திருவோலக்கக் காட்சியேயாய் நாடோறுங் காலை 8-மணி முதல் இரவு 2-மணி வரையில் இடையறாது பொலிந்து விளங்கிய மாட்சி இதுகாறுந் தமிழகத்தில் நடைபெற்றிராத சிறப்புப் பெருங் காட்சியாய் வயங்கியது. மாநாட்டுக்கு எழுந்தருளி யிருந்த சைவப் பெரியார் ஒவ்வொருவரும் 'கண்டேன் அவர் திருப்பாதம்; கண்டறியாதன கண்டேன்' என்று திகைத்த பெருங்களிப்புடன் கருத்தாரக் கருதி மகிழ்ந்தனர்.

வாழி மெய்கண்டான் திருவடி! வாழி சிவஞான போத நெறி! வாழி உலகத்தின் எத்திசையும்!

மாநாட்டுத் திறப்புரை

திறப்பாளர் நெல்லை ரிட்டையர்டு ஜில்லா ஜட்ஜ்
சைவத்திரு. T. A. சுப்பையா பிள்ளை
யவர்கள், B. A., B. L.

பெரியோர்களே !

நான் இந்த ஊரில் நிலவரமாகத் தங்கியிருந்தது இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னேயாகும். இவ்வளவு நாட்கழித்து இவ்வூர் வாசிகளையும் நண்பர்கள் முதலியவர்களையும் ஒருங்கே இங்கே காணப்பெற்றது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை விளைவிக்கின்றது. எனக்குச் சமய ஆராய்ச்சி கிடையாது என்பதை இம் மாநாடு அமைச்சரவர்களிடம் தெரிவித்தேன். அதனால் எனக்கு இம் மாநாட்டில் ஏதாவது பேசுதற்குத் தகுதியில்லை என்பதை வற்புறுத்தியும், மாநாட்டு அமைச்சர், தலைவர்களாயிருப்பவர்களுக்குத்தான் அதிக வேலை, திறப்புரை இயற்றுதல் கடினமான வேலையில்லையாதலின் நான் அந்தக் கடமையைக் கட்டாயம் ஏற்றுச் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். அதை மறுக்கமாட்டாது கடமையைச் செய்ய ஒப்புக்கொண்டேன்.

சைவசித்தாந்த நூல்களைப்பற்றி நான் ஏதாவது பேசக்கூடுமென்று நீங்கள் எதிர்பார்க்க வேண்டியதில்லை. ஆனால் எனக்கு அவற்றிற் பயிற்சியில்லாமற் போனாலும் அவற்றைப்பற்றி அறிந்து கொள்ள விருப்பமுடையேன். ஒவ்வொரு மதத்தாரும் தங்கள் கொள்கைகளை எடுத்துரைக்க உரிமை யுடையவர்களே. ஆனால், ஒரு மதத்தார் மற்றொரு மதத்தாரைக் கண்டித்து இகழ்தல் தவறாகும். நமது சைவசமய நூல்களைத் தக்க முறையில் வெளியிடவும் எல்லார்க்கும் விளங்கும்படியாக விரிவுரைகள் செய்விக்கவும் **சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்** செய்த முயற்சிகள் பாராட்டத்தக்கன. நெடு நாட்களுக்குமுன் இந்து காலேஜ் தலைமைத் தமிழ்ப் பண்டிதராயிருந்த திருவாளர் தி. ப. சிவராமபிள்ளையவர்கள் சமயச் சார்பான சிறப்புக்களைப்பற்றியும், கொள்கைகளைப்பற்றியும் துண்டு அறிக்கைகள் (pamphlets) வெளியிட்டுவந்தார்கள். அதனால் **சிவராத்திரி, திருக்கல்யாணம், தைப் பொங்கல்** முதலியவற்றின் காரணங்களை எளிதாகத் தெரிந்துகொள்ள வழி ஏற்பட்டது. அவ்வாறே நம் சமயக் கொள்கைகளைப்பற்றி எல்லாரும் எளிதாகத் தெரிந்து கொள்ளக் கூடிய முறையிற் சிறு நூல்களும் பத்திரிகைகளும் இதழ்களும் வெளியிடப்பட வேண்டும். பண்டிதர்களுக்கு யாரும் தெரிந்து கொள்ளக்கூடிய எளிய நடையில் எழுதுவது கடினமாயிருக்கலாம். ஆனால் காலத்தின் போக்கிற்குத் தக்கபடி எளிய நடையில் சமயக் கருத்துக்களை எழுதுவதுதான் மிகவும் பயன்படுவதாயிருக்கும். மஹா மஹோபாத்தியாய டாக்டர் சாமிநாத ஐயரவர்கள் தம்முடைய வாழ்க்கை வரலாற்றை மிக எளிய நடையில் 'ஆனந்த விகடனில்' எழுதி வருகின்றார்கள். அவ்வளவு படித்தவர்கள் இவ்வளவு எளிய நடையில் எழுதுவது எனக்கு வியப்பினை விளைத்தது.

தற்காலத்தில் வடமொழிக் கலப்புக் கூடாதென்ற கொள்கை பரவி வருகின்றது. எனக்குத் தூய தமிழில் பேசுவது அரிது. எவ்வாறாயினும்

யாவரும் தெரிந்து கொள்ளக் கூடிய எளிய நடையில் சொற்பொழிவாளர்கள் பேசவேண்டு மென்பது எனது விருப்பம். இம் மாநாடு சிறப்பாக நடைபெறவேண்டு மென்று கடவுளை வேண்டிக்கொண்டு இம் மாநாட்டைத் திறந்து வைக்கின்றேன். எல்லாருக்கும் எனது வணக்கத்தை இன்னொரு முறை செலுத்துகின்றேன்.

வரவேற்புரை

கழகத்தலைவர் திரு. P. சிதம்பரம் பிள்ளையவர்கள், B.A., B. L.

அன்பர்களே !

தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் அற நிலையங்களுள் ஒன்றான **தென்னிந்திய சைவசித்தாந்த சங்கத்தின்** சார்பாக அக் கழகத்தின் தலைவர் என்ற நிலையில், இப்பொழுது நடைபெறப்போகும் மாநாட்டிற்கு உங்களனைவரையும் மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன்.

தற்போது இம் **மெய்கண்டசாத்திர மாநாடு** சில முதன்மையான காரணங்களை முன்னிட்டுக் கூட்டப்பட்டிருக்கின்றது. சைவசித்தாந்த சமயமானது உலகத்திலே மிகவும் பழைமையும் பெருமையும் வாய்ந்த தென்று சரித்திர ஆராய்ச்சியாளர் ஒப்புக்கொள்ளுகின்றனர்.

ஆயினும் இத்தகைய சிறந்த சைவசித்தாந்த உணர்ச்சி பொதுவாகக் கற்றவர்களிடத்திலும் கூடக் குறைந்திருக்கின்ற தென்பது மிகையாகாது. இதன் காரணம் என்ன? சாத்திர சம்பந்தமான நூல்களுக்கோ குறைபாடு ஒன்றுமில்லை. ஆனால், நூல்களைக் கற்பதில் ஊக்கம் குன்றியிருப்பது உண்மையே. அங்ஙனம் குன்றுவதற்கும் பல காரணங்கள் இருத்தல் வேண்டும். இந்த மாநாடானது அக்காரணங்களையெல்லாம் ஆராய்ந்தறிந்து நம் சமய உண்மைகளை அனைவரும் எளிதிற் கற்றறியும் பொருட்டு உழைக்குமென்றும் கீழ்க் கண்ட நோக்கங்களுடன் பணியாற்றுமென்றும் நம்புகின்றேன்.

1. சித்தாந்தக் கருத்துக்களைச் சிறிது கல்வியறிவுடைய இளைஞர்களும் எளிதில் உணரும்படி உரைநடை நூல்கள் படிமுறையில் இயற்றப்படல் வேண்டும்.

2. சித்தாந்த சாத்திரம் பயிலும் அறிஞர்கள் தமக்கு ஏற்படும் ஐயங்களை இத்தகைய மாநாடு கூடுதலின் வாயிலாக அளவளாவித் தெளிந்து கொள்ளுதல் வேண்டும்.

3. உலகத்தில் ஆங்கிலந் தெரிந்த மக்களுக்கும் பயன்படும்படி கருத்துக்களை எளிய ஆங்கில நடையில் மொழிபெயர்த்து உதவுதல் வேண்டும்.

4. வடமொழிப் பயிற்சியாளர் மலைவு நீங்கித் தெளிவு பெறுவதற்குத் தமிழிலுள்ள சித்தாந்த நூல்களைப் பயிலுதல் வேண்டும்.

5. தமிழ்மொழியிலுள்ள சித்தாந்த நூல்களை அம் மொழி யியல்பு தோன்ற ஆராய்தல் வேண்டும்.

6. சித்தாந்தக் கருத்துக்களை விளக்கமாக அறிதற்கு அளவை நூல் அறிவு இன்றியமையாதது. ஆதலால், அவைகளோடு பொருந்த அவ் வுண்மைகளை எளிய உரை நடையில் விளக்கிக் காட்டுதல் வேண்டும்.

7. வெறுங் கலை யறிவுக்காகப் படிக்கின்ற முறைமையிலன்றிச் சமய வொழுக்கத்தில் ஈடுபடுதற்கான உணர்ச்சி மக்கட்கு உண்டாகும்படி சித்தாந்த உண்மைகளை விளக்குதல் வேண்டும்.

8. பன்னிரு திருமுறைகள், தமிழ்ப் புராணங்கள் முதலிய சமய நூல்களுக் கெல்லாம், சித்தாந்த உண்மைகளோடு முரணாகாத முறையில் உரைகள் வெளிவரல் வேண்டும்.

9. பொதுவாக இலக்கண இலக்கிய நூற் பயிற்சிக்குச் சாத்திரப் பயிற்சி முதன்மையானதால், சாத்திரப் பயிற்சியை அனைவரும் மேற் கொள்ளுதல் வேண்டும்.

இத்தகைய நோக்கங்களைக் கருதியே இம் 'மெய்கண்டசாத்திர மாநாடு' இப்போது உங்களெல்லாருடைய அன்பின் துணைகொண்டு இங்கே கூட்டப்பட்டிருக்கின்றது. இதற்கு நாட்டின் பல பகுதிகளினு மிருந்து வந்திருக்கும் உங்களை மேற்கூறியவை போன்ற ஆக்க வேலைகளை உருப்பெற நிறைவேற்றித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

திருநெல்வேலி
21—5—'41.

(ஒப்.) P. சிதம்பரம் பிள்ளை,
வரவேற்புக் கழகத் தலைவர்.

அவைத் தலைவர் (21—5—41, 23—5—41, 25—5—41)
பழனித் திருக்கோயில் வேதாகம பாடசாலைத்
தலைமைப் பேராசிரியர்

சிவத்திரு. காசிவாசி ஈசான சிவாச்சாரிய அடிகள்
அவர்கட்கு
அன்புடன் கூறும்

வரவேற்புரை

ஆதிசைவ அருமறைத் தலைவ!

சிவனடிப் போன்பே தமது வாழ்நாட் பேறெனவும், செந்தமிழ்த் தனி நேயமே தமது வாழ்நாட் பெரும்பணி யெனவும் தாங்கள் திருவுள்ளத் தமைத்துச் செம்மையால் தணிந்த சிந்தைத் தெய்வ வேதியராய், இங்குத், தம்மையே தமக்கொப்பான நிலைமையால் தலைமை பூணும் பேரருட்டிறத் தால், இம் மெய்கண்ட சாத்திர மாநாடு உண்மையில் மெய்கண்ட மாநகர்

டாகவே மிளிர்கின்றது. இதனைப் பெரு மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்ளுமுகமாகத் தேவரீருடைய அழகெழுதலாகா அருட்சேவடிகளை மெழுகு நெகிழ் பதத்த தமிழ் நெஞ்சத்துடன் ஆர்வமாய்ப் பணிந்து கொள் கின்றனம் பெரும! சிவஞானப் பெருஞாயிறாகிய தேவரீரது திருவரவால் இம் மாநாடு எய்தியபேறு நம்பால் இருந்தவாறென்னே என்று உளமலர் கின்றது. வருக, பெரியோய் வருக! வந்து இச் சித்தாந்த அரியணை இனிதின் எழுந்தருளித், தேவரீர் திருவுளமுகந்தவாறு வற்றாச் செழுந் தேன் அருள்மழை பொழிந்தருள்க!

திருநான்மறையின் துணைவ!!

தாங்கள், திருநான்மறைகளேயன்றிச் சைவ நன்மக்கட்கே சிறப்பின் உரிய சிவாகமப் பெருநூல்களும் அவற்றோடு பன்னிரு திருமுறைகள் பதினன்கு மெய்கண்ட சாத்திரங்கள் முதலியனவும் ஓதித், தங்கள் மறுவிலா மரபிற்கேற்ப மாசிலா ஒழுக்கம் பூண்டு திருநான்மறையின் விளக்கத்துக்கே ஒரு சிறந்த துணையாய் விளங்குதலின், தங்களை 'நான்மறையின் தனித் துணையே' என்று இம் மாநாடு விரும்பி அழைத்து மகிழ்கின்றது. செந் தமிழ்த் தேவாரத் தீந்தொடைகளை இடையறாமல் தொடுத்து எல்லாம்வல்ல சிவத்தை வழிபட்டு விளங்கிய ஆதி சைவ ஆசிரியரான நம்பியாரூரரது அரு மரபிற் றோன்றும் அரும்பேறு பெற்றும், தமிழ் மொழியைப் பெரிதும் புறக் கணித்துத் தமிழ் ஏழையராய் ஒதுங்கி உயிர்வாழுஞ் சிலர் போலாது, தாங் கள் ஆரூரர் அருங்கோள் பற்றிச் செந்தமிழ் மொழியை அளவித் திருந்திய செஞ்சொற்களால் இனிய விரிவுரைகளும் நிகழ்த்தி அதனைப் பரவச் செய் யும் பெருந்தகைமை பூண்டு, ஞானமே முதலா நான்கும் நவையறத்தெரிந்து மிக்கு, இனிப் பெறும் பேறொன்றின்றி இனிது திகழ்கின்றீர்கள்.

அருட் பெரியோய் !!!

இன்று நும் பெருமை எம்மால் இயம்பலாம் எல்லைத்தாமோ! தென் றமிழ்ப் பயனுயுள்ள திருத்தொண்டர் புராண அன்பு ஒன்றுமே தேவரீர் மாட்சிமைக்குப் போதும். தங்கள் மாட்சிமையால் இம் மாநாடு பெறுகின்ற சிறப்புப் பெரிது. தாங்கள் இத்தென்மலை வாழ் நன்முனிவனின் நிலை பேறுகள் அத்தனையும் ஒருங்கு கெழுமி, எம்மிடை என்றும் வாழ்ந்திருந்து, யாண்டுந் தெய்வ மணம் பரவச்செய்து, அனைவரையும் உய்வித்தருள்க வென முழுமுதற் பெம்மான் செழுந் திருவருளை இனிது எண்ணி ஏத்துதும், வாழ்த்துதும், ஐய! நலம்.

திருநெல்வேலி,
21—5—'41.

வரவேற்புக் கழகத்தார்,
"மெய்கண்ட சாத்திர மாநாடு"

அவைத் தலைவர் (22—5—41, 24—5—41)
சிதம்பரம், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியரும், தாகூர் சட்ட விரிவுரையாளருமான

சைவத்திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை, M.A., M.L.

அவர்கட்கு

அன்புடன் அளிக்கும்

வரவேற்புரை

சிவநேய மிக்க செந்தமிழ்ச் செல்வ!

ஆசிரியர் மெய்கண்ட தேவர் முதலாய திருவருள் கைவந்த பெரியோர்கள் இச் செந்தமிழ் நாட்டில் அருளிரக்கத்தோடு நிலையிட்டுதவிய மெய்கண்ட சாத்திரக் கொள்கைகளை ஒல்லும் வகையான் உலகிற் பரவச் செய்யும் பொருட்டு ஈண்டுக் குழுமியுள்ள இம் மாநாட்டுக்குத் தாங்கள் பேரன்போடு அவைத்தலைமை ஏற்றுதவ இசைந்த பெருந்தகைமையை நாங்கள் என்றும் மறவோம். தங்கள் நல்வரவால் இம் மாநாடு அகமும் முகமும் மலர்ந்து இனிது விளங்குகின்றது.

நெல்லைப் பதிதரு பல்கலைப் புலவ !!

தங்களை யாங்கள் இவ்வண்ணம் மகிழ்ந்தழைப்பதற்கு என்ன தவஞ் செய்துள்ளோமென்று எண்ணி எண்ணி உள்ளம் பெருமகிழ்வெய்துகின்றனம். **ஆங்கிலம், தீந்தமிழ், சட்டம், சரித்திரம், சாத்திரம்** *எனப் பல கலைகளிலும் நற்புலமை வாய்ந்து திகழுந் தங்கள் பெருநிலை கருதித் தமிழகம்* **பல்கலைப் புலவர்** *என்று தங்களைப் பாராட்டிய அருமை பெரிதும் பொருந்துவதேயாகும். இப் பல்கலைக் கடலிலிருந்து எழுந்து, செந்தமிழ்ச் சைவ வானளாவிப் பரந்து, இடையறாது தமிழ் நாகரிக மழைகள் பொழிந்துவரும் பன்னூல் முகில்களின் வள்ளன்மையை யாங்கள் என்னென்று கூறி எங்ஙனம் அமைவேம்! தீஞ்சுவை மிக்க மெய்கண்ட நூற் கரும்புகளைத், திருகிச் செல்லுந் தங்கள் பேரறிவாலையிற் பிடித்துப் பிழிந்து* **'மெய்கண்ட நூல் உரைநடை'** *என்னுந் தீஞ்சுவைப் பெருங்கட்டியை யாவரும் எளிதின் நுகரத் திரட்டித் தந்திருக்கும் அருமை யொன்றே தங்களுடைய பெருமாட்சிமைக்கும் பெரு வள்ளன்மைக்கும் போதிய எடுத்துக்காட்டாகும்.*

குணப்பெருங் குன்றே !!!

அருமையும் எளிமையும் ஒருங்குடைமையே நற்குணமென்பது மெய்ந்நூற் பொருள். தங்கள்பால் அம் மாட்சிமையை நேரிற் கண்டு யாங்கள் அடையும் இன்பத்துக்கும் பயனுக்கும் ஓர் எல்லை இல்லை. அரிய நற்குணச் செயல்களுக்கு உலகு தரவல்ல கைம்மாறுதானும் ஒன்று உண்டுகொல்! காந்திமதி நெல்லையப்பராகிய அம்மையப்பர் திருவருளால் தாங்கள் நல்வாழ்வுகள் பலவுஞ் சிறந்து இப் பொருநை மணலினும் பன்னெடுங்காலம் வாழ்ந்து வருக என மகிழ்வோடு வாழ்த்துதும்.

திருநெல்வலி,
22—௵5—

வரவேற்புக் கழகத்தார்,
திருநெல்வேலி "மெய்கண்ட சாத்திர மாநாடு"

மாநாட்டு ஏற்பாடுகள்

1. சிறப்பு

சைவ உலகத்தில் 21—5—41 முதல் 27—5—41 வரையில் 7 நாட்கள் பொன்னெழுத்துக்களாற் பொறிக்கவேண்டிய பேரொளி நாட்களாகும். காரணம், திருநெல்வேலியில் அந்நன்னாட்களில் **தென்னிந்திய சைவசித்தாந்த சங்க** ஆதரவில் **மெய்கண்டசாத்திர மாநாடு** மிகச் சிறப்பாக நடைபெறப்பெற்றமை.

2. வந்திருந்தோர்

சென்னை, செங்கற்பட்டு, தென்னார்க்காடு, வடஆர்க்காடு, சேலம், கோயம்புத்தூர், தஞ்சை, திருச்சி, மதுரை, இராமநாதபுரம் முதலிய தமிழ் நாட்டின் கோட்டங்கள் அத்தனையிலு மிருந்து சைவப் பெரியார்களும் இசைச் செல்வர்களும் மேற்கூறிய நாட்களில் திருநெல்வேலியில் ஒருங்கு குழுமி மாநாட்டைச் சிறப்பித்தனர். நாட்டின் பல பாகங்களிலுமிருந்து பலரும் நல்வாழ்த்துக்கள் அனுப்பியிருந்தனர். தென்னாடேயன்றி வடநாட்டிலிருந்தும் மாநாட்டுக்குக் கட்டுரைகளும் வாழ்த்துக்களும் அன்பர்கள் அனுப்பினர்.

ஆதரவுகள்

திருப்பனந்தாள், திருத்தருமபுரம், திருவாவடுதுறை முதலிய ஆதீனத் தலைவர்களும் நாட்டின் சிவநேயச் செல்வர்களும், சித்தாந்தப் பரிசெனவும், கட்டுரைப் பரிசெனவும், மாநாட்டுக்கு நன்கொடை யெனவும் பலவகை களில் உதவிகள் புரிந்து ஆதரித்தனர். மாநாடு சிறப்பாக நிகழ்ந்து நிறைவெய்தியது.

3. முயற்சிகள்

மாநாட்டு முயற்சிகள் இரண்டு மூன்று திங்கட்கு முன்னிருந்தே ஒழுங்குசெய்யப் பெற்றுவந்தன. நாட்டில் சித்தாந்தச் செல்வர்கள் இருக்கு மிடமெல்லாம் கடிதங்களும் அழைப்புகளுஞ் சென்றுகொண்டே யிருந்தன. மாநாட்டின் முதன்மைபற்றியும் சைவசித்தாந்த விளக்கம்பற்றியும் சைவர்கள் கடமைபற்றியும் பற்பல அறிக்கைகள் அடுத்தடுத்து வெளியிட்டு அனுப்பப்பட்டு வந்தன.

4. கிளர்ச்சிகள்

மாநாடு துவங்குதற்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பிருந்தே மாநாட்டுத் தொண்டர்கள் மேலுங் கிளர்ச்சிமிகுந்து பெருகிவந்தனர். மாநாட்டுக் காரியநிலையம் இராப்பகல் ஓவாது பணிபுரிவதாயிற்று.

5. புனைவுகள்

கழகநிலையத்திலும் நெல்லை மந்திரமூர்த்தி உயர்நிலைப் பள்ளியில் உள்ள அகன்ற மணற்பரப்பிலும் மாநாட்டுப் பந்தர்கள் 'வேனில்விழாப்' பந்தரெனக் காட்சிக்கினிதாக அமைக்கப் பெற்றுப் பற்பல மேற்கட்டிகள், ஓரத்துத் தொங்கல்கள், மாலைகள், கொடிகள் முதலியவற்றாலும் வாழை

மரங்களாலுங் கவினுற்று விளங்கின. மாநாட்டுப் பந்தரில்மட்டும் ஆயிரம் பேர் அமர்ந்திருக்கலாம். மாநாட்டு நாட்களில் அப் பந்தர் முழுமையும் நிரம்பி அதன் இருபுறங்களிலும் ஆடவரும் மாதரும் திரளாக அமர்ந்திருந்த காட்சி ஈது அப்பர், சுந்தரர் சம்பந்தர் காலமோ என வியக்கத்தக்கதாயிருந்தது. மாநாட்டு நிகழ்ச்சிகள் எல்லார்க்கும் நன்கு கேட்கும்படி **ஒலி பெருக்கியும்** பந்தரில் அமைக்கப்பட்டிருந்தது.

திருநெல்வேலி நகர் புகைவண்டி நிலையத்திலிருந்தும், காரிய நிலையத்திலிருந்தும், மாநாட்டுக் கொட்டகைக்கு **அழைப்பு விட்டங்களும்** நகரின் நாலா பக்கங்களிலும் **அழைப்புக் கொடிகளும்** தெருக்களில் அமைக்கப்பட்டிருந்தன.

6. விடுதிகள்

மாநாட்டுத் தலைவர்கள், சொற்பொழிவாளர்கள், இசைச்செல்வர்கள், சைவப் பெருமக்கள் முதலியோர்கெல்லாம் தனித்தனியாக விடுதிகள் ஏற்பாடு செய்யப்பெற்றன.

7. வசதிகள்

மாநாடு நடைபெற்ற காலம் வேனிற்காலமாயினும் அருகிலுள்ள திருக்குற்றாலச்சாரல் அந்நாட்களில் துவங்கிவிட்டமையாலும், காலமே தற்செயலாகக் குளிர்ந்து தோன்றினமையாலும் இனிதாக இருந்தது. ஆயினும் மாநாட்டுப் பந்தரிலும் காரிய நிலையததிலும் பெருமக்கள் தங்கிய விடுதிகளிலும் ஏராளமான மட்பானைகள் பற்பல இடங்களிலும் அமைத்து அவற்றில் தூய பொருநைநன்னீர் இடையறாமல் நிறைத்து நன்னாரி முதலிய தண்மை மிக்க மணங்கமழ் பொருள்களும் இட்டுப் பயன்படுத்திய காட்சியும், அவையினர் அமர்ந்த இடத்திலிருந்தே நீர் அருந்தும்படி தொண்டர்கள் தனித்தனி பாண்டங்களில் நீரைக் கையில் எடுத்துக்கொண்டு அவை முழுதும் வழங்கிவந்த காட்சியும், நூற்றுக்கணக்கான விசிறிகளை நறுமண நீரில் தோய்த்துப் பெரியோர்கள் சாப்பிடும்போதும் பிற காலங்களிலும் ஓவாவது தொண்டர்கள் விசிறிவந்த காட்சியும் ஒருங்கே மாட்சிமைப்பட்டு அனைவரையும் மகிழ்வித்து வந்தன.

8. உணவு

சைவப் பெரியாரகளை மாநாட்டுத் தொண்டாகள் **வெற்றிலை, சந்தனம், பன்னீர், மலர்கள்** முதலியவற்றுடன் வரவேற்றனர். காலை, பகல், மாலை, இரவுகளில் ஏற்றபடி உணவு வகைகள் வந்திருந்தோர் அனைவர்க்கும் உரிய நேரங்களில் **வடை, பாயசம், பூந்தி, பழவகைகள், பால்** முதலியவற்றுடன் அளிக்கப்பெற்றன. இடையிடையே தொண்டர்கள் **எலுமிச்சம்** பழச்சாறு பிழிந்த இன்னீரையும் வழங்கி வந்தனர்.

9. நிழற்படம்

மாநாட்டுத் தமிழ்ப் பெரியார்கள் இசைச்செல்வர்கள் முதலியோர்க்குத் தனித்தனியாக **நிழற்படங்களும்** எடுக்கப்பெற்றன.

மாநாட்டு நிகழ்ச்சிகள்

மெய்கண்ட சாத்திர மாநாட்டு முதல்நாள் (21-5-41) நிகழ்ச்சி

எல்லாம் வல்ல சிவத்தின் திருவருளால் ‘மெய்கண்ட சாத்திர மாநாடு’ இன்று காலை 8-மணிக்கு மேள வாத்தியங்களுடன் துவங்கிற்று. மாநாட்டுக் காரிய நிலையத்திலிருந்து அன்பர்கள் புடைசூழத் தலைவர்கள் மாநாட்டுப் பந்தர்க்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். ஊர்தியும் பந்தரும் மணங்கமழ் நறுமலர் மாலைகளால் அணி செய்யப்பெற்றிருந்தன.

திருமறை ஓதுதல் மேலகரம். திரு. சுந்தர ஓதுவாரவர்களால் நிகழ்ந்தது.

பின்பு நெல்லை ரிட்டையர்டு டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் சைவத்திரு. T. A. சுப்பையா பிள்ளையவர்கள் B.A.,B.L., அவையோர் விரும்புமாறு சிறந்த கருத்துக்களையும் நோக்கங்களையும் எடுத்துரைத்து மாநாட்டைத் திறந்து வைத்தனர்.

வரவேற்புக் கழகத் தலைவரான திருவாளர் P. சிதம்பரம் பிள்ளை B.A.,B.L., அவர்கள், அனைவரையும் வரவேற்று வரவேற்புரை கூறினர்.

தலைவர் தேர்தலின் பின் பழனி சிவத்திரு ஈசான சிவாச்சாரிய அடிகள் தலைமை தாங்கினர். அவர்கட்கு ஒரு வரவேற்புரை படித்தளிக்கப்பட்டது. தலைவரவர்கள் ஓர் அரியமுன்னுரைச் சொற்பொழிவை நன்கு நிகழ்த்தினர்.

அதன்பின், காஞ்சி திரு. வச்சிரவேல் முதலியார் B.A.,L.T., அவர்கள் ‘திருவுந்தியார்’ என்பது பற்றியும், வித்துவான் திரு S. அருணைவடிவேல் முதலியாரவர்கள் ‘திருக்களிற்றுப்படியார்’ என்பதுபற்றியும், பாரிபாக்கம் திரு. கண்ணப்ப முதலியாரவர்களும் திரு. A. முத்தைய பிள்ளை B.A.,B.L., அவர்களும் சிவஞானபோதம் என்பது பற்றியும் இனிய விரிவுரைகள் நிகழ்த்தினார்கள். இடையே தஞ்சைத் தமிழவேள் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை B.A.,B.L., அவர்கள் மறைவு கருதித் திரு. ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள் B.A.,B.L., முதலியோர் கனிவு மொழிகளுடன் மிகவும் உருக்கமாக இரங்கல் தீர்மானம் நடைபெற்றது.

பின்பு மாணவர் சித்தாந்த உரையாடலும் அம் மாணவர்கட்குப் பரிசு வழங்கலும் நடைபெற்றன. தலைவர் சிறந்த பின்னுரை வழங்கினர்.

இரவு 7-30-மணிக்குமேல் திருவாளர் தி. இலட்சுமணப் பிள்ளை B.A., அவர்கள் தம் மாணவியர் இருவருடன் ஓர் அழகிய இன்னிசையரங்கு நிகழ்த்தி அவையினரை மிக மகிழ்வித்தனர். அவையோர் இன்று ஆயிரவர்க்குமேல் குழுமியிருந்தனர். கடைசியாகத் திருவாட்டி சாரதாம்பாள் M.A., ‘அவர்களால்’ வீணைக்கச்சேரியும், திருவாட்டி குஞ்சம்மாள் அவர்களால் ‘வள்ளி திருமண’க்கதையும் சிறப்பாக நிகழ்ந்தன.

இரண்டாம் நாள் (22-5-41) நிகழ்ச்சி

இன்று மாநாடு சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியரும், தாகூர் சட்ட விரிவுரையாளருமான திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை M.A.,M.L., அவர்கள் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

வரவேற்புப் படித்தளித்துத் தலைவரவர்களின் அரிய முன்னுரை நிகழ்ந்தபின் பழனி வேதாகம பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. காசி வாசி ஈசான சிவாச்சாரியாரவர்கள் 'சிவஞானசித்தியார் பரபக்கம்' என்பது பற்றியும் தூத்துக்குடி சித்தாந்த ஆசிரியர் திரு. ந. சிவகுருநாத பிள்ளையவர்களும், நெல்லை திரு. மாணிக்கவாசகம் பிள்ளையவர்களும் 'சிவஞானசித்தியார் சுபக்கம்' என்பது பற்றியும், செங்கம் திரு. ஔவை துரைசாமி பிள்ளை யவர்களும் கோவை துடிசைகிழார் திரு. அ. சிதம்பரனார் அவர்களும் 'இருபாஇருபஃது என்பது பற்றியும், சென்னை திரு. நல்லசிவன் பிள்ளையவர்களும் நெல்லை திரு. கண்ணபிரான் வேள் அவர்களும் சைவசித்தாந்த அருங்கருத்துகள் என்பது பற்றியும் மிகச் சிறப்பான கிளர்ச்சி, மிக்க அரிய சொற்பொழிவுகளை நிகழ்த்தி அவையினரை மகிழச்செய்தார்கள்.

மாணவர் இருவர் இசைப்பாடலும், மாணவர் சொல்லாடலும் இடையே நிகழ்ந்தன. தலைவர் அவர்களின் அரிய பின்னுரையோடும் திரு. இளவழகனாரவர்களின் நன்றியுரைகளோடும் திருவருளால் இன்றைய அவை நன்கு நிறைவெய்தியது. மக்கள் திரளாக வந்திருந்தனர்.

இரவு 7-30 மணிக்குமேல் மயிலம் திரு. வச்சிரவேல் முதலியாரவர்கள் இன்னிசைக் கருவிகளுடன் இசையரங்குநடத்தி அவையினர்க்கு விருந்தளித்தனர்.

மூன்றும் நாள் (23-5-41) நிகழ்ச்சி

இன்றைய மாநாட்டுத் தலைவர் பழனி, காசிவாசி ஈசான சிவாச்சாரியரவர்கள். தலைவரவர்கள் முன்னுரைக்குப்பின், காலையில் தோரமங்கலம் ஆசிரியர் அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள் 'உண்மை விளக்கம்' என்னும் பொருள்பற்றியும், மாலையில் திருவாரூர் வித்துவான் S. தண்டபாணி தேசிகரவர்கள் 'சிவப்பிரகாசம்' என்னும் பொருள்பற்றியும் இனிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினா.

மாலையில் மாணவர் இருவர் சித்தாந்த உரைபாடலும், மாணவியர் பலரது திருமுறைப் பாடலும், பரிசு வழங்கலும், தலைவர் பின்னுரை முதலியனவும் நிகழ்ந்தன.

இரவு 7-30 மணிக்குமேல் திரு. செல்வரத்தினம் பிள்ளையவர்கள் இன்னிசைக் கருவிகளுடன் அரிய இசையரங்கு நடத்தி அனைவரையும் மகிழ்வித்தனர். இன்றையகூட்டமும் ஆயிரவர்க்குமேல் இருக்கும்.

நான்காம் நாள் (24-5-41) நிகழ்ச்சி

மாநாடு இன்று திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை, M. A., M. L., அவர்கள் தலைமையுடன் துவங்கியது.

தலைவரவர்களின் அரிய முன்னுரைக்குப்பின் காலையில் திரு. ஔவை சு. துரைசாமிப் பிள்ளையவர்கள் 'திருவருட்பயன்' என்னும் பொருள் மேலும், சென்னை திரு. ரா. சண்முகசுந்தரஞ் செட்டியாரவர்களும், துலசை திரு. குமாரவேலுப் பிள்ளைய்வர்களும், பாலகவி வயிநாகரம் வே. இராம

நாதன் செட்டியாரவர்களும் 'விருவெண்பா' என்னும் பொருள்மேலும், மாலையில் திருவையாறு திரு. கு. சோமசுந்தர தேசிகரவர்கள் 'போற்றிப் பஃறொடை' என்னும் பொருள் மேலும், விழுப்புரம் நகர் ஆட்சி ஆணையாளர் திரு. கீ. இராமலிங்க முதலியார் B.A., அவர்கள் 'உண்மை நெறி விளக்கம்' என்னும் பொருள்மேலும் அருஞ்சொற்பொழிவுகள் நிகழ்த்தி அவையோர்க்குப் பெருவிருந்தளித்தனர்.

இடையே பகல் 2-மணிக்கு இம் மாநாட்டின் சார்பாகத் தமிழ்நாடெங்கு மிருந்து வந்திருந்த தமிழ்ப்புலவர்கள் குழுமிய அவையோடு '**தமிழ்ப்புலவர் மாநாடு**' ஒன்று, சாத்தூர் திருவாளர் கந்தசாமி முதலியார் B. A. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சில சொற் போர்களுக்கிடையே பல அரிய தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன. முடிவில், இப்போதிருக்கும் தமிழ் நெடுங் கணக்குக்கு வேறாக எழுத்துப் புரட்சி செய்வது இலக்கண இலக்கிய மரபுக்கும் பிறவற்றிற்கும் பல வகையான இடையூறுகளை உண்டு பண்ணுதலால் அம்முயற்சி வேண்டுவதில்லை என்பது முதலாகப் பல தீர்மானங்கள் ஒருமுகமாக நிறைவேற்றப்பட்டன.

பின்பு மணவர் சித்தாந்த உரையாடலும் பரிசு வழங்கலும் நடைபெற்றன. தலைவரவர்கள் நல்லவாறு முடிவுரை வழங்கினர்.

இன்று மாலையில், தமிழ்ப்புலவர்கட்கு நெல்லை தேரோடுந் தெருக்கள் நான்கின் வழியாகச் சிறந்த **ஊர்வலம்** நடைபெற்றது.

இரவு சிவத்திரு சுந்தரஓதுவாமூர்த்தி அவர்களால் இன்னிசைக் கருவிகளுடன் அழகிய இசையரங்கு நடைபெற்றது; அதன்பின் திருவாட்டி சாரதாம்பாள் M.A., அவர்கள் இனிதாக வீணை இசைத்து அவையையும் மகிழ்வித்தனர்; மாநாட்டு நாட்களில் மக்கள் கூட்டம் மேலு மேலும் பெருகியபடியாயிருந்தது.

ஐந்தாம் நாள் (25-5-41) நிகழ்ச்சி

இன்று பழனி சிவத்திரு ஈசான சிவாச்சாரிய அடிகள் அவைத் தலைவராக வீற்றிருந்து அவையை நன்கு நிறைவேறச் செய்தனர். திருமுறை ஓதுதலும், தலைவரவர்கள் முன்னுரையும் நிகழ்ந்த பின்னர் உத்திரன்மேரூர் திரு. ஆ. ஈசுரமூர்த்தியா பிள்ளையவர்கள் 'கொடிககவி' என்னும் பொருள் பற்றியும், கழகத் தமிழ்ப் புலவர் திரு. இளவழகனாரவர்களும் காஞ்சி வித்துவான் திரு. அ. மு. பரமசிவானந்தம் அவர்களும் 'நெஞ்சுவிடுதூது' என்னும் பொருள்பற்றியும், திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை M,A.,M.L., அவர்கள் 'சங்கற்ப நிராகரணம்' என்னும் பொருள்பற்றியும் இனிய விரிவுரைகள் நிகழ்த்தினர்.

லக்னோ திருவாட்டி V. பரஞ்சோதி அம்மையார் M.A.,L.T., Ph. D. அவர்கள் 'சைவசித்தாந்தத்தின் கடவுட்கொள்கை' என்னும் பொருள்மேல் ஆங்கிலத்தில் எழுதியனுப்பிய அரிய கட்டுரையைத் திருவாட்டி சாரதாம்பாள் M.A., (Econ.) அவர்கள் மிகவும் இனிதாகப் படித்தார்கள். அதற்கு

னோான தமிழ் மொழிபெயர்ப்பொன்றும் திரு. பு. சி. புன்னைவனநாத முதலியாரவர்களால் மொழிபெயர்த்துப் படிக்கப்பட்டது.

மாணவியர் சித்தாந்த உரையாடல் மிகவும் அருமையாக நடைபெற்றது. பரிசு வழங்கலும் சில தீர்மான நிறைவேற்றங்களும் நிகழ்ந்தன.

பின்பு திருவாட்டி தி. நீலாம்பிகையம்மையாரவர்கள் 'மகளிரும் சமய வுணர்ச்சியும்' என்னும் பொருள்பற்றி அரிய சொற்பொழிவை நிகழ்த்தினார்கள்.

தலைவரவர்களின் அரிய முடிப்புரைக்குப்பின், முடிவில், கழக வினையாளர் திரு. வ. சுப்பையாபிள்ளையவர்கள் ஊன்றிய உணர்ச்சியோடு நன்றியுரைகள் கூற, மங்கல வாழ்த்துகள் முழங்க மெய்கண்ட சாத்திர மாநாடு திரளான பெருங்கூட்டத்துடன் திருவருளால் சிறப்பாக நிறைவெய்தியது.

இன்று நடைபெறவேண்டிய திரு. சித்தூர் சுப்பிரமணிய பிள்ளையவர்கள் இசையரங்கு, மழைத்தூறலால் நாளை மறுநாள் (27-5-41) இரவுக்கு மாற்றி வைக்கப்பெற்றது.

ஆறும் நாள் (26-5-41) நிகழ்ச்சி

இன்று மாலை 5-மணிக்குத் திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில் வசந்தமண்டபத்தில் 'மெய்கண்ட சாத்திர மாநாட்டின் சார்பாகத் திருவாட்டி நீலாம்பிகை அம்மையாரவர்களின் அரிய தலைமையில் 'சைவ மாதர் மாநாடு' நடை பெற்றது.

தலைமை தாங்கிய அம்மையாரவர்களும் திரு. சாரதாம்பாள் அம்மையார் M.A., அவர்களும், திரு. மங்கையர்க் கரசியம்மையார், திரு. மகாலட்சுமி அம்மையார் முதலாயினோரும் சைவமாதர் சைவ வளர்ச்சிக்கு ஆக்கமாக எவ்வெவ்வாறெல்லாம் நடந்துகொள்ள வேண்டுமென்பது பற்றியும் தமிழ்நாட்டில் முற்காலத்தில் விளங்கிய சைவ மாதர்களின் சிறப்புக்கள்பற்றியும், தற்காலத்தில் மேனாட்டு மாதர் முதலியோர் தம் சமய வளர்ச்சிக்காக எங்ஙனமெல்லாம் பணி செய்கின்றனர் என்பதுபற்றியும், மதுவிலக்கு முதலிய பிறபொருள்கள் பற்றியுமெல்லாம் அரும்பெரு விரிவுரைகள் நிகழ்த்தினர்.

மாதர் மாநாடு இங்கு நல்ல உணர்ச்சியை ஊட்டியிருக்கின்றது. அதன் பின் இரவு 9-மணிக்குமேல் உத்தரகோசமங்கை திரு. காமகோடிபாய் என்னும் 8 ஆண்டுச் சிறுமியினால் மிகவும் அழகிய ஜலதரங்கக் கச்சேரி நடைபெற்றது.

ஏழாம் நாள் (27-5-41) நிகழ்ச்சி

இன்று மெய்கண்ட சாத்திர மாநாட்டின் கடைசிநாள். இன்றிரவு 9-மணிக்குமேல் திருவாளர் சித்தூர் சுப்பிரமணிய பிள்ளையவர்களின் இன்னிசைக் கச்சேரி தக்க பக்க மேளங்களுடன் நெல்லையப்பர் கோயில் வசந்த மண்டபத்தில் மிகப்பெருஞ் சிறப்புடன் நடைபெற்றது.

கூட்டம் மண்டபம் நிறைந்து, கடல்போலப் பரந்து விரிந்து அப்புறமுள்ள சென்றிருந்தது; ஒலிபெருக்கிக் கருவி அமைக்கப்பட்டிருந்தது. இன்று கூட்டம் ஆறாயிரவர்க்குமேல் இருக்கும். திருவருளால் மெய்கண்ட சாத்திரமாநாடு இன்றைய மாப்பெருங்கூட்டத்துடன் பேருணர்ச்சியாக மங்களமாக இனிது நிறைவேறியது.

அஞ்சிலே ஒன்று

N. K. வேலன் B. A.

வேனிற்காலம் வந்துவிட்டது. வீட்டில் காற்றோட்டமே இல்லை. கடற்கரையில் எங்குப் பார்த்தாலும் ஒரே கூட்டம். அங்கு வந்திருந்த அன்பர் ஒருவர் "அஞ்சிலே ஒன்றைப் பெற்றேன்; அஞ்சிலே ஒன்றைத் தாவி" என்று பாடத் தொடங்கினார். 'ஐந்தில் ஒன்றாகிய காற்றின் புதல்வன் அநுமனும். காற்றுக்கு மனைவியும் மக்களும் உண்டோ' என மற்றொருவர் வினவினார். 'நாம் எல்லோரும் காற்றின் பிள்ளைகள்தானே. காற்றின்றி நாம் உயிர்வாழ முடியுமா? நிலம், நீர், காற்று, தீ, வான் என்னும் ஐம்பொருள்களில் காற்று நம் உயிர்வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாததாக இருக்கின்றது. இதனாலன்றோ காற்றினை "வாயு பகவான்" என மக்கள் போற்றிவந்தனர்' என்று இன்னொருவர் கூறினார். காற்றைப் பற்றிய ஆராய்ச்சி பின்வருமாறு நிகழ்ந்தது.

இரவும் பகலும், உறங்கும் போதும் விழித்திருக்கும்போதும் நாம் மூச்சுவிட்டுக்கொண்டே இருக்கிறோம். நாம் நீண்டநேரம் மூச்சை நிறுத்திவைக்க முடியாது. தண்ணீருக்குள் சிறிது நேரம் மூழ்கியிருந்தாலும் மூச்சுத்திணறி மேலே வந்துவிடுகிறோம். வெளியில் இருக்கும் காற்றை உள் இழுத்து உள்ளே இருக்கும் காற்றை வெளிவிடுவதை நாம் மூச்சுவிடுதல் என்கிறோம். நாம் மூச்சுவிடுவதற்கும் ஏனைய உயிர்கள் மூச்சுவிடுவதற்கும் காற்று வேண்டும். மரம் செடி கொடிகளும் நம்மைப்போல் மூச்சு விட்டு வளர்கின்றன.

நம்மைச் சுற்றி எல்லாவிடங்களிலும் காற்று நிறைந்திருக்கிறது. வீடுகளிலும், வெளியிடங்களிலும் நாம் ஒன்றுமில்லை என்று எண்ணியிருக்கும் இடங்களிலும் காற்று இருக்கிறது. காற்றை நாம் கண்ணால் காணமுடியாவிட்டாலும் அஃது அசைந்து நம்மேல் வீசும்பொழுதும் மரம் செடி முதலியன அசையும் பொழுதும் காற்று இருப்பதை நாம் உணர்கின்றோம்.

ஒரு குடத்தை எடுத்துத் தலைகீழாகத் தண்ணீருக்குள் அமிழ்த்தினால் அதனுள் தண்ணீர் ஏறுவதில்லை. அதனை ஒருபுறமாகச் சாய்த்து அமிழ்த்தினால் தண்ணீர் ஏறுகிறது. குடத்திலிருந்து குமிழிகளாக வெளிக்கிளம்புவது யாது? குடத்திலிருக்கும் காற்று நம் கண்ணுக்குத் தெரிவதில்லை. குடத்தினுள் காற்று நிறைந்திருந்ததால் அது முதலில் தண்ணீரைக் குடத்திற்குள் நுழையவிடவில்லை. குடத்தைச் சாய்த்துப் பிடிக்கும்போது உள்ளிருக்கும் காற்று, தண்ணீருக்கு இடத்தைக் கொடுத்துவிட்டுக் குமிழிகளாய் வெளியில் கிளம்புகின்றது.

எல்லாப் பொருள்களும் எரிவதற்குக் காற்று வேண்டும். இதனால்தான் அடுப்பு நன்றாய் எரிவதற்கு அதனை ஊதுகிறோம். கொல்லன் துருத்தியின் உதவியால் உலைக்குள் காற்றைச் செலுத்தி இரும்பைக் காய்ச்சுவதைப் பார்க்கலாம். நாம் அணிந்திருக்கும் துணியில் தீப்பிடித்துக்கொண்டால் அதனை உடனே அணைப்பது எப்படி? எரியும் ஆடைகளுக்குக் காற்று கிடைக்காமல் செய்துவிட்டால் தீ அணைந்துவிடும். ஆடை தீப்பிடித்து எரியும்போது கீழே படுத்துப் புரளலாம். சாக்கு, கம்பளி, போர்வை முதலியவற்றினால் போர்த்துக் காற்று உட்புகாமல் செய்யலாம். தீப்பிடித்து எரியும்போது அங்குமிங்கும் ஓடுவது தவறு. அங்ஙனம் ஓடுவதால் காற்றுவீசித் தீயை நன்றாய் எரியச்செய்யும்.

காற்றுக்கு எடை உண்டு. நம்மீது எடையுள்ள பொருள் ஒன்று இருந்தால் அது நம்மை அழுத்தவேண்டாமா? அப்படியானால் காற்றின் அழுத்தம் நமக்கு ஏன் தெரிவதில்லை? நம் உடம்பினுள்ளும் காற்று இருக்கிறது. அதன் அழுத்தமும் வெளியிலுள்ள காற்றின் அழுத்தமும் ஒன்றேபோல் இருப்பதால் நாம் காற்றினால் நசுக்குறுவதில்லை. பேனாவிற்கு மையடைக்கும் குழாயின் நுனியில் வாயைவைத்து உறிஞ்சினால் அதன் ரப்பர் சப்பையாக நசுங்கிப்போகிறது. நம் உடலிலுள்ள காற்றை எடுத்துவிட்டால் நாமும் அதைப்போல் நசுங்கிப் போய் விடுவோம்.

காற்றின் அழுத்தத்தைக் கண்டுபிடிப்பதற்கு பாரமீட்டர் (Barometer) என்னும் கருவி உதவுகிறது. பருவக்காற்று

புயற்காற்று முதலியவை காற்றின் அழுத்தத்தில் ஏற்படும் மாறுதல்களினாலேயே உண்டாகின்றன. ஆகவே, காற்றின் அழுத்தத்தினைத் தொடர்ச்சியாய் அளந்துவைத்தால் புயற்காற்று வருவதை முன்னமேயே தெரிந்துகொள்ளலாம். மழைவருவதையும் இக் கருவியின் உதவியால் முன்னரே அறியலாம். இவற்றைத் தெரிந்து கொள்வதற்குப் பாரமீட்டரில் அடிக்கடி ஏற்படும் மாறுதல்களைக் குறித்துவைக்கவேண்டும். இம்மாறுதல்களைத் தாமே குறித்துக் காட்டும் கருவிகளும் உண்டாக்கப்பட் டிருக்கின்றன.

நாம் நன்றாய் மூச்சுவிடும்போது நெஞ்சும் வயிற்றின்மேற் புறமும் உயர்ந்து தணிகின்றன. இங்ஙனம் உயரும்போது நெஞ்சிலுள்ள காற்றுப்பைகள் விரிகின்றன. உடனே வெளியிலுள்ள காற்று மூக்கின்வழியாய் உள்ளே சென்று பைகளை நிரப்புகிறது. நெஞ்சு தணியும்போது காற்றுப்பைகள் சுருங்கி அவற்றுள் இருக்கும் காற்றை வெளியே தள்ளுகின்றன. காற்றுப்பைகள் நம் உயிர்க்கு உறுதி பயப்பனவாக இருப்பதால் அவை நெஞ்சின் எலும்புக்கூட்டிற்குள் தக்க பாதுகாப்புடன் வைக்கப்பட்டிருக்கின்றன. "காயமே இது பொய்யடா காற்றடைத்த பையடா" என்னும் சித்தர்பாடல் நம் நினைவுக்கு வருகின்றது.

"நாம் உட்கொள்ளும் காற்று நல்லதாக இருக்கவேண்டும். இக்காற்று நம் உடலினுள்ளே ஓடிக்கொண்டிருக்கும் குருதிநீரிலுள்ள கழிவுப் பொருள்களை எடுத்துக்கொண்டு அதற்கு வேண்டிய உயிர் வளியைக் கொடுக்கின்றது. கரிவளியும் நீராவியும் அது பெற்றுக்கொள்ளும் கழிவுப் பொருள்கள். இவை நாம் மூச்சு வெளிவிடும்போது கழிந்துபோகின்றன. நாம் எப்பொழுதும் காற்றோட்டமுள்ள இடங்களில் குடியிருத்தல் வேண்டும். காற்றுள்ள இடங்களில் உலாவுதலும் உடற்பயிற்சி செய்தலும் நல்லது. வாயினால் மூச்சுவிடக்கூடாது. வாயினால் மூச்சுவிடுவதால் தூசு, அழுக்கு முதலியன உள்ளே சென்று பல நோய்களை உண்டாக்கும்" எனக்கூறி முடித்தார். இங்ஙனம் அநுமவணக்கத்தில் தொடங்கிய ஆராய்ச்சி, காற்றுக் கடவுளின் பெருமையை எடுத்துக் காட்டுவதற்கு உதவியாக இருந்தது.

பயிர் செய்தல்

" வேங்கடாசலம் "

(கக-ம் சிலம்பு உரு-ம் பக்கத் தொடர்ச்சி)

சதச்சத்தும், உப்புத்தாதும் நீரில் கரைந்து பயிர்களினால் உட்கொள்ளப் படும்படியான நிலைமையை யடைகின்றன. பசுந்தாள் எருவை மக்கவிடுவதால் அவ்வெரு மக்கும்போதே எலும்புத்தூளும் மக்கி பயிர்களுக்கு உணவாகின்றது. எலும்புத்தூளை வழங்குவதால் ஊதியம் எவ்வாறு அதிகப்படுத்தக் கூடுமென்று சர்க்கார் பண்ணைகளில் அநேக சோதனைகள் செய்யப் பட்டு வருகின்றன. கர்னூல் சீமை (ஜில்லா) யிலுள்ள சிர்வல் பண்ணையில் 3 ஆண்டுகளாய்ச் செய்த சோதனையில் பசுந்தாள் எருவை மாத்திரம் வழங்கினதில் ஏக்ரா 1-க்குச் சராசரி 1452 இராத்தல் தானியம் கிடைத்திருக்கின்றது பசுந்தாளுடன் 112 இராத்தல் எலும்புத்தூள் சேர்த்து வழங்கியதில் ஏக்ரா 1-க்கு 1757 இராத்தல் தானியம் அதாவது 100-க்கு 21 அதிகம் கிடைத்திருக்கின்றது.

பாலூர் விவசாயப் பண்ணையில் பசுந்தாள் உரம்மாத்திரம் வழங்கியதில் 1682 இராத்தல் தானியமும், பசுந்தாளுடன் 112 இராத்தல் எலும்புத்தூளுஞ் சேர்த்துப் போட்டதில் 1900 இராத்தல் அதாவது 100-க்கு 13 அதிகம் கிடைத்திருக்கின்றது.

தஞ்சாவூர் சீமையிலுள்ள மங்கநல்லூரில் சோதனை பார்த்ததில் ஊதியம் குறிப்பிடத்தக்கதாய் மிகுதியா யில்லாதிருந்தாலும் 100-க்கு 9 விழுக்காடு அதிகம் கிடைத்திருக்கின்றது.

எலும்புத் தூளிலுள்ள முழுப் பயிருணவும் அதே ஆண்டில் அந்தப் பயிருக்குப் பயன்படாமலிருந்த போதிலும் அடுத்த பயிரில் பலன் அதிகப்படுகின்றது. அதாவது எலும்புத் தூளிலுள்ள நிலத்தின் வளப்பத்தைக் குறையவிடாமல் செய்கின்றது.

எலும்புத்தூள் 112 இராத்தல் கொண்ட அந்தர்வெயிட் 1-க்கு ரூ. 3-8-0 முதல் ரூ. 4 வரை ஆகிறது. நிலங்களுக்கு ஏக்ரா 1-க்கு 100 முதல் 150 இராத்தல் வரை வழங்கினால் போதுமானது.

17. நஞ்சை நிலங்களும் நெற்பயிரும்

புஞ்சை நிலங்களே பயிர்களுக்கு வேண்டும் தாதுப் பொருள்கள் முழுவதையும் எளிதில் அடையும்படியான நிலைமையி லமைந்துள்ளன வென்பது இதுவரையில் கூறப்பட்டிருப்பவைகளினின்று காணக்கூடியதா யிருக்கின்றது. அந்நிலங்களில் கிணறுகள் போன்ற தண்ணீர் பாய்வதற்குச் சாதனங்க ளமையின் அவைகளே மேலானவை யென்பதும் மிகுதியான வருமானம் தரக்கூடியவை யென்பதும் தெளிவாக அறியக் கிடக்கின்றது. ஆனால் நடைமுறையில் இதற்கு நேர்மாறா யிருப்பதைக் காணலாம். உணவே மனிதனுக்கு முதன்மையாக வேண்டும் பொருளாயிருப்பதால் அவ்வுணவுப் பொருள்கள் விளையும் நிலங்களே மேன்மை யுள்ளனவாகவும், விலை மதிப்பேறப் பெற்றவை யெனவும் கருதப்படுகின்றன. நம் தென்னாட்டில் நெல்வயல்களே அதிகம் விலை மதிப்புடையவைகள். ஏனெனில் நெல்லே இங்குள்ளவர்களுக்கு முதன்மையான உணவுப் பொருள். இனி இந்நன்செய் நிலங்கள் நெற்பயிருக்கு ஏற்றனவா, மற்ற நிலங்களில் இப்பயிரைப் பயிராக்க முடியாதா என்பவற்றைப்பற்றிச் சற்று ஆராய்வோம்.

முதலில் பயிர் வகைகளின் பொதுவான குணங்களைப்பற்றிச் சிந்திப்போம். மிருகம், மனிதன் இவர்களைப் போலவே பயிர் வகைகளும் பழக்க வழக்கங்களுக்கு உட்படக் கூடியவை என்பதை ஒவ்வொருவரும் மனதில் பதியவைத்துக்கொள்ள வேண்டுவது இன்றியமையாததாகும். எடுத்துக்காட்டாக, யதேச்சையாக வளரும் ஒரு மரத்தை, அதாவது வெட்டிக் கொத்திக் கொடுத்து, உரம் வைத்துத், தண்ணீர்ப் பாய்ச்சி வளர்க்கப்படாமல் யாதொரு பருவமுமின்றி முற்றிலும் மழையினுடைய ஆதரவிலேயே வளர்ந்துவந்த ஒரு மரத்திற்கு வெட்டிக் கொடுத்து, உரம் வைத்து, தண்ணீர்ப் பாய்ச்சிப் பாதுகாத்து வந்தால் அம்மரமானது முன்னைவிட மிகவும் செழிப்பாய் வளருவதைக் காணலாம். இப்படிச் சிலகாலம் செய்துவந்து பின் அதைப் பழையபடி விட்டுவிட்டால் அதாவது இடையில் அதற்குச் செய்து வந்த பருவங்களை நிறுத்திவிட்டால் அம்மரம் பட்டுப்போவதையும் காணலாம். இதேபோன்று சேர்க்கை உரம் வைத்து வளர்க்கப்பட்டு

வந்த ஒரு மரம் அல்லது செடிக்கு அவ்வுரத்தை நிறுத்தி விட்டு நாட்டு உரத்தை (தொழு, எரு முதலிய உரங்கள்) வைத்தாலும் அச்செடி பட்டுவிடும். ஏனென்றால் சேர்க்கை உரத்தில் பதமடைந்த நிலையிலுள்ள உரப்பொருள் மிகுதி யிருப்பதால் அதை ஏராளமாக உண்டுவந்த அச்செடி அதே அளவு உரப் பொருளை மற்ற உரவகைகளில் கொள்ள முடியாததுடன் சொகுசான நிலைமையி லிருந்துவந்த அச்செடி பின் முரட்டுத்தனமான வாழ்வை நடத்தவேண்டி யிருப்பதாலும் அதன் உறுப்புகள் அம்முரட்டு வாழ்க்கையை நடத்த வியலாமல் பட்டுப் போகின்றன. சொகுசான வாழ்வு, முரட்டு வாழ்க்கை என்று சொல்வது மனிதர்களைப்போல் செடிகளுக்கும் பொருந்தும். மனிதன் யாதொரு கடின உழைப்புமின்றி முன்னோர் தேடிவைத்த முதலை வைத்துக்கொண்டு காலங்கழிப்பது போன்றே சேர்க்கை உரம் வைக்கப்பட்ட செடியும் யாதொரு சிரமமுமின்றி வேண்டும் உணவை, வேண்டும் அளவில், தேவையான நிலைமையில் உட்கொள்கின்றது. மேற்கூறிய மனிதனுக்குப் பொருள் முடக்கமும், அதனால் உண்டாகும் சங்கடங்களும் ஏற்படாததைப் போலவே, சேர்க்கை உரம் வைக்கப்பட்ட செடியும் உணவுத் தட்டன்னி யில் சொகுசாக வளருகின்றது. மற்ற உரவகைகள் வைக்கப் படும் செடிகள் அவ்விதமில்லை. அவற்றிற்குப் போதுமான உணவுப்பொருள் வேண்டும் நிலைமையில் கிடைக்குமென்பது நிச்சய மல்ல. மற்றும் வெப்பதிட்ப முதலிய காலநிலைமைகளின் வேறுபாடுகளுக்கு அவை உட்பட்டே யாகவேண்டும். எடுத்துக் காட்டாகப் பயிர்களின் விளைவானது கதிரவன் வெப்பம் மிகுதியா யிருக்கும் காலத்தில் விரைவில் முதிர்வடைவதையும், மழை காலத்தில் அல்லது வானம் மந்தாரமா யிருக்கும்பொழுது தாமதப் படுவதையும் நாம் அனுபவத்தில் காண்கிறோம். விளைவின் முதிர்வைத் துரிதப்படுத்துவது (phosphoric acid) பிரகாசித அல்லது தானியச்சத்தின் குணமாகும். மேலே கூறப்பட்டதிலிருந்து நிலத்தில் அந்தச் சத்துப்பொருள் 'பதமடைந்த' நிலையில் வேண்டும் அளவில் இல்லையென்றும், அது பதமடைந்து பயிருக்கு உணவாவதற்கு வெயிலின் உதவி தேவையாயுள்ளதென்றும் தெளிவாகத் தெரிகின்றது. சேர்க்கை உரத்தில் தேவையான தாதுப்பொருள் வேண்டும் அளவிலும், வேண்டும் நிலைமையிலும் கிடைக்கக்

கூடியதாக இருப்பதால் அவ்வுரங்கள் வைக்கப்பட்ட பயிர்கள், அவை வைக்கப்படாத பயிர்களைப் போன்று உணவுத் தட்டினால் பாதிக்கப் படமாட்டா. இன்னும் இதைப்போன்று பயிர்கள் பல நிலைமைகளையும் சமாளிக்கவேண்டி யிருப்பதால் மனிதர்களைப்போலவே அவைகளும் சொகுசானதும் முரட்டுத்தனமானதுமான வாழ்க்கைகளை நடத்துகின்றன வென்று சொல்வது சாலப் பொருந்தும்.

குளிர்நாட்டில் வளரக்கூடிய பயிர்வகைகளை வெப்பம் மிகுந்த நம் நாட்டிலும் பயிராக்கிவிடுகிறார்கள். கடல் மட்டத்திற்கு அதிகமான உயரத்தில் குளிர்நாட்டுக் கொப்பான வெப்ப நிட்ப நிலையையுடைய மலைச்சிகரங்களைப்பற்றி இங்குச் சொல்லவரவில்லை. கடல்மட்டத்திலிருந்து குறைந்த உயரத்தையும், வெப்பம் மிகுதியாயுள்ள இடங்களிலும் அவை பயிராக்கப்படுகின்றன. இத்தகைய இடங்களில் காப்பி, தேயிலை முதலியவற்றைப் பயிரிடுவோர் வெப்பத்தைத் தணிப்பத னிமித்தம் நிழல்தரும் மரங்களை அச்செடிகளுக்கு இடையிடையே வளரவிடுகிறார்கள். மற்றும் குளிர்நாட்டுக்குரிய பயிர்வகைகள் மலைநாடன்றி தளத்திலும் (Plains) பயிராக்கப்படுகின்றன. முதல்முதல் அவற்றைப் பயிரிடும்பொழுது வெப்பம் தாக்காவண்ணம நிலத்தில் எப்பொழுதும் ஈரம் இருக்கும்படியாகச் செய்வதுடன் வெயில் தாக்காமல் நிழல்தரும் செடிகளையும் இடையிடையே வளர்த்துவிடுகிறார்கள். பின்னும் காற்றின் வெப்பநிலையைத் தணிப்பதற்காக "Sprayers" மூலமாக நீரை மழைபோல் இறைக்கிறார்கள். முதல் முறையில் அப்பயிர்கள் அவ்வளவாகப் பலன்தருவதில்லை. அவைகளில் விதையெடுத்து அவ்விதைகளினின்றும் உண்டுபண்ணப்படும் பயிர்கள் கொஞ்சம் நல்ல பலனைத் தருகின்றன. இப்படியாக அப்பயிர்வகைகள் வெப்பம் மிகுந்த இந்நாட்டிலுள்ள பயிர்வகைகளுக்குச் சமமாக வளரும்படியான நிலைமையில் கொண்டுவரப்படுகின்றன.

இவற்றை யெல்லாம் சிந்திக்கும்பொழுது நெற்பயிரையும் ஏன் புன்செய் நிலங்களில் பயிராக்கக்கூடாது? நெல்வயல்களில் எப்பொழுதும் தண்ணீரைத்தேக்கி வளம் குறையும்படி ஏன் செய்யவேண்டும்? என்ற கேள்விகள் எழுகின்றன. அப்பயிரின்

தன்மையைப்பற்றிச் சிந்திக்கின் அது புல் இனத்தைச் சேர்ந்தது. மிகவும் சல்லியான வேர்களையுடையது. இதிலிருந்து மணற்பாங்கான நிலங்களே அதைப் பயிராக்குவதற்குத் தகுதியான இடமென எளிதாக ஊகிக்கக்கூடும். மற்றும் எந்தகைய கொடிய வெப்பத்தையும் தாங்கிக்கொள்ளும் இயல்புடையதாயிருக்கின்றது. அதேபோன்று எவ்வளவு காலமானாலும் தண்ணீருக்குள்ளே நின்று பலன்தரக்கூடியதாகவுமிருக்கின்றது. இவ்விருதன்மைகளையும் ஒருங்கே யடையக்கூடிய வேறொரு பயிரை நாம் காண வியலாது. உண்மையில் பூண்டுத் தொகுதிகளில் (தாவர வர்க்கங்களில்) இது ஒரு விநோதமான பயிரேயாகும். வெப்பமிக்குள்ள நாடுகளுக்கென்று இது தனியாகப் படைக்கப்பட்டுள்ளதென்றே எண்ணவேண்டி இருக்கின்றது. தண்ணீர் தட்டேற்படும் காலங்களில் கூடுதலான விளைவை இது தருவதை நாம் அநுபவத்தில் காண்பதால் எப்பொழுதும் இது தண்ணீருக்குள்ளேயே நிற்கவேண்டுமென்று சொல்வதற்கில்லை. இதனால் புன்செய் நிலங்களில் இதைப் பயிராக்கக் கூடுமென நிச்சயமாகக் கூறலாம். அஃதேபோல் மழைகாலங்களில் மழையின் காரணத்தால் சூரியவெப்பமுமில்லாமல் நிலம் சேறு யிருக்குங்காலத்தில் வேறுவித பயிர்களைப் பயிராக்க வழியின்றி நிலத்தைத் தரிசாகப் போட்டு வருவதைக் கெடவிடாமல் இதைப் பயிராக்கி நலம் பெறவும் செய்யலாம். இதில் நாம் ஆழ்ந்து சிந்திக்கவேண்டுவது என்னவெனில் மனிதனால் தடுக்கவியலாதபடி மழைகாலத்தில் நிலம் சேறாக்கப்படுவதைத் தவிர, மற்றக் காலங்களில் நன்செய் நிலங்களுக்கு எப்பொழுதும் தண்ணீரைத் தேக்கிவைத்து நிலவளம் குறையும்படி செய்யக்கூடாதென்பதே.

களிக்கால் நிலமே செழிப்பான நிலமென்பதும், அதுவே நெற்பயிருக்குத் தகுந்ததெனவும் பெரும்பாலாரின் எண்ணமாயிருந்து வருகின்றது. இதுவரையில் கூறப்பட்டிருப்பவைகளிலிருந்து இவ்வெண்ணம் தவறானதென்பதை எளிதிலறிந்து கொள்ளலாம். இதைப்பற்றி மேலும் ஆராய்வோம். களிமண்ணானது பாத்திரங்களுக்கு ஒப்பாயிருக்கின்றது. அதாவது அது ஈரமாக இருந்தாலும் அதை நன்றாகப் பிசைந்து பாத்திரமாகச் செய்து அதில் தண்ணீரை விட்டால் அத்தண்ணீர் புறத்தே

சுவராது அப்பாத்திரத்திலேயே தேங்கி நின்றுவிடும். இத்தகைய தன்மை வாய்ந்த மண்ணில் புல் இனத்தைச் சேர்ந்ததும் சல்லி வேர்களை யுடையதுமான நெற்பயிர் எவ்விதம் வேரூன்றி செழித்து வளரமுடியும்? நிலத்தைப் போதுமான அளவில் சேருக்காவிட்டால் இப்பயிர் களிமண் நிலத்தில் வளரவே செய்யாது. அதுமாத்திரமல்ல, ஒருமுறை உண்டாக்கப்பட்ட சேறானது கெட்டுப்போகாம லிருக்கும்வண்ணம் பாதுகாக்க அந்நிலத்தில் எப்பொழுதும் தண்ணீரைத் தேக்கி வைக்கவேண்டிய கட்டாயம் உண்டாகின்றது. இன்றேல் களிமண்ணானது கல் அல்லது ஓடுபோல் இறுகிக் காய்ந்துவிடும். அவ்விதம் நேரின் நெற்பயிரின் சல்லி வேர்களும் அதில் ஒட்டிக்கொண்டுவிடும். புழுதியில் விதைக்கப்பட்ட பயிரைவிடச் சேற்றில் நடப்பட்ட பயிர் தண்ணீர் தட்டான காலங்களில் விரைவில் பட்டுப்போவதை அனுபவத்தில் காணலாம். முற்காலங்களில் நீடித்த மழைகாலத்தின் காரணமாய் வேறு வழியின்றி நிலத்தைச் சேருக்கிப், பின் அச்சேற்றை அப்பயிர் அறுவடையாகும் வரையில் நிலைத்திருக்கச் செய்ய; எப்பொழுதும் தண்ணீரைத் தேக்கிவந்ததை அதன் கருத்தைச் சிறிதும் சிந்தியாமல் அப்படியே பின்பற்றி வருவதால் நலம்பெற முடியுமா?

மற்றும், முற்காலங்களில் ஒருமுறையே இப்பருவம் நடத்தப் பட்டுவந்தது. கார், பிசானம் எனப்படும் இருபருவகாலங்களில் பிசானத்தில்மட்டுமே சேடையில் நடும் வழக்கம் இருந்துவந்தது. காரில் புழுதியில் விதைப்பதே வழக்கம். இவ்வழக்கம் இப்பொழுதும் பலவிடங்களில் இருந்துவருவதையும் காணலாம். ஆனால் முன்போல் நீடித்தகாலம் மழையில்லாத இக்காலத்தும் ஒரு முறையல்ல, இருமுறையும், மும்முறையும்கூடக் கோடையில் பயிராக்குபவர்களைப்பற்றி என்னவென்று சொல்வது?

இப்படிச் சொல்வதிலிருந்து நெற்பயிரைப் புன்செய் நிலங்களில் முற்றிலும் மழையினுடைய ஆதரவில் அல்லது கிணறைத் தண்ணீர்பாயும்வழியாய்க் கொண்டுள்ள நிலங்களில் பயிராக்க வேண்டுமென்று சொல்வதாக எண்ணிவிடலாகாது. தற்காலத்தில் நெற்பயிரின் கூடுதலான விளைவின் மதிப்பு, கிணற்றிலிருந்து தண்ணீர் இறைப்பதற்கு ஆகும் செலவில் நாலில் ஒரு

பகுதிக்கேனும் ஈடாகாதென்பது எளிதி லறியக்கூடியது. நன்செய் நிலங்களைப் புன்செய் நிலங்களுக் கொப்பாகப் பண்படுத்தித் தேவையான காலங்களில் தேவையான அளவில் தண்ணீர்ப் பாய்ச்சிக்கொண்டு வரவேண்டு மென்பதே மேலே கூறப்பட்டதின் கருத்தாகும்.

தாதுப்பொருள்கள் வேர்த்தாது, தழைத்தாது, தானியத்தாது என மூவகைப்படுமென்றும், ஒவ்வொன்றும் முறையே பயிர்களின் ஒவ்வொரு பகுதியை வளர்க்கின்றன வென்றும் முன் கூறப்பட்டது. தழைச்சத்து தழைகளை வளர்க்கிற தென்று சொல்வதனால், மற்ற வேர்த் தானியங்களில் இத்தாதுப் பொருள்கள் இல்லையென்பது பொருளல்ல. செடியின் ஒவ்வொரு பகுதிக்கும் இம்மூவகைத் தாதுப்பொருள்களும் இன்றியமையாதவைகளே. குறிப்பாகச் சொல்லின் எந்தத் தாதுப்பொருள் பயிரின்! எந்தப் பகுதியை வளர்க்கிறதென்று சொல்லப்படுகிறதோ, அப்பகுதியில் அத்தாதுப்பொருள் பெரும்பகுதியாக உள்ளதென்பதே கருத்தாகும். இதைப்பற்றிப் பின்னால் விரிவாகக் கூறுவோம். இப்பொழுது எடுத்துக்கொண்ட பகுதியை விளக்கப்புகின் எடுத்துக்காட்டாகக் காய்கறிப் பயிரை எடுத்துக்கொள்வோம். தானியத்தாது விளைவின் அளவை அதிகப்படுத்து மென்று கூறப்பட்டது. அதனுடன் காய்கறிகளின் விதைகள் பெரும்பகுதி தானியத்தாதுவினு லாக்கப்பெறுவன. மற்றத் தோல் சதைப்பற்று இவைகள் உப்புத்தாது ஆம்பல்தாது இவைகள் நிறைந்தவைகள். காய்கறிகளில் மிகுதியாயிருப்பதும் மனிதர்களுக்குப் பயன் படக்கூடியதுமான பகுதி சதைப்பற்றே. இது பெரும்பகுதி வேர்த்தாதும், சிறுபகுதி தழைத்தாதும் சேர்ந்து அமைக்கப் பெறுவது. ஆனால் நெல், கேழ்வரகு, சோளம், கம்பு முதலியவைபோன்ற தானியங்களின் நிலைமை வேறு. அத்தானியங்கள் முழுதும் காய்கறிகளின் விதைகளுக்கு ஒப்பானவை. இதனால் அத்தானியங்கள் தானியத்தைப் பெரும்பகுதியாக உடையவை யென்பது எளிதில் ஊகிக்கக்கூடியதா யிருக்கின்றது.

இப்பொழுது இத்தானியத் தாதானது காற்று முதலிய இயற்கைப் பொருள்களினின்றுவது அல்லது இயற்கை உரங்களினின்றுவது ஏராளமாக அடையக்கூடியதல்ல; எனவே இத்

தாதுப்பொருளையுடைய தனியான உரவகைகளை நிலத்திற்குப் போதுமான அளவில் இட்டாலன்றிப் பயிரின் இப்பகுதியின் விளைவைப் பெருக்க முடியாதென்பது தெளிவாக அறியக் கிடக்கின்றது. இந்த நிலையில் நிலத்தில் இத்தாதுப்பொருளை விர்த்தி செய்யும் புழுவகைகள் பெருகவும் வேலைசெய்யவும் இடமன்னியில், எப்பொழுதும் தண்ணீரைத் தேக்கிவைப்பதனால் உண்டாகும் கெடுதல்களுக்கு அளவு கூறமுடியுமா? இக்காரணங்களாலேயே தானியப்பயிர்களின் விளைவானது இவ்வளவென்று நம் தென்னாட்டில் நிதானிக்கப்பட்டுள்ளது. 8 செண்டு பரப்புள்ள குறுணி நிலத்தில் கிடைக்கக்கூடிய நெல்பயிரின் கூடுதலான விளைவின் மதிப்பு $1\frac{1}{2}$ கோட்டையாகும். சில இடங்களில், குறைந்த பரப்புள்ள நிலத்தில் 2 கோட்டைவீதம் கிடைத்திருக்கின்றது. ஆனால் இதே பரப்புள்ள நிலத்தில் முப்பதுமுதல் எண்பது கோட்டை நெல் கிடைக்குமானால், அதைப்பற்றி என்னவென்று சொல்வது. இது நம்பத்தகாத காரியமென்றும், செப்பிடுவித்தை யென்றும் எளிதாகப் பதில் கூறிவிடலாம். குறுணி எள் விதைத்ததில் குறுணி பொன் நாணயங்கள் கிடைத்தனவென்று சொல்வதைப் போன்றே அதிசயிக்கத்தக்க காரியமாக நம் நாட்டில் இப்பொழுது கருதப்படுமென்பதில் சந்தேகமில்லை.

உண்மையில் "சப்பா"னில் மேலே கண்டபடி விளைவு கிடைக்கின்றது. "சாவா" தீவில் ஒரு புகையிலைச்செடி 9 அடி உயரம் வளருவதாகப் பள்ளிக்கூடப் புத்தகங்களில்கூடக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. 'சப்பான்', 'சாவா' முதலிய இடங்களெல்லாம் எரிமலையினு லாக்கப்பட்ட தீவுகள். எரிமலைமண் மிக்க வளமுடையதென்பது சாமானியமாக யாவரும் அறியக்கூடியது. அதிலும் 'சப்பா'னில் பயிர்செய்வதில் மிக்க உழைப்பு எடுத்துக்கொள்ளுகின்றனர். பயிரிடும் நிலத்தின் பரப்பு அங்கு நிதானிக்கப்பட்டிருக்கின்றது. வெளிநாட்டினின்றும் எவ்வளவு கூடுதலான விலையையும் பொருட்படுத்தாமல் உரவகைகளை வாங்கிக்கொள்கிறார்கள். இந்தியாவிலிருந்து பிண்ணாக்கு, மீன் உரம், எலும்புத்தூள் முதலியவைகளெல்லாம் 'சப்பா'னுக்கே ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கைத்தொழிலில் 'சப்பானியர்கள்' எவ்வளவு அறிவு படைத்துள்ளார்களோ அதே அறிவு வேளாண்மையிலும் அவர்கள் கொண்டிருக்கின்றனர். அதன் காரணமாக,

அவர்கள் கொல்லனிடம் 'ஊசிவிற்பது' போல் நெல்விளையும் நாடாகிய நமது தேசத்தில் கப்பல் கப்பலாக நெல், அரிசி முதலி யவைகளை இறக்குமதி செய்து மிகுதியான ஊதிய மடைகின் றனர்கள். இவற்றை யெல்லாம் சிந்திக்கின் நமது நாட்டில் வேளாண்மை பிற்போக்கான நிலைமையை யடைந்ததின் உண் மைக் காரணம் இன்னதெனை வெள்ளிடை மலைபோல் விளங்கும்.

உணவருந்த நம் நாட்டில் விருந்தாளிகளை யெவ்விதம் உபச ரிக்கின்றோமோ அவ்விதமே 'சப்பானியர்' மலங்கழிக்க உபச ரிக்கின்றனர். கக்கூசுகளை அவர்களே சுத்திசெய்து மல உரம் சேகரிக்கின்றனர்கள். மலத்தைக் குடங்களில்போட்டுத் தண்ணீர் விட்டு நன்றாகக் கலக்கி அதை நிலங்களுக்குத் தண்ணீர் பாயும் பொழுது அத்தண்ணீரில் சிறிது சிறிதாக ஊற்றிப் பயிர்களுக்கு உரமாகும்படி செய்கின்றனர்கள். இப்படிச் செய்வதில் நம்மைப் போல் அவர்கள் அருவருப்புக் கொள்வதில்லை. இதனால் சுகா தாரவழி செவ்வனே ஏற்படுவதுடன் சிறந்த உரப்பொருளும் கிடைக்கின்றது. மலம் வேர்ச்சத்து மிகுதியாயுள்ள எருவாகும். கிழங்கு, காய்கறி, பழவகைகள் முதலிய பயிர்களுக்குச் சிறந்த எருவாக உதவும். புகையிலை போன்ற இலைப் பயிர்களுக்கு உர மாக வழங்கினால் அவ்விலைகள் தடித்து அதிக நிறையுள்ளவைக ளாக இருக்கும் சப்பானியர் அதை உரமாகத் தயாரிப்பதைவிட, வேறொரு வழியில் அதைச் சிறந்ததாகச் செய்யலாம். பெரிய தொட்டிகளில் மலங்களைப்போட்டு தண்ணீர்விட்டு நன்றாகக் கலக்கி அத்தண்ணீரைச் சாம்பல் அல்லது அதுபோன்ற தண் ணீரை உறிஞ்சும் பொருள்களில் ஊற்றி வெயிலில் உலரவைத்துப் பைகளில்போட்டு மூட்டையாக்கி வைத்துக்கொண்டு பின்பு வேண்டும் காலங்களில் நிலத்திலிடலாம். இப்படிச் செய்வதில் நிலத்திலிடுவதற்குமுன் சேமித்து வைத்திருக்கும் காலத்தில் அத னின்றும் துர்நாற்றம் எழாது. ஆனால் நிலத்திற்கு வழங்கப்படு வதன்முன் ஈரம்படாமல் பார்த்துக்கொள்வது முதன்மையாகும்.

நெற்பயிரைப் பற்றியவரையில் கீழ்க்கண்ட முடிவுக்கு வர லாம். (1) கதிரவன்வெப்பம் மிகுதியாகவேண்டும். (2) மண் எப் பொழுதும் பொலுபொலுப்பாய் இளக்கமா யிருக்கவேண்டும். (3) அடிக்கடி தண்ணீர் வேண்டும். (4) தோட்டக்கால் பயிர்களைப்

போன்று தேவையான அளவில் தண்ணீர் பாய்ந்தால் போதுமானது. (5) தடுக்க வியலாத காரணத்தால் தேவைக்கதிகமாகத் தண்ணீர் தேங்கி நின்றுவிட்டாலும் அதனால் பயிருக்குக் கெடுதியில்லை. (6) தானியத்தாது மிகுதியாயுள்ள உரவகைகள் கண்டிப்பாகச் சேர்க்கப்படவேண்டும். இவ்வளவு பகுதிகளையும் சரிவரச் சிந்தித்தாலன்றி நெற்பயிரில் ஊதியமடைவது இயலாத காரியம்.

நன்செய் நிலங்களில் இருமுறையும் நெற்பயிரைப் பயிராக்குவதனால் நிலவளமும், தானியத்தாதும் பெரிதும் குறைந்துவிடுவதாகவும், தானியத்தாதுவின் குறைவைப் பூர்த்திசெய்வது கடினமென்றும், மற்றும் நெற்பயிரில் கூடுதலான ஊதியம் பெறுவதற்கு வழியில்லாததால் ஒருமுறை மாத்திரம் நெற்பயிரைப் பயிர் செய்துவிட்டு அடுத்தமுறை ஊதியம் தரத்தக்க இதர பயிர்வகைகளைப் பயிர்செய்யலாமெனவும், அவ்விதம் செய்வதில் விளைவின் பகுதி, மாறத்தக்கதாகச் செய்தல்வேண்டுமெனவும் விவசாய இலாகாதார் கூறுகின்றனர். ஆழ்ந்து சிந்திக்கின் இந்த யோசனை பொருத்தமானதென்பதும், நன்மை தரத்தக்கதென்பதும் எளிதில் புலப்படும். மழைகாலமல்லாத 'காரில்' புழுதியில் நிலத்தைப் பண்படுத்தி நெற்பயிரேற்றி அதன் அறுவடைக்குப் பின், மழைகாலம் ஆரம்பித்த உடனேயோ அல்லது அதற்கு முன்னரோ நிலங்களில் பசுந்தாள் உரப்பயிர்களை வளர்த்து நல்ல மழைகாலத்தில் அந்நிலங்களை உழுது, தண்ணீரைத்தேக்கி அவ்வுரப்பயிர்களை மக்கவைத்துப் பின் மழைகாலம் கழிந்ததும் வேறு பயிர்களை இடுவதனால் நிலவளம் குன்றுமலிருப்பதுடன் மிகுதியான ஊதியமும் அடையக்கூடும்.

முற்காலங்களில் காடுகளின் மிகுதியாலும், எங்கும் புல்தரைகள் மிகுந்திருந்ததாலும், ஆறுகள் இப்பொழுதுள்ளதைப் போன்று கெடுபள்ளத்திலோடாமல் நிலங்களுக்குச் சமதளத்தில் அல்லது சிறிது ஆழத்தில் ஓடிக்கொண்டிருந்ததாலும், மழைகாலத்தில் அவ்வாறுகளில் நீர்ப்பெருக்கெடுத்து இருகரைகளிலும் புரண்டோடி நிலங்களில் தங்கி நின்றதாலும், அத்தண்ணீரில் கரைந்துள்ளதும், அடித்துக்கொண்டு வரப்படும் உரப்பொருள்களும் அந்நிலங்களில் வண்டலாகப்படிந்து செழிப்பாக்கின. ஆறுகளில் இப்பொழுதைப்போன்று ஆதிகாலங்களில் அதிவேக

மாகத் தண்ணீர் ஓடாமல் மெதுவாகவே சென்று கொண்டிருந்த தென்பதையும் நினைவுகூறவேண்டும். இக்காரணத்தால் எரு விடாமலே ஆற்றோரமுள்ள நிலங்கள் வளமடைந்துவந்தன. இக் காலத்தில் நிலைமை முற்றிலும் மாறுபட்டதா யிருக்கின்றது. எனவே நிலங்களுக்குத் தக்கபடி எருவிட்டால் மாத்திரமே நில வளம் குறையாமல் தடுக்கவும் கூடுதலான விளைவு அடையவும் கூடும்.

நிலத்தை நன்றாய் உழுவதற்கு இரும்புக் கலப்பையை விவ சாய இலாக்காதார் சிபார்சு செய்கிறார்களென்றும், அக்கலப் பைகளைக் கையாடுவத னிமித்தமாய்ச் செலவு பெருவாரியாக ஏற் படுகிறதென்றும் சொல்வதில் பொருளேயில்லை. இக்காலத்திய மண்ணின் தன்மைக்கு இரும்புக் கலப்பைகளன்று மரக்கலப்பை கள், அவை எவ்வளவு கடினமான மரத்தால் செய்யப்பட் டிருந்தபோதிலும் இரண்டு மூன்று உழவுகளில் பாதியாகத் தேய்ந்துபோவதைக் காண்பதினின்றும், உதவா வென்பதை எளிதி லறிந்துகொள்ளலாம். நிலங்களுக்குத் தகுந்தபடி எரு விடாமலும், அதனுடன் உழுவதற்கும் செலவாகிறதென்று சொன்னால் கிடைக்கும் பலனும் அதற்குத் தகுந்தபடியே இருக்கு மென்பதில் சந்தேகமே யில்லை.

இன்பம்

“ இன்பந்தேடி இயங்கு மாந்தர்காள்
இன்ப மீர நெஞ்சிற் றேடாது
பொன்னிற்றேடி புவியி லுழல்வீர்
பொன்னின் மட்டு மின்ப முண்டாமோ?”

“ நீரிலா நிலந்தனி னெற்பயிர் விளையுமோ
ஈரமி னெஞ்சி லின்பம் விளையுமோ
ஈரநெஞ் சர்க்கே யின்ப மியல்பாம்
ஈரமினெஞ் சர்துன் புறுவ தியல்பே.”

மிர்சா கண்ட காட்சி

காழி. சிவ. கண்ணுசாமி, பி. ஏ.

கீழைநாட்டு ஏட்டுச்சுவடிகள் பல என்னிடம் இருக்கின்றன. கெய்ரோ மாநகர்க்கு யான் சென்றிருந்தகாலை அவை எனக்குக் கிடைத்தன. அவற்றுள் "மிர்சா கண்ட காட்சிகள்" என்னும் சுவடியும் ஒன்று. அதனை யான் பன்முறை திரும்பத் திரும்பப் படித்து இன்புற்றிருக்கிறேன்; பொதுமக்களை மகிழ்விக்க வேறு கட்டுரையொன்றும் கிடைக்காதபோது, அக்காட்சிகளை ஒவ்வொன்றாக வெளியிடக் கருதியுள்ளேன்; அதன்படி, முதற்காட்சியை இப்பொழுது தொடங்கி நேருக்குநேர் மொழி பெயர்த்துத் தருகிறேன் :—

"ஐந்தாம் பிறைநாள். என் முன்னோர்களைப் பின்பற்றி நானும் அந்நாளைச் சிறப்புநாளாகவே எப்பொழுதும் கொண்டாடி வந்துளேன். அதுபோலவே, இன்றும் காலையில் எழுந்து குளித்து முழுகிக் கடவுளைத் தொழுதுவிட்டு, பாக்தாத் பெருங் குன்றுகளின்மேல் ஏறினேன்; இன்றைப்பொழுதை அக்குன்றுகளின்மேலேயே கடவுள் நினைவினும், தொழுகையினும் கழிக்கக் கருதினேன். மலை முகட்டில் மென்காற்று நன்கு வீசிற்று. அதன் நலத்தைத் துய்த்துக்கொண்டே வாழ்க்கைநிலையாமையைக் குறித்து ஆழ்ந்ததொரு சிந்தனையில் மூழ்கிவிட்டேன். எண்ணங்கள் ஒன்றன்மேல் ஒன்றாய்க் கிளைத்தெழுந்தன. இறுதியில், "ஐயமே யில்லை; மனிதன் என்பவன் வான்நிழலே; வாழ்க்கை என்பது ஒரு கனவே!" என்று யான் வாய்விட்டுக் கூறினேன்."

"இந்நிலையில், சற்றுத் தொலைவிலிருந்த மற்றொரு மலைமுகட்டின்மேல் என் பார்வை சென்றது. ஆங்கு, இடையருடை தரித்துக் கையிற் சிறியதோர் இசைக்கருவியுடன் ஒருவர் நின்று கொண்டிருப்பதை யான் கண்டேன்; அவரை உற்றுநோக்கினேன். உடனே, அவர் இசைக்கருவியைத் தம் வாயில் வைத்து ஊதத் தொடங்கினார். ஆ! எத்துணை இனிமையான ஓசை! எத்துணைவகைப்பட்ட இனிய பண்கள்! அவற்றின் சொல்லொணா

இனிமையால் என் நெஞ்சம் உருகிக் குழைந்தது. பண்களெல்லாம் புதியனவாகத் தோற்றின; அவை போன்றவற்றை யான் அதுகாறும் கேட்டிலேன். சான்றோர்கள் இவ்வுலகை நீத்துத் துறக்கவுலகம் புகுங்காலை, இறப்புக்காலத் துன்பச் சுவடுகள் தேய்வுற்று அவர்கள் துறக்க இன்பந் துய்த்தற்கருதி, தேவர்கள் மிழற்றும் பேரின்பப் பண்களோ அவை என்று கருதினேன். நினைக்க நினைக்க என் மனம் பெருமகிழ்ச்சியால் நெகிழ்ந்து பாகென உருகிற்று.''

"எனக்கு முன்னே தோன்றிய பாறை ஒரு மலைமுனியின் உறைவிடம் என்றும், அவ்வழிச் செல்வோரை அம்முனி இன்னிசையால் இன்புறுத்தி வருவது வழக்கமென்றும், ஆனால் அதுகாறும் எவர் கண்ணினும் அது தென்பட்டிலது என்றும் பன்முறை சொல்லக் கேட்டிருக்கிறேன். இங்ஙனம் பன்னரிய இன்னிசையால் என் அகங்குளிர்ந்து மகிழ்ச்சிமீதூரச் செய்த அதனுடன் உரையாட நேர்ந்தால் இன்னும் எத்தகைய இன்பம் எய்துமோ என்று வியப்புடன் அதனை உற்றுநோக்கிக் கொண்டிருந்தேன். அப்பொழுது அஃது என்னைத் தன்னருகே வருமாறு கைகாட்டி அழைத்தது. பெரியாரைக் காணப் புகுமொருவன் எவ்வளவு அடக்க வொடுக்கத்துடன் செல்வானோ, அவ்வளவு அடக்க வொடுக்கத்துடன் மெல்ல மெல்ல யான் அதனருகே சென்றேன். ஏற்கெனவே அமிழ்தினுமினிய இன்னிசை மாந்தி மன நெகிழ்ச்சியுற்றிருந்த யான் அதனை யணுகியதும் அதனடிகளில் வீழ்ந்து அழுதேன். இரக்கந் ததும்ப அஃது என்னைப் பார்த்து அன்புடன் முறுவலித்தது. என்னுள்ளிருந்த அச்சமும் நடுக்கமும், உடனே அகன்றோடின; நெடுநாட் பழகியது போன்றதொரு நட்புணர்ச்சி என்னுள் தோன்றிற்று. என்னை அது மேலே தூக்கி நிறுத்தி, என் கைகளைப் பிடித்துக் கொண்டு, "மிர்சா, நீ தனியேயிருந்து வாய் விட்டுக் கூறியவற்றை யெல்லாம் நான் கேட்டேன். என்னுடன் வா!'' என்று அழைத்தது.''

"அம் மலையடுக்கின் மிக உயர்ந்த முகட்டிற்கு என்னை அது நடத்திச்சென்று, அதனுச்சியில் என்னை இருத்தி, "கீழ்ப்புறம் பார்! பார்த்து என்னென்ன காண்கிறாய் என்பதைச்

சொல்!" என்று பணித்தது. "பரந்த தொரு பள்ளத்தாக்கு! அதனூடே ஊழிவெள்ளம் பொங்கியெழுந்து சுருண்டு சுருண்டு அலைமோதிச் செல்கிறது!" என்றேன். "நீ காணும் பள்ளத் தாக்கே துன்பப் படுகர்; அதனிடைக் காணும் வெள்ளமே காலப் பேரலையின் ஒரு பகுதி" என்று அது விளக்கிற்று. "அந்த அலை திரண்டதொரு பனிப் படலத்தினின்றுந் தோன்றி, மற்றொருபுறம் திரண்டு காணும் வேறொரு பனிப் படலத்தினுட் சென்று மறைவதேன்?" எனக் கேட்டேன். "நீ பார்ப்பது, காலம் என்று சொல்லப்படும் எல்லையற்ற பொருளின் ஒருபகுதி. அது ஞாயிற்றினால் வரையறுக்கப்படுவது; உலகந் தோன்றிய போது உடன் தோன்றி, மறையும்போது உடன் மறைவதாகும். இருகோடியிலும் பனிப்படலங்களை எல்லையாகவுடைய கடலனைய இவ்வெள்ளப் பெருக்கை இப்பொழுது நன்றாகக் கூர்ந்து நோக்கி, நீ காண்பதைக் கூறு!" என்று அது விடையளித்தது. "அதோ! அவ்வெள்ளப் பெருக்கினிடையே ஒரு பாலம்!" என்று வியப்புடன் கூறினேன். "ஆம், நீ பார்ப்பது மனித வாழ்வு என்னும் பாலமே. அதனைக் கூர்ந்து கவனி!" என்றது அம்முனி. அமைதியுடன் அப்பாலத்தைக் கவனித்துப் பார்த்தேன். அதனடியிலிருந்த கண்கள் ஒவ்வொன்றாய்ப் புலப்பட்டன. அவற்றுள் எழுபதுக்கு மேற்பட்ட கண்கள் சிதைவுறாமல் முழுமையாகக் காணப்பெற்றன; உடைந்து சிதைந்த கண்களும் சில காணப் பெற்றன. சிதைந்தவையும் சிதறாதவையுமாகச் சேர்ந்து மொத்தம் நூறு கண்கள் இருக்கலாம். ஒவ்வொன்றாக எண்ணத் தொடங்கினேன். அப்போது மலைமுனி, தொடக்கத்தில் அப்பாலத்திற்கு ஆயிரங்கண்கள் இருந்தனவென்றும், பெரியதொரு வெள்ளத்தில் அதன் ஏனைய கண்கள் அடித்துக்கொண்டு போகப்பட, இப்பொழுது காணப்படுகின்ற பாழ்நிலையிலே அப்பாலம் எஞ்சி நிற்கின்றதென்றும் விளக்கிற்று; விளக்கியபின், "அப்பாலத்தின்மேல் இன்னும் என்னென்ன காண்கிறாய்? சொல்!" என்று பணித்தது. "திரள் திரளாய் மக்கள் அதன் மேற் சென்று கொண்டிருக்கின்றனர். அதன் இரு கோடிகளிலும் இரண்டு கார்முகில்கள் தொங்கவிட்டாற்போற் காண்கின்றன" என்றுரைத்து, இன்னும் கூர்ந்து நோக்கினேன். அப்பாலத்தின்மீது சென்று கொண்டிருந்த மக்களிற் பலர்

அதனூடே தவறிவிழுந்து கீழே ஓடிக்கொண்டிருந்த வெள்ளத்தினிடைப்பட்டுத் தத்தளித்து மூழ்கினர். ஆ! அப்பாலத்தின்மேல் மறைவாய்ப் பொருத்தப்பட்ட கள்ளக் கதவுகள் எண்ணிறந்தனவன்றோ காணப்படுகின்றன! பாலத்தைக் கடப்போர் தெரியாமல் அக்கதவுகளின்மேல் காலை வைத்தார்களோ யில்லையோ கதவுகள் திறந்து கொள்கின்றன; அவற்றினூடு அவர்கள் பொத்துப் பொத்தென விழுந்து நீருள் மறைகின்றனர்! பாலத்தின் தலைப்பில் இத்தகைய கள்ளப்படுகுழிகள் மிக நெருக்கமாக அமைக்கப்பட்டிருந்தன. அங்குக் கவிந்துகொண்டிருந்த கார் முகிற் படலத்தைக் கிழித்துக்கொண்டு விரைந்து உட்புகுந்தவர்களிற் பலர் அப்படுகுழிகளில் விழுந்து மாய்ந்தனர். பாலத்தின் நடுப்பகுதியில் அக்கள்ளப் படுகுழிகள் அத்துணை நெருக்கமாகக் காணப்பட்டில. ஆனால், சிதைவுறாமல் முழுமையாக விருந்த கண்களின் இருமருங்கிலும் அவை மிக நெருக்கமாகப் பொருத்தப் பெற்றிருந்தன. சிதைந்து பழுதுபட்டிருந்த கண்கள்மீதும் சிலர் நடந்து செல்லாமலில்லை. ஆனால், அவ்வாறு சென்றவர்கள் மிகச் சிலரே. அவர்கள் தள்ளாடித் தள்ளாடிச் சென்றுகொண்டிருந்தனர்; எனினும் நெடுவழி நடந்துவந்த களைப்பால் அவர்கள் ஒவ்வொருவராய்க் காலோய்ந்து உள்வீழ்ந்து மறைந்தனர்."

"வியக்கத்தக்க இப்பால அமைப்பையும், அதன்கண் காணப்படுவனவற்றையும் எண்ணி யெண்ணிச் சிறிது நேரங் கழித்தேன். களிப்புங் கொண்டாட்டமுமாய்ச் சென்றுகொண்டிருந்த மக்களிற் பலர் இவ்வாறு எதிர்பாராவண்ணம் விரைவில் விழுந்து மாய்வதையும், விழுங்கால் தப்பித்துக் கொள்ளக் கருதிப் பக்கத்தில் தட்டுப்படும் ஒவ்வொரு பொருளையும் கைப்பற்றத் தாவுதலையும் கண்டு என் நெஞ்சம் ஆறாத் துயரமுற்றது. ஆழ்ந்த நினைவுடன் வானத்தை அண்ணாந்து நோக்கிக்கொண்டிருந்தோர் சிலரும் இடையிடையே அப்படுகுழிகளில் தவறி வீழ்ந்து மறைந்தனர். தம் எதிரில் மினுக்கிட்டுப் பகட்டிச் செல்லும் நீர்க்குமிழி போன்ற நொய்ய பொருள்களைத் திரளான மக்கள் ஓடிப் பிடிக்க முயன்றனர்; அவற்றை இனிப் பற்றிவிடலாம் என்ற நம்பிக்கையோடு அவர்கள் விரைந்துதொடர்கையில் ஐயகோ! வழுக்கி வீழ்ந்து மாய்ந்தனர். ஒரே குழப்பமாயிருந்த இந்த நிலையில், கைகளிற் சிலர் கொடுவாளும், சிலர் சிறுநீர்க்

குடுவைகளும் ஏந்தியவராய்ப் பாலத்தின்மீது அங்கு மிங்கும் ஓடி, கள்ளக் கதவுகளை நீக்கி நேர்வழிச் சென்று கொண்டிருந்த மக்களிற் பலரை வலிய அக்கதவுகளிடையே பிடித்துத் தள்ளினர்; இன்றேல் அம்மக்கள் பிழைத்துப் போயிருப்பர்."

"வாழ்க்கைத் துயர்க்கடலை இங்ஙனம் நோக்கி நோக்கி நெஞ்சழிந்து கொண்டிருந்த என்னைப் பார்த்து, "போதும்! நெடு நேரமாய் அப்பாலத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாய். உன் பார்வையை அப்பாற்செலுத்தி உனக்கு விளங்காத பொருள்கள் வேறெவையேனும் காணப்படுகின்றனவா என்று பார்த்துச் சொல்! என்று மலைமுனி கூறிற்று. பார்வையைப் பாலத்தின் மேலே உயரச் செலுத்தினேன். "பறவைக் கூட்டங்கள் ஓயாது பறந்து பறந்து வட்டமிட்டுக் கொண்டிருப்பதும், இடையிடையே பாலத்தின்மீது வந்து தங்கிச்செல்வதும் எதைக் குறிக்கின்றன? எருவை, கழுகு, அண்டங்காக்கை, கடற்காக்கை, இன்னும் பிணந்தின்னிப் பறவைகள் பல பறக்கின்றன. அவற்றினிடையே சிறகு படைத்த சிறுவர்கள் பலர் பறந்துவந்து பாலத்தின் நடுவிலுள்ள கண்கள்மீது உட்காருகின்றனர். இவை யெல்லாம் குறிப்பதென்ன?" என்று கேட்டேன். "இவைதாம் மக்கள் வாழ்வைக் குலைக்கும் பொறாமை, பேராசை, மூட நம்பிக்கை, சோர்வு, காமம் முதலியவையும், அவைபோன்ற துன்பக் கவலைகளுமாம்" என்று அது விடை பகர்ந்தது."

"இதைக்கேட்டு நான் பெருமூச் செறிந்தேன். "ஐயோ! மனிதப் பிறவி வீண்தானு! துன்பத்திற்கும் சாவிற்கும் இரையாவதற்கா மனிதன் பிறக்கிருன்! பிறந்ததுமுதல் இறக்கும்வரையில் துன்பமே யுழந்து நமன் வாய்ப்பட்டழிவதுதானே மனிதப் பிறவி!" என்று கவன்று கூறினேன். இதைக்கேட்டு மலைமுனிக்கு இரக்கம் பிறந்ததுபோலும்! "துயர்மிகும் இக்காட்சியைப் பார்ப்பதொழி! அழியாப் பெருநிலை எய்தவேண்டி உலகில் மனிதனுய்ப் பிறந்த ஒருவன் முதற்கண் உறும் துன்ப நிலையை நீ பார்த்தது போதும்! தலைமுறை தலைமுறையாய்த் தன்னகத்தே விழுந்துமாயும் எண்ணற்ற மக்களைச் சுமந்து செல்லும் இந்தக் காலப்பேரலை சுருண்டு சுருண்டு மோதிச்சென்று மறையும் காரிருட் படலத்தின்மீது நின் பார்வையைச் செலுத்து!"

என்று ஏவிற்று. ஏவியவண்ணமே யான் திரும்பி நோக்கினேன். —அம் மலைமுனி தன் மாயத்தினால் என் கண் பார்வைக்குப் புதியதோர் ஆற்றலைத்தான் அளித்ததோ, அன்றி, பார்வை ஊடுருவிச் செல்லாதவாறு திணிந்திருந்த அவ்விருட் படலத்தின் செறிவைத்தான் குலைத்து விட்டதோ, யாதோ அறியேன்—நான் பார்த்தபோது அப்பள்ளத்தாக்கின் எதிர்க்கோடி திறப்புண்டது. கங்கு கரையற்ற பெருங்கடலொன்று சேய்மையில் புலப்பட்டது; அதன் நடுவே ஒரு கருங்கற்பாறை நெடுக ஊடறுத்துச் சென்றது; அதனால் அக்கடல் இரண்டு சம பகுதிகளாகப் பிரிக்கப் பட்டிருந்ததுபோற் காணப்பட்டது. ஒரு பகுதியில் இன்னும் கார்முகிற் படலம் கவிந்து மறைத்தபடியே இருந்தது. ஆகவே, அதனுள் என்ன இருக்கிறதென்பது எனக்குத் தெரியவில்லை. மற்றொரு பகுதியோ ஒரு பரந்த கடல்! கணக்கற்ற சிறு சிறு தீவுகள் அதனிடைப் பொலிந்தன. பழங்களும் பூக்களும் நிரம்பியவாய்க் காணப்பெற்ற அத்தீவுகளினிடையே மின்னி மிளிரும் ஆயிரங் குடாக்கள் அழகுசெய்து விளங்கின. அங்குள்ள மக்கள் மிகச்சிறந்த நல்லுடை தரித்து, நறுமலர்க்கண்ணி சூடி, மரமடர்ந்த பொழில்களூடே யுலாவியும், நீரூற்றுகளின் மருங்கில் விரும்பி யமர்ந்தும், நாண்மலர்கள்மீது படுத்தும் பொழுதுபோக்கக் கண்டேன். பாடும் பறவைகளின் ஒலியும், வீழும் அருவிகளின் ஒலியும், மக்கள் குரலொலியும், இசைக் கருவிகளின் இன்னொலியும் ஒன்றுடனொன்று மயங்கி விரவிப் புதியதோர் இன்பப் பேரொலியைக் கிளப்பின. களிதுளும்பும் இக்காட்சியைக் கண்டு நான் பெருமகிழ்ச்சி யுற்றேன். நேரே அங்குப் பறந்துசென்று பார்த்துக் களிக்க, எனக்குக் கழுகைப் போன்று இறக்கைகள் வாய்க்காவோ என்று ஏங்கினேன். அப்போது, “நொடிக்கு நொடி பாலத்தின்கண் திறக்கப்படும் சாக்காடாகிய கள்ளக் கதவுகளின் வழியானன்றி ஆங்குச் சேர்தல் முடியாது” என்று மலைமுனி கூறிற்று. “பார்வைக் கெட்டின மட்டும் அக்கடற்பரப் பெங்கணும், அள்ளித் தெளித்தாற்போற் புள்ளிப் புள்ளியாய்ப் பசேலெனத் தோன்றி மிளிரும் இத்தீவுகள் கடற்கரை மணலினும் பலவா யிருக்கின்றன. நீ பார்க்கும் இத்தீவுக் கூட்டங்களுக்கு அப்பாலும் உன் கட்புலனுக்கும், அகக்கண்ணுக்கும் எட்டாத கணக்கற்ற தீவுகள் உள. அவை

மரணத்திற்குப்பின் நன்மக்கள் வந்துறையும் தேவமாளிகைகளாம். அவை அவரவர் செய்த நற்செய்கையின் தரத்திற்கு ஏற்ப அவரவர்க்குப் பகுத்தளிக்கப்பெறும். தம்பால் உறைவோருடைய இன்ப நுகர்ச்சிக்கும் அறிவின் முதிர்ச்சிக்கும் ஏற்றவாறு பலதிறப்பட்ட இன்ப வளங்கள் அவற்றின்கண் மலிந்து காணப்பெறும். உள்ளுறைவோர் ஒவ்வொருவரின் தகுதிக்கேற்ற இன்பத்துறக்கம் என்றுதான் அவை ஒவ்வொன்றையுங் கூறல் வேண்டும். ஓ, மிர்சா! இவ்வின்ப உறையுள்கள் எப்பாடுபட்டேனும் எய்துதற்குரியன வல்லவோ? இப்பெற்றித்தான ஒன்றைப் பெறுவதற்கு வாய்ப்புகள் பல அளிக்கும் உலகவாழ்வு துன்ப வாழ்வாகவா உனக்குத் தோன்றுகிறது? இத்தகைய இன்பவாழ்க்கைக்கண் உய்க்கும சாக்காடும் அஞ்சிக் கடியற்படுவதொன்றோ? எனவே, மனிதப் பிறவிக்கென இத்தகைய அழிவற்ற இன்பநிலையொன்று ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும்போது அப்பிறவி வீண் படைப்பென்று நீ கருதுதல் சால்பாமோ!" என்று மலைமுனி தெளிவுறுத்திக் கூறியது."

"சொல்லரிய மகிழ்ச்சியுடன் அவ்வின்பத்தீவுகளை நோக்கி வியந்து கொண்டிருந்தேன். இறுதியில் "கருங்கற் பாறையின் மறுபுறமிருக்கும் கடல்மீது கவிந்துள்ள கார்முகிற் படலத்துள் மறைந்திருப்பவை என்ன என்று விளக்கலாகாதோ?" என வினவினேன். மறுமொழியில்லை. மறுமுறை வினவக்கருதி மலைமுனியிருந்த பக்கம் திரும்பிப் பார்த்தேன். அது மறைந்துவிட்டது. இத்துணை நேரம் என் உள்ளத்தைக் கவர்ந்திருந்த காட்சியையாவது மீண்டுமொருமுறை கண்டு களிக்கலாம் எனக்கருதி அப்பக்கம திரும்பினேன். திரும்பியுமென்ன? புரண்டோடும பேரலையையுங் காணேன்; கண்கள் அமைந்த பாலத்தையுங் காணேன்; இன்பத்தீவுகள் இருந்த இடத்தையுங் காணேன்; அவற்றிற்கு மாறாக நான் கண்டதெல்லாம் ஆட்டு மந்தையும், ஆனிரையும், ஒட்டகக் கூட்டங்களும் மேய்ந்து கொண்டிருந்த பாக்தாதின் நீண்ட பள்ளத்தாக்கே."

திருக்குறளில் சைவசமய உண்மை

" மா. வே. நெல்லையப்பபிள்ளை "

(செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 19, பரல் - 1. பக்கம் - 17. தொடர்ச்சி.)

(12) இனி முதற்கண் 34 வது அதிகாரம் நிலையாமை என்னும் பொருளானது இருவினை யொப்பு என்னும் சித்தாந்த உண்மையைக் கூறுகிறது என்பதுபற்றி விளக்கிக் கூறப்படும். எடுத்துக்கொண்ட பொருளை இதில் விளக்குவதற்கு இருவினை யொப்பு என்ற உண்மையை நாம் அறிதல்வேண்டும். இருவினையொப்பு அறிதற்குமுன், இருவினைகளாகிய நல்வினை தீவினைகள் மக்கள் வாழ்க்கையிலே தொழிற்படு முறைமையைப் பற்றி, நாமறிதல் வேண்டும். இதனைப்பற்றிய விரிவுரை ஒரு நூலளவு விரியுமாதலின், எடுத்துக் கொண்ட பொருளை விளக்கு முகத்தான் மட்டும் இங்கே அது சுருக்கமாகக் கூறப்படும்.

இருவினைகள் யாவை?

(13) வினை யென்பது தொழில் என்று பொருள்படும். மக்கள் உலக வாழ்விலே செய்யும் எவ்வகைத் தொழில்களும் வேட்கை, அறிவு, செயல்களாகிய மூன்றினாலே நிகழும். ஒருவன் யாதாமொரு தொழிலைச் செய்வதற்கு, அவன் மனதிலே முதலாவது வேட்கை நிகழல் வேண்டும். வேட்கை எழுந்தபின் அத்தொழிலை எப்படிச் செய்தல் வேண்டும் என்னும் அறிவு அவன் மனத்தின்கண், நிகழ்தல் வேண்டும். இங்ஙனம் நிகழும் அறிவு, எண்ணம் (Thought) என்று கூறப்படும். எண்ணம் மனத்தின்கண் நிகழ்ந்தபின், அத்தொழிலைச் செய்யு முறைமை, மனத்தின்கண் நிகழ்ந்து, பின்புறத்தில் நிகழ்தல் வேண்டும். ஒரு தொழிலைப்பற்றிய எண்ணம் கைவந்த பின், அவ்வெண்ணம்பற்றி வேட்கையும் நிகழலாம். மனத்தின் கண் வேட்கை முன்னே நிகழினும், அல்லது எண்ணம் முன்னே நிகழினும், அவற்றின் பின்னே, செய்யு முறைமை மனத்தின்கண் நிகழ்ந்து, பின் புறவுலகிலே நிகழ்தல் வேண்டும். எண்ணம், வேட்கை, செயல்கள் மூன்றும் முற்றிலும் ஒன்றை விட்டு ஒன்று வேறுபடுவன அல்ல. எண்ணம் நிகழும் பொழுது அதனுடன் சிறிதளவு வேட்கை செயல்களும்

மனத்தின்கண் நிகழும். அவ்வாறே வேட்கை நிகழும் பொழுது, சிறிதளவு எண்ணஞ் செயல்கள் நிகழ்தலும், செயல் நிகழும்பொழுது, சிறிதளவு எண்ணம் வேட்கைகள் நிகழ்த லும், மனத்தின்கண்ணேயுள. அதற்குக்காரணம், மூன்றும் அருளாகிய ஒன்றிலிருந்து பிரிந்தமைதான். எண்ணம், வேட்கை, செயல் மூன்றுஞ் சேர்ந்த தொகுதியே மக்களுடைய அறிவா கும் (consciousness) மூன்றும் மனத்தின்கண் நிகழ்ந்தன்றி, புறவுலகிற் செயலாக நிகழா, மனத்திறமையுடைய அறிவுடை யோரிடத்தே, வேட்கை, எண்ணம், செயல்கள் அவர்கள் மனத்தின்கண் ஒன்றுக்கொன்று நேர்பட்ட நிலையில் (balanced condition) நிகழ்ந்து, புறவுலகிலே திறனுடைய செயலாக நிக ழும் அவர்களுடைய வேட்கை, எண்ணம், செயல்கள் பெரும் பான்மையும் பிறருடைய தொடர்புபற்றியே நிகழ்தல் வேண்டுமாதலின், அவை மூன்றும் பிறருடைய வேட்கை எண்ணஞ் செயல்களுக்கும் நேர்பட்ட நிலையில் நிகழல்வேண்டும். இப்படி இருதிறத்தா ரிடத்தும் நேர்மை நிகழும்படி ஒழுகும் ஒழுக்கத்தை பண்டைத் தமிழ் ஆன்றோர் செம்மை ஒழுக்கம் அல்லது செவ்விய ஒழுக்கமென்று கூறினர். இந்தச் செம்மை ஒழுக்கமே அறவொழுக்கமாகும். தன்மாட்டும், பிறர்மாட்டும் தொடர்பு பற்றிய இந்தச் செம்மை ஒழுக்கம்; மேலே கூறியபடி, புறத்தில் நிகழ்வதற்குமுன், மனத்தில் நிகழும்போது அம்மனம் செம்மை மனம் என்று கூறப்படும். "கொம்மை வரிமுலைக் கொம் பனையாள் கூறனுக்கு, செம்மை மனத்தால் திருப்பணிகள் செய் வேனுக்கு" என்று மாணிக்கவாசக அடிகள் திருவாசகம் குலாப் பத்து 10-வது பாட்டிற் கூறியது காண்க. வேட்கை எண்ணம் செயல்களாகிய மூன்றும் ஒன்றுக்கொன்று நேர்பட்டு நிகழும் மனத்திறனில்லாதவர், யாதாமொரு தொழிலைத் திறம்படச் செய்ய முடியாது, அறவழியிலும் ஒழுகமுடியாது.

(14) ஒருவன் உலக வாழ்வில் தனது வேட்கை எண்ணம் செயல்களை நிகழ்த்துதற்கு, கருவிகளாக மூன்று உடல்க ளுள. வேட்கையானது கனவுடலிலும், எண்ணம் மனவுடலிலும், செயலானது நனவுடலிலும், நிகழ்கின்றன. இம்மூன்று உடல் களின் அணுக்களும் ஒன்றை ஒன்று ஊடுருவியிருத்தலால், மூன்று உடல்களின் தொழில்களும் நெருங்கிய தொடர்புடை

யவைகள், பருமையாயுள்ள நனவுடலைவிட, கனவுடல் நுண்மையாயுள்ளது. கனவுடலைவிட மனவுடல் நுண்மையா யுள்ளது. கனவுடலில் நிகழ்கிற வேட்கையும், மன உடலில் நிகழ்கிற எண்ணமும் ஒன்றை ஒன்று பற்றி நிற்கும் மிகநெருங்கிய தொடர்புடையன ஆதலின் அவையிரண்டையுஞ் சேர்த்து மனவுடலென்று கூறுவதுமுண்டு. அப்போழுது வேட்கையும் எண்ணமும் மனவுடல் வழியாகவுஞ் செயல் நனவுடலாகிய பருவுடல் வழியாகவும் நிகழ்கின்றன என்று நாம் கூறுகின்றோம். எண்ணம் மனத்தைக் கருவியாகக் கொண்டும், வேட்கை நாவைக் கருவியாகக்கொண்டும், புறச்செயலுக்கு முன்னேமனத்தின்கண்ணே சூழ்ந்து, துணியப்படும் துணிவுள்ளம் (will) பருவுடலைக் (physical body) கருவியாகக்கொண்டும் வெளிப்படுகின்றன. இதனாலே எந்தத்தொழிலும், ஒருவனுடைய மனம், நா(வாக்கு) உடல்களாலே (காயம்), செய்யப்படுகின்றன என்று கூறப்படுகின்றது. மனம், நா, உடல் என்னும் மூன்று கருவிகளாலும் ஒருவன் தனக்கும், பிற உயிர்களுக்கும் இன்பம் பயக்கும்படி வேட்கை, எண்ணம், செயல்களை நேர்மையாய் நிகழ்த்தும் வினை நல்வினையெனப்படும். அவன், தனக்கும் பிறவுயிர்களுக்கும் துன்பம் பயக்கும்படி, தன்னுடைய வேட்கை எண்ணஞ் செயல்களை நேர்மையின்றி நிகழ்த்தும் வினை தீவினை யெனப்படும். நல்வினை யென்பது எல்லா வுயிர்களுக்கும் ஒப்ப இன்பநலம் பயக்கும் வினையென அறிக. அவ்வாறே தீவினையும். மக்களில் சிலருக்குத் துன்பம் பயக்குந் தீவினை, வேறு சிலருக்கு இன்பம் பயக்கும் நல்வினையாக எண்ணிச் செயப்படுதல் சைவசமயத்தில் இல்லவே இல்லை. அது இறைவனுணைக்கு மாறுபட்டதாதலின் சைவசமயத்தில் இல்லை.

(15) வினைச்சட்டம் (Law of karma) வினை யென்கிற சொல்லில் மேலே கூறியபடி செய்யப்படுகிற தொழிலும், அதனால் பின்விளைகிற பயனும் அடங்கும்; தொழிலும் பயனும் உடலும் அதனிழலும்போல ஒன்றை விட்டு ஒன்று, பிரியாத நெருங்கிய தொடர்புடையன ஆதலின். (208 வது திருக்குறள்) வினையாகிய தொழில்பற்றிப் பயன், அதன்பின் இயல்பாக இறைவன் நியதியாகிய ஆணைப்படி நிகழும் முறைமை, வினைச் சட்டம் என்று கூறப்படும் (Law of Karma) வினைச்சட்டம்

இறைவனாணைப்படி எவ்வுயிர்க்கும் ஒப்ப நிகழ்தலின், உலகில் ஒருவன், பிற உயிர்களுக்கு நன்மை செய்துதான் நன்மையடைய முடியுமேயன்றி, பிற உயிர்களுக்குத் தீமை செய்து, தான் நன்மையடைய முடியாது; இறைவனுடைய திருவுள்ளத்தில் எல்லாவுயிர்களுக்கும் இன்பநலம் அடையவேண்டுமென்னுங் கருத்து இருத்தலால், இந்தக் கருத்துப்படி அவனாணையாகிய வினைச்சட்டம் உலகிலே தொழிற்படுகின்றது. இந்த வினைச்சட்டப்படி ஒருவன் பிற உயிர்களுக்கு இன்பம் பயக்கும் நல்வினையைச் செய்தால் பின் அதனால் அவனுக்கு இன்பநலமும், துன்பம் பயக்குந் தீவினையைச் செய்தால், பின் அவனுக்குத் துன்பமும் இயல்பாக உண்டாகின்றன. ஒருவன் பிற உயிருக்குத் துன்பஞ் செய்து தான் இன்பமடையும் வழி இல்லவே இல்லை. இந்த உண்மையைத் திருவள்ளுவர் தீவினையச்சம் என்னும் 21-வது அதிகாரம் பத்துக் குறளிலும் கூறி யிருக்கின்றார். வினைச்சட்டம் உண்மையை நன்கறிந்த அறிஞர் தமக்குப் பிறர் நற்பயன் விளைவித்து அவர்கள் மேலும் மேலும் திருந்தி முடிவில் பேரின்ப நிலையை யடைதற்குக் காரணமாயிருக்கும். உயிர் வளர்ச்சிக்கு இன்றியமையாது வேண்டப்படும் வினைச்சட்டமும் பல பிறப்பு உண்மையும் கூறாத சமயங்கள் சமய இலக்கணமில்லாத சிறு சமயங்கள்.

வினையின் பாகுபாடு

(16) வினையானது சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியம் என மூவகைப்படும். இவை முறையே, தொகுப்புவினை, எடுப்புவினை, நடப்புவினை யென்று தமிழிற் கூறப்படும். சஞ்சித வினையென்பது பிறவிகடோறும் ஒருவராலீட்டப்பட்டுத் திரண்டு புத்தி தத்துவம் பற்றுக்கோடாகக் கிடக்கும் வினைத்தொகுதி. ஒருவன் ஒரு பிறவியில் எடுக்கும் உடலால்; இன்ப துன்பம் நுகரப்படுதற்கு தொகுப்பாயிருக்கிற சஞ்சித வினையிலிருந்து ஓரளவிலெடுத்துக்கொடுக்கப்படும் வினை பிராரத்துவ வினையாகும்; இந்தப் பிராரத்துவ வினையின்படி நுகரப்படும் இன்ப துன்ப நுகர்ச்சிகளுக்கு முயற்சி இன்றியமையாது வேண்டப்படும். இப்படி முயற்சி செய்யுங்கால் உண்டாகும் இன்ப துன்ப நுகர்ச்சிகள் தன்னாலுண்டானவைகளென்றும், பிறராலுண்டானவைகளென்றும்

தன்முனைப்புக் கொள்ளும் பொழுது அவனுக்கு விருப்பு வெறுப்புக்க ளுண்டாகின்றன. இங்ஙனம் உண்டாகிற விருப்பு வெறுப்புக்களால் இனிவரும் பிறப்புக்கு வித்தாய் விளையும் வினை ஆகாமியமாகும். இந்த ஆகாமியவினை, செயல் வகையால் மேலே கூறப்பட்ட நல்வினை தீவினைகளாகும். இவை கருத்துவகையால் முதிர்ந்து, புண்ணிய பாவங்களாய் மாறிப் புத்திதத்துவத்திற் கிடக்கும் சஞ்சித வினையோடு ஒன்று சேர்கின்றன. சஞ்சித வினைத் தொகுதியிலிருந்து பக்குவப்பட்ட புண்ணிய பாவங்களாய் ஓர் உடற்பிறவிக்கு எடுக்கப்பட்ட பிராரத்துவவினை மேலே கூறியவாறு போக நுகர்ச்சிக்குச் செய் யப்படும் முயற்சியின் விளைவாக இன்ப துன்பங்களாகின்றன. ஆகவே ஆகாமியத்தில் செயல் வகையாலுண்டாகிற நல்வினை தீவினைகள் கருத்து வகையால் புண்ணிய பாவங்களாய் முதிர்ந்து சஞ்சித வினையாக மாறி, அச்சஞ்சித வினையிலிருந்து எடுக்கப் பட்ட பக்குவமான பிராரத்துவவினைப் புண்ணிய பாவங்கள், பயன் வகையால் இன்ப துன்பங்களாய் மாறுகின்றன. ஒருவன் பிராரத்துவவினைப் போகநுகர்ச்சிக்குச் செய்யப்படும். முயற்சியா லுண்டாகும் இன்ப துன்பங்க ளானவை, தான் முற் பிறப்பிற் செய்த வினையாலுண்டானவை யென்று நினை யாமல், இப்பிறப்பில் தன்னா லுண்டானவை யென்றும் பிறராலுண்டாக்கப்பட்டவை யென்றும் தன் முனைப்போடு நினைத்தலால், விருப்பு வெறுப்புக்கள் பொருள்கள் மேலும் உயிர் கள் மேலும் உண்டாகின்றன. இந்த விருப்பு வெறுப்புக்களே ஆகாமிய வினைக்குக் காரணமாயிருந்து, அதிலிருந்து சஞ்சித வினையையும் பிராரத்துவ வினையையும், முறையே தமக்குப் பிறர் துன்பம் பயக்குந் தீவினை செய்யினும், அவர்களுக்கும் இன்பம் பயக்கும் நல்வினையே செய்வாரென்று திருவள்ளுவர் “இன்னா செய்யாமை” என்னும் 32-ம் அதிகாரம் 2, 3, 4-ம் குறள்களிலும் கூறுகின்றார். ஒருவன் பொதுவாகத் தான் மேற்கூறியபடி செய்த வினையின் பயன் அவனுக்குப் பின்வரும் பிறப்புகளில் உண்டாகும். இப்படி உண்டாகும் வினையின் பயனே, திரு வள்ளுவர் ஊழென்று 38-வது அதிகாரத்தில் கூறுகின்றார். இந்த ஊழானது முற்பிறப்பில் செய்த முயற்சியின் பயனாதலின், அப்பயன் முற்றிலும் முதிராதிருக்கும் நிலையில் பின் செய்யு

முயற்சியாலே மாற்றப்படலாம். இப்படி மாற்றத்தக்க ஊழ் முறைமையைத் திருவள்ளுவர் ஆள்வினையுடைமை என்ற (62-வது) அதிகாரத்திற் கூறுகின்றார். இறைவனாணைப்படி நிகழ்கிற இந்த வினைச்சட்டம் மக்களுக்குப் பல பிறப்புகள் பற்றியும் இன்பதுன்பங்கள் பற்றியும் உயிர்வளர்ச்சி (Soul evolution) யின் பொருட்டுத் தொழிற்பட்டு உண்டாக்குவதற்கு ஏதுக்களா யிருக்கின்றன. ஆகவே விருப்பு வெறுப்புக்களே மரத்திலிருந்து வித்து வித்திலிருந்து மரம் என்னும் தொடர்பு முறைமை விடாதிருக்கும்படி ஊழ்வினைத் தொடர்பை உண்டு பண்ணி மக்களை மாறிமாறி உலகில் வந்து பிறந்திறந்துழலும்படி செய்கின்றன. விருப்பு வெறுப்புக்களறுதலே விருப்பு வெறுப்புகளில்லாத இறைவனோடு அத்துவிதமாய்க் கலந்து பேரின்பமடைதற்குக் காரணமாம்.

"வேண்டுதல்வேண் டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில."

(தொடரும்)

தமிழ்ப் புலவர் மாநாடு

மெய்கண்ட சாத்திர மாநாட்டின் சார்பில், மாநாட்டுப் பந்தரில் 24-5-41-ஆம் நாள் பிற்பகலில் '**தமிழ்ப் புலவர் மாநாடு**' நடைபெற்றது. தமிழ் நாட்டின் எல்லாக் கோட்டங்களிலிருந்தும் வந்திருந்த தமிழ் ஆராய்ச்சியாளர் அனைவரும் இம் மாநாட்டிற் கலந்துகொண்டனர்.

முதலில், மெய்கண்ட சாத்திர மாநாட்டின் சார்பில் இத் 'தமிழ்ப் புலவர் மாநாடு' கூடுதற்குரிய இயைபுபற்றிப் புலவர் மாநாட்டு அமைச்சர் முதலியோர் முன்மொழிந்து துவங்க, திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை, M.A., M.L., அவர்கள் தலைவரவர்களைப் பற்றித் தெரிந்துகூற மாநாட்டுக்குத் **திருவாளர். சாந்தூர் T. S. கந்தசாமி முதலியாரவர்கள் B.A.** அவைத்தலைமை தாங்கினர். இவர்கள் தலைமையின் திறங்குறித்துத் திருவையாறு, திருவாளர். வித்துவான் T. G. சோமசுந்தர தேசிகர் அவர்கள், திருவாளர். வித்துவான் ஔவை சு. துரைசாமிப் பிள்ளையவர்கள் முதலியோர் ஆதரித்துப் பேசினர்.

தலைவரவர்கள் முன்னுரையாகச் சில தமிழ்க்குறிப்புக்கள் கூறிய பின், பல தீர்மானங்கள் தமிழறிஞர்கள் பலராலும் முன்மொழிந்தும் பின் மொழிந்தும் ஆராய்ந்து பின் ஒருமுகமாகத் தீர்மானிக்கப்பட்டன. தமிழ் மொழியில் இப்போது காணப்படுகின்ற நெடுங் கணக்குக்கு வேறாக வேறு எழுத்துப்புரட்சி கட்டாயமா? என்பதுபற்றி அவையில், சுவை மிக்க ஆராய்ச்சிச் சொற்போர் நடைபெற்றது. தமிழ் அறிஞர்கள் பெரும்பாலோர் கருத்தையும் இது நன்கு ஈர்த்தது. முடிவாக, 'எழுத்துப் புரட்சி' தமிழ் இலக்கிய மரபுக்கு ஊறுதருமெனவும், பிறவாறுங் கருதி அத்தகைய புரட்சி ஒன்றுந் தமிழ் மொழிக்குத் தேவையில்லை யென்று பெருவாரியான வாக்குகளால் தீர்மானிக்கப்பட்டது.

பின்னும் பற்பல தமிழாக்கமான தீர்மானங்கள் இங்ஙனமே ஆராய்ந்து ஆராய்ந்து ஒழுங்கு செய்து தீர்மானிக்கப்பட்டன. தீர்மானங்களெல்லாம் பின்னால், தனித்தலைப்பில் வருகின்றன.

பின்பு, தலைவரவர்கள் இத் தீர்மானங்களை அவையில் நிறைவேற்றுதலோடு, செயலிலும் நிறைவேறுமாறு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமெனவும் பிறவும் முடிப்புரையாகக் கூறியபின், இப் புலவர் மாநாட்டு அமைச்சர் திருவாளர் வித்துவான் பு. சி. புன்னைவனநாத முதலியாரவர்கள் தலைவர் அவர்கட்கும், மாநாட்டிற் கலந்து கொண்டவர்கட்கும், நன்றியுரைகள் கூற மாநாடு திருவருளால் நன்கு நிறைவேறியது.

சைவ மாதர் மாநாடு

26—5—41 மெய்கண்ட சாத்திர மாநாட்டின் ஆறாம் நாள் '**சைவ மாதர் மாநாடு**' மாநாட்டின் சார்பில் நடைபெற வேண்டுமென்று பலரும் விரும்பினர். திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில் வசந்த மண்டபத்தில் மாலை 5-மணிக்கு மாதர் மாநாடு குழுமியது. பல்லாவரம்

மறைமலையடிகள் புதல்வியாரும், சென்னை இராயபுரம் நார்த்விக் மகளிர் கல்லூரியில் முன்பு தலைமைத் தமிழாசிரியராயிருந்தவரும பல செந்தமிழ் உரைநடை நூல்களின் ஆசிரியருமான பாளையங்கோட்டை **திருவாட்டி. திருவரங்க நீலாம்பிகை அம்மையா**ரவர்கள் அவைத்தலைமை மேற்கொள்ள வேண்டுமென்று தெரிந்துகூறியபடி அம்மையாரவர்கள் அவையோர் கிளர்ச்சியினிடையே பேரன்போடு அவைத் தலைமை தாங்கினர்.

தலைமை தாங்கிய அம்மையாரவர்கள், தனித்த செந்தமிழ் நயமும், முற்கால தற்கால மேனுட்டுக் கீழ்நாட்டு உலகியல் நுட்பமும், இயல்பான பேச்சு முறைமையும், மக்கள்பாற் பேரிரக்கமும், திருவருட் கோட்பாடும், பணி செய்து வாழும் ஆர்வமும் பொருந்த இடையிடையே தீஞ்சுவைமிக்க இன்னிசைச் செழுந்தமிழ்ப் பாடல்களை மனமுருகிப் பாடி எல்லார்க்குந் தெள்ளத் தெளிய விளங்கும்படி அரும் பெரும் பொருள்களைப் பற்பல வகையாக விளக்கங்கள் செய்து கொண்டு அருமையாக முன்னுரை முதலிய இன்சுவைப் பேச்சுக்களை நிகழ்த்தினர். அவையோர் விம்மித மெய்தினர். இங்ஙனமே இம் மாதர் மாநாட்டில் பெங்களூர் பெண் கல்லூரி, பொருளாதார ஆசிரியை திருவாட்டி M. A. சாரதாம்பாள் M.A., அவர்கள் திருநெல்வேலி திருவாட்டி உ. மங்கையர்க்கரசி அம்மையார் அவர்கள், அம்பாசமுத்திரம் V. S. மகாலட்சுமி அம்மையாரவர்கள் ஆகிய பேரூக்கமுடைய மாதர் பலரும் கிளர்ச்சி தோன்ற அழகாகவும் சிறப்பாகவும் பேசி அவையோரை மகிழ்வித்தனர்.

சைவசமய ஒழுக்கம்பற்றி மாதர்கள் நடந்து கொள்ள வேண்டிய முறைகள்பற்றி மிகச் செவ்வையாக அவையில் விளக்கிக் காட்டப்பட்டது; உலகத்தில் மாதர்களே எல்லாச் சீர்திருத்தங்களிலும் ஆடவரினும் ஊக்கமுடையராய் விளங்கி உலகுக்கு நலம் விளைககவேண்டு மென்னுங் கருத்தும் மிகவும் உருக்கமாகத் தெரிவிததுக்கொள்ளப்பட்டது.

அவைத் தலைவியாரவர்களின் மகிழ்ச்சி யோங்கிய முடிப்புரையின்பின் நன்றியுரையோடு மாநாடு நன்கு நிறை வெய்தியது. மாதராரேயன்றி ஆடவரும் இம் மாநாட்டுக்கு மிகுதியாக வந்திருந்தனர். மாதராரிடையே இச் '**சைவமாதர் மாநாடு**' மிக்க நல்லுணர்ச்சியை ஊட்டியிருக்கின்றது.

பின்பு, இரவு 9-மணிககுமேல் உத்தரகோசமங்கை திரு. காமகோடி பாய், என்னும் 8-ஆணடுக் குழந்தையினுல் அருமையான ஜலதரங்க இன்னிசைக் கச்சேரி சிறப்பாக நடைபெற்றது.

ஊர்வலக் காட்சி

'மெய்கண்ட சாத்திர மாநாட்'டின் நான்காம் நாள் மாலையில் (24-5-41) மாநாட்டுக்குத் தமிழ்நாட்டின் நாறுபக்கங்களிலு மிருந்து வந்திருந்த தமிழ்ப்புலவர் பெருமக்கட்கு இதுகாறுங் கண்டறியாத ஒரு சிறந்த ஊர்வலம் நடைபெற்றது. திருநெல்வேலியின் தேரோடு பெருந் தெருக்கள் நான்கிலும் அழகிய (மோட்டார்) ஆவி ஊர்தியில் மிக மேலான முறையில் இது நடைபெற்றது. ஊர்வலம் ஒரு பெருந் திருவிழாவாகவே மிளிர்ந்தது.

தெருநெடுகக் கூட்டம் திரண்டிருந்தது. முதலில் இரட்டை நாத சுரத்தோடு மேளவாத்தியம் இசைத்துச் சென்றது. அதன்பின் சிறுவர், சிறுமியர், பெரியோர் எனத் திருமுறை இன்னிசைகள் முறையாக நடைபெற்றன. அவற்றை அடுத்துத் தொண்டர்கள், சிவப்பெயர் வாழ்த்துக்கள், அடியார்கள், புலவர்கள் முதலியோர் வாழ்த்துக்களை முழங்கினர். அதன் பின், சிறியரும் பெரியருமான நிறைந்த தொண்டர்கள் சூழப் பேராரவாரத்துடன் மெல்ல மெல்ல ஊர்தி நகர்ந்துவந்தது. பின்பு, போற்றித் திருவகவல் முதலிய பாராயணங்கள் தொடர்ந்து நடைபெற்று வந்தன. இங்ஙனமாக எல்லா ஒலிகளும் ஒருங்குகலந்து வானத்தையும் பிளந்து சென்றன. நெடுகக் காந்த விளக்குகள் வரிசை வரிசையாகப் பேரொளி கான்று விளங்கின. பகுதி பகுதியாகப் பெருமக்களும் பிறரும் கூட்டத்தின் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனை வரையில் மகிழ்ச்சியில் திளைத்து, 'இக்காலத்தில் இஃது எங்கும் கண்டிராத காட்சி'யென வியந்து வியந்து தம்மை மறந்தவராய் அலையலையாக விளங்கிச் சென்றனர்.

இவ்வூர்வலத்தில் திருநெல்வேலிச் சான்றோர் எடுத்துக்கொண்ட ஊக்கம் ஓர் அளவிற்படுவதன்று. தெரு நெடுக ஏராளமான பன்னீர்ப் புட்டிகளை உடைத்து உடைத்து எங்குந் தெளித்தனர். சிற்சில வீடுகட்கொருகால் ஊர்தியை நிறுத்திப் பலவகையான நறுமண மாலைகளையும் பொன்னரி மாலையையும் அணிவித்துச் சந்தனம் பன்னீர் பழம் வெற்றிலை பாக்கு கற்கண்டு பால் முதலிய நறும் பொருள்களை அளித்து மாட்சிமை செய்தனர். தலைவர்கள் பன்னீரிலேயே நீராடினர். மாலைகளோ அளவிறந்தவை. தலைவர்களின் முகம் மலர்மாலைக் குவியலில் மூழ்கின; பின்னர் ஊர்தி முழுமையும் அம் மலர்மாலைகளைப் பரப்பி அணி செய்தனர், ஊர்தி முழுமையும் நிறைந்து சக்கரங்களிலெல்லாம் மாலைகள் வரிசையாக இடப்பட்டு அசைய, ஊர்தி ஒங்கி ஒங்கி ஊர்ந்துவந்த காட்சி, இவ்வூர்வலம் தமிழாசிரியன்மார்க்கோ அன்றி ஊர்திக்கோ என்ற அனைவரும் கருதும்படி அத்தனைப் பெருமாட்சியாய் விளங்கியது.

திரளான கூட்டமெங்குந் தொண்டர்கள் அங்கங்குமிருந்து, "தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" எனவும், திருவள்ளுவர் திருவடி வாழ்க, திருமூலர் திருவடி வாழ்க, மாணிக்கவாசகர் திருவடி வாழ்க, திருஞானசம்பந்தர் திருவடி வாழ்க, திருநாவுக்கரசர் திருவடி வாழ்க, சுந்தரர் திருவடி வாழ்க, சேக்கிழார் திருவடி வாழ்க, மெய்கண்டார் திருவடி வாழ்க, அருணந்திசிவம் திருவடி வாழ்க, மறைஞானசம்பந்தர் திருவடி வாழ்க, உமாபதிசிவம் திருவடி வாழ்க, சிவஞானமுனிவர் திருவடி வாழ்க, குமரகுருபரர் திருவடி வாழ்க, இராமலிங்க அடிகள் திருவடி வாழ்க, ஆறுமுகநாவலர் திருவடி வாழ்க, சோமசுந்தர நாயகர் திருவடி வாழ்க, நாட்டின் நற்சான்றோர் வாழ்க, மெய்கண்ட சாத்திர மாநாடு வாழ்க, மாநாட்டுத் தலைவர்கள் வாழ்க, மாநாட்டுச் சொற்பொழிவாளர்கள் வாழ்க, மாநாட்டுப் பணியாளர்கள் வாழ்க, சைவமுந் தமிழும் வாழ்க' என்னும் எண்ணிறந்த வாழ்த்து முழக்கங்களை முதலிலிருந்து முடிவு வரையில் விண்ணும் மண்ணும் அதிர இடையறாமல் முழங்கிவந்த சிறப்பு என்றும் மறப்பரியதாயிருக்கின்றது. எல்லாரும் அவரவரையும் மறந்து இவ்

வாழ்த்து முழக்கங்களை முழங்கி வந்தனர். கூட்டத்தில் வந்தவர்களுக் கெல்லாம் பழம் பால் கற்கண்டு முதலியன அங்கங்கும் வழங்கப்பட்டன.

எல்லாவற்றையும் விட இவ்வூர்வலத்தில் மிகவும் பேரின்பக் காட்சி யாக வயங்கியது, சிறு சிறு பிள்ளைகள் திருநீற்றுக்கலனைக் கையில் எடுத் துக்கொண்டு, கூட்டம் முழுமையும் சுற்றிச்சுற்றி அனைவர் நெற்றியிலும் திருநீறு பரக்க விளங்கும்படி பூசுமாறு நீறு வழங்கிவந்த பெருங் காட்சி யாகும்.

> "சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
> விந்தை! இரு கண்கட் கருவிருந்து"

என இங்ஙனமெல்லாம் இவ்வூர்வலம் மிகச் சிறப்பாக நிகழ்ந்து, இரவு 10-மணிக்கு மாநாட்டுக காரிய நிலையத்தை அடைந்தது.

தமிழாசிரியர்கட்கு நேர்ந்த இவ்வூர்வலப் பெருஞ் சிறப்பு, தமிழ்ப் பெருவரலாற்றிற் பொற்றகட்டின்கண் மாணிக்க வெழுத்துக்களாற் பதித்துச் சிறப்பிக்கவேண்டிய பெருமையுடையதாகு மென்பது மிகையா காது. வாழி தமிழ்; வாழி தமிழறிஞர்!

இசையரங்குகள்

'மெய்கண்ட சாத்திர மாநாட்'டில் நடைபெற்ற மற்றொரு பெருஞ் சிறப்பு ஒவ்வொருநாளுந் தொடர்பாக அரிய பெரிய இன்னிசை யரங்குகள் தக்க இசைவாணர்களால் நடைபெற்றமையாகும்.

மாநாட்டின் **முதல்நாள்** இரவு திருவனந்தபுரம் **திருவாளர் தி. இலக்கு மணப் பிள்ளை பி. ஏ.,** அவர்கள் தம் மாணவியர் இருவருடன் வந்திருந்து இன்னிசையரங்கு நிகழ்த்தினர். திருவாளர் பிள்ளையவர்கள் ஆண்டில் முதுமையுடைய ராயினும் இனிதாக யாழ் தாங்கி இளைஞரென இசை யியக்கி அரங்கு நடாத்திய காட்சி அனைவர்க்கும் பேருக்கம் தருவதா யிருந் தது. மாணவியர் தீங்குரலில் நன்றாகப் பாடினர்.

அன்று, அதனை அடுத்துப் பங்களூர் திருவாட்டி சாரதாம்பாள் எம். ஏ., அவர்களின் அரிய வீணைக் கச்சேரி நன்கு நடைபெற்றது; அதன் பின் திருமதி குஞ்சம்மாள் அவர்கள் 'வள்ளி திருமணம்' என்னும் பொருள் மேல் இன்னிசைக கருவிகளுடன் அரிய கதை நிகழ்த்தினார்கள். இன்றை நிகழ்ச்சி இரவு 3-மணி வரையில் நடைபெற்றது. கூட்டம் இரண்டாயிர வர்க்குமேல் இருக்கும்.

* * * *

இரண்டாம் நாள் இரவு சேற்றூர் சமஸ்தான வித்துவான் **திருவாளர் மயிலம் க. வச்சிரவேல் முதலியாரவர்கள்,** பக்க மேளங்களுடன் இன் னிசையரங்கு நிகழ்த்தினார்கள்; இவர்கள் மாணவர்கட்கு முறையாக இசைக்கல்வி பயிற்றி வருபவர்களாதலால், அம் முறையிலேயே இசையரங்கு இனிதமைந்திருந்தது.

* * * *

மூன்றும் நாள் இரவு நவாப் டி. எஸ். இராசமாணிக்கம் அவர்களின் மதுரை தேவி பால விநோத சங்கீத சபையின் (music director) இசை

யாராய்ச்சி மேற்பார்வையாளர் சிதம்பரம் **திருவாளர் சி. எஸ். செல்வரத்தினம் பிள்ளை யவர்களால்** இனிய இசைக்கருவிகளுடன் இன்னிசையரங்கு நடைபெற்றது. திரு. பிள்ளையவர்கள் மிக்க கிளர்ச்சியோடும் பலவகைப்பட்ட இசைவிரவல் முறைகளோடும் சிறப்பாக இசையரங்கை நிகழ்த்தினர். அவையோரும் அவரோடு இசையில் ஒருவயமாயியங்கினர். இவர்கள் பெரும்பாலுந் தொடக்க முதலே, தமிழ்ப் பாடல்களைப் பாடிவந்ததும் மக்கட்குப் பெருக்கத்தை யளித்தது.

* * * *

நான்காம் நாள் இரவு திருநெல்வேலி **தமிழிசைமணி சா. சுந்தர ஓதுவா மூர்த்தியவர்களின்** திருமறை யிசையரங்கு, குழல் முதலிய இன்னிசைக் கருவிகளுடன் இனிதின் நிகழ்ந்தது. திரு ஓதுவாமூர்த்தி யவர்களின் இன்னிசை விரவல்கள் கேட்குந்தோறும் சிந்தைக்கினிய செவிக்கினியவாய்த் தெளிந்த பொருள் விளக்கங்கள் பொருந்திக் கேட்போரனை வரும் மனங் கரையுமாறு அழகின் அமைந்திருந்தது.

அதன்பின் சிறிது நேரம் திருவாட்டி சாரதாம்பாள் எம். ஏ., அவர்களின் அரிய வீணையரங்கும் நன்கு நடைபெற்றது.

* * * *

ஐந்தாம் நாள் இரவு மழைத்தூறல் இருந்தமையின் அன்று மாநாட்டுப் பந்தரில் நடைபெறவேண்டிய திருவாளர் சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை யவர்களின் இசையரங்கு ஏழாம் நாளே நெல்லையப்பர் கோயில் வசந்த மண்டபத்தில் நடைபெற வேண்டியதாயிற்று.

* * * *

ஆறும் நாள் இரவு மழைத்தூறல் வந்துவிடுமோ என்ற ஐயுறவினால் மாநாட்டுப் பந்தரில் நடைபெறவேண்டிய இசையரங்கு திருநெல்வேலி நெல்லையப்பர் திருக்கோயில் வசந்த மண்டபத்தில் வைததுக்கொள்ளப்பட்டது. அன்றுஓர் இனிய 'சலதரங்கக் கச்சேரி' நடைபெற்றது. இதனை ஆதிசைவ மரபில்தோன்றிய **உத்தரகோசமங்கை திரு. காமகோடிபாய் என்னும் 8-ஆண்டுப் பெண்குழந்தை** நிகழ்த்தியது. அக்குழந்தை இதனை இயக்கும்போது அதன் முகத்திலும் கண்களிலும் கதிர்விட்டு வீசிய அறிவுக்கதிர் காணுந்தோறும் காணுந்தோறும் பெரு வியப்பினை விளைவியா நின்றது. அவையோர் மிக மகிழ்ந்தனர். இக்காலத்தில் இத்தகைய குழந்தைகளிடம் இங்ஙனம் நற்கலைகள் விளங்கி மிளிருதலை நேரே பார்க்குங்கால், முன் திருஞானசம்பந்தர், மெய்கண்டதேவர் முதலிய குழந்தை யடியார்கள் உண்மையிற் 'சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம், பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம், உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம் அந்நிலையில் உணர்ந்தனர்' என்பது மெய்யே என நன்கு விளங்குகின்றது.

* * * *

இனி, **ஏழாம் நாள்** இரவும் மேற்காட்டிய வசந்த மண்டபத்திலேயே இன்னிசையரங்கு நிகழ்ந்தது. இன்றைய அரங்கு இசைப்பெரு மன்னர் காஞ்சி திரு. நாயனப்பிள்ளை என்ற கா. சுப்பிரமணியபிள்ளை யவர்களின் முதல் மாணவர் திருவாளர் **சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை யவர்களால்**

நெல்லை, மெய்கண்ட சாத்திர மாநாட்டைச் சார்ந்த இன்னிசை மாநாடு

2-ம் வரிசை :—(1) இராமையா பிள்ளை, கஞ்சிரா, (2) தெட்சணாமூர்த்தி ஆசாரி, மிருதங்கம், (3) "இசைமணி" ச வச்சிரவேலு முதலியார், (4) "இசைச் செல்வர்" C S செல்வரத்தினம் பிள்ளை, (5) "இசை மன்னர்" சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை, (6) "மறையிசை மன்னர்" சுந்தர ஓதுவா மூர்த்தி, (7) பிடில் வித்துவான், விசுவநாத சர்மா, (8) M A சாரதாம்பாள் M A, வீணை

நிகழ்ப்பெற்றது. இவர்கட்குப் பக்கமேளமாக அமைந்தவர்கள் மன்னார்குடி பக்கிரியா பிள்ளையவர்கள் குமாரர் திரு. வைத்தியலிங்கம்பிள்ளையவர்கள் 'கொன்னக்கோல்', திரு. வித்வான் விசுவநாத சர்மா அவர்கள் 'பிடில்', திருச்சி திரு. தட்சணாமூர்த்தி ஆச்சாரியாரவர்கள் 'மிருதங்கம்', முதலியவர்களாகும்.

திரு. பிள்ளையவர்கள் நிகழ்த்திய இசையரங்கு இசைக்கலைக்கே ஓர் எடுத்துக்காட்டாய் மிக்க நுட்பதிட்பங்களுடன் வாய்ந்து உயர்வகையாகத் திகழ்ந்தது. அவையினர் மிக மனமுருகும்படியாய் [illegible] செவி குளிரக் கேட்டனர். கிளர்ச்சியின்போது கிளர்ச்சியும் உருக்கத்தின்போது உருக்கமுமாக அவையோர் மாறிமாறி உவகையுடன் இசைந்திருந்த காட்சி மிக மாட்சிமையுடையதாயிருந்தது. இசையரங்கின் இறுதியில் திரு. பிள்ளையவர்கள் இனிமை செறிந்த தண்டமிழ்ப் பாடல்களை அழகு தழுவ இசைத்தியக்கியது அவையினரை மிக மகிழ்வித்தது. இன்று கூட்டம் கடல் போலப் பரந்து விரிந்து ஆறாயிரவர்க்குமேற் சென்றிருந்தது. ஒலி பெருக்கிக் கருவியும் அமைக்கப்பட்டது. இரவு 8-15 தொடங்கிக் காலை 1-45 மணிவரை 5-மணி நேரம் நடைபெற்றுத் திருவருளால் அவை நன்கு நிறைவெய்தியது.

[குறிப்பு:—மாநாட்டின் சார்பாக நிகழ்ந்த இவ்விசை யரங்குகள் மக்கட்குப் பேருணர்ச்சியும் பெருங்கிளர்ச்சியும் பெருமகிழ்ச்சியும் விளைவித்தன. இசைக்கலை வல்ல இத்திருவினர்க்கு மாநாட்டார் மகிழ்ந்தளித்த **சிறப்புப் பட்டங்கள், பொற் பதக்கங்கள்** முதலியவற்றின் விவரம் வேறு தலைப்பில் வருகின்றன.]

சித்தாந்த உரையாடல்

இச்சாத்திர மாநாட்டில் நிகழ்ந்த மற்றொரு கிளர்ச்சியான நிகழ்ச்சி இளைய சிறுவர் சிறுமிகள் சித்தாந்தப் பொருள்கள்பற்றி ஒவ்வொரு நாளும் மாலையில் நிகழ்த்திய 'சித்தாந்த உரையாடல்'களாகும்.

மாணவ மாணவிகள் ஆயிரக்கணக்கான பெரியோர்கள் குழுமிய பேரவையிற் போந்து துணிவாகவும் தெளிவாகவும் இனிதாகவும் ஒழுங்காகவும் உரையாடல்களை நிகழ்த்திய அழகும் திறமும் மிக்க ஊக்கந்தருவனவாயிருந்தன.

முதல் நாள் (21-5-41) திருநெல்வேலி நெல்லையப்பர் திருக்கோயில் தேவார பாடசாலை மாணவியரான திருவளர் சாரதாம்பாள், திருவளர் பார்வதி என்போர் **(1) 'சித்தாந்த வினாவிடை'** என்னும் பொருள்மேலும்,

இரண்டாம் நாள் திருநெல்வேலி மந்திரமூர்த்தி உயர்நிலைப்பள்ளி மாணவர்களான திரு. இராமமூர்த்தி, திரு. சண்முக நயினார் என்போர் **(2) 'பௌத்தரும் சித்தாந்தியும்'** என்னும் பொருள்மேலும்,

மூன்றும் நாள் மதுரை அமெரிக்கன் கல்லூரி பழைய மாணவர் திரு. புத்தனேரி ரா. சுப்பிரமணியம், மதுரை சேதுபதி உயர்நிலைப்பள்ளி மாணவர் திரு. ரா. நடராசன் என்போர் **(3) 'உலோகாயதரும் சித்தாந்தியும்'** என்னும் பொருள்மேலும்,

நான்காம் நாள் திருநெல்வேலி C. M. உயர்நிலைப் பள்ளி மாணவர் திரு. மா. முருகேசன், பாளையங்கோட்டை அர்ச்சவேரியர் கல்லூரி மாணவர் திரு. சண்முகவேலாயுதம் என்போர (4) **'மரணத்திற்குப்பின் மனிதர் நிலை'** என்னும் பொருள் மேலும,

ஐந்தாம் நாள் நெல்லை மந்திரமூர்த்தி உயர்நிலைப்பள்ளி மாணவர் திரு. பிரமநாயகம், மயிலம் மாணவர் திரு. பெருமாள் என்போர் (5) **'உடலும் உயிரும்'** என்னும் பொருள் மேலும், நெ. நெல்லை தேவார பாடசாலை மாணவியர்களான திருவளர் சரசுவதி, திருவளர் சுப்பம்மாள் என்போர் (6) **'மெய்கண்ட சாத்திர மாநாடு'** என்னும் பொருள் மேலும் உரையாடினர்.

அவையோர் இச்சிறுவர் சிறுமியர் உரையாடல்களில் மிக கிளர்ச்சி மேவிக் கூர்ந்து கேட்டுக் களித்து ஆதரித்தனர்.

உரையாடல் நிகழ்த்திய சிறுவர் சிறுமியர்க்கெல்லாம் அவ்வப்போதும் சிற்சில அரிய அழகிய நூல்கள் பரிசுகளாக அவைத்தலைவர்களால் வாழ்த்தி வழங்கப்பட்டன.

இவ்வுரையாடல்களை இயற்றியும் சிறுவர் சிறுமியர்க்குப் பழக்கியும் உதவியோர திருவாளர் நெல்லை வே. மாணிக்கவாசகம் பிள்ளையவர்கள், பாளையங்கோட்டை திருவாளர் வித்துவான் பு. சி. புன்னைவனநாத முதலியாரவர்கள், நெல்லைத் தேவார பாடசாலை ஆசிரியர் திருவாளர் எஸ். சிவக்கொழுந்து ஓதுவாமூர்த்தி அவர்கள் முதலியோராவர்.

இவ்வுரையாடல்களுள் ஒன்று இதனை அடுத்து இவ்விதழில் வெளிவருகின்றது; பிறவுந் தொடர்ந்து பிற இதழ்களில் வெளிவரும். தமிழகத்திலுள்ள பல்வகைப் பாடசாலைகளிலும் மாணவ மாணவிகளுக்கு இவையும் இவை போன்ற பிற உரையாடல்களையும் அங்கங்குமுள்ளோர் கற்பித்துப் பழக்கினால், சித்தாந்த உணர்ச்சி அவர்களுக்கு இளமையிலேயே சிறந்து மாட்சிமைப் படுமென்று தோன்றுகின்றது.

சித்தாந்த உரையாடல்

மெய்கண்ட சாத்திர மாநாடு

உரையாடினோர் : நெல்லைத் தேவார பாடசாலை மாணவியர்

மங்கையர்க்கரசி :—தங்காய்! இன்று என்ன பெருங்கூட்டம்? ஆடவரும் பெண்டிரும் நிறைய வீற்றிருக்கின்றார்களே.

புனிதவதி :—அரசி! நீ எங்கே போயிருந்தாய்? நம் நகரில் ஒருமாத காலமாக மெய்கண்ட சாத்திர மாநாடொன்று கூட்டுவதற்கான முயற்சி நடை பெற்றுவந்ததே. இரண்டு வாரத்திற்குமுன் உன்னைக்கண்ட பொழுதும் இதனைக் குறித்துச் சிறிது பேசியுள்ளேனே. மறந்து விட்டனையோ?

நீ என் செய்வாய்? மீனாட்சி கல்யாணமும் சித்திரா பவுர்ணமி திருவிழாவும் உன்னை மறக்கச்செய்தன.

மங்கை :—என்னடி சொன்னாய்? மீனாட்சி கல்யாணமாம். பௌர்ணமித் திருநாளாம். இவ்விரண்டும் இறைவனுடைய சிந்தனையிலல்லவோ என்னை ஆழ்த்தின. சமயம் வாய்த்தமைக்குச் சாலமகிழ்ந்தேன்.

புனிதா :—சமயத்தை நழுவவிடாதது சாலச்சிறப்பே. சமயம் என்ற சொல் காலம், மதம் என்ற இருபொருளையும் தருமே. காலத்தைப் பயன்படுத்தியது சரி. மதம் என்ற முறையில் நீ அறிந்திருப்பது யாது?

மங்கை :—சமயமாவது சைவம். சைவமாவது சிவத்தைச் சார்ந்திருப்பது. சிவமோ அன்பெனப்படும். நிறைந்திருப்பது, நன்மையுடையது எனவும் சொல்லப்படும். இச்சிவனை அறிந்து வழிபடுதற்கு உரிய நெறியைக் கற்பிப்பதே சாத்திரம்.

புனிதா :—அப்படியாயின் நீ கூறும் சாத்திரங்கள் யாவை?

மங்கை :—நான் கூறும் சாத்திரங்கள் பதினான்கு அவை : 1. திருவுந்தியார் 2. திருக்களிற்றுப்படியார் 3. சிவஞானபோதம் 4. சிவஞான சித்தியார் 5. இருபாவிருபஃது 6. உண்மைவிளக்கம் 7. சிவப்பிரகாசம் 8. திருவருட்பயன் 9. வினாவெண்பா 10. போற்றிப்பஃறொடை 11. உண்மைநெறிவிளக்கம் 12. கொடிக்கவி 13. நெஞ்சுவிடுதூது 14. சங்கற்ப நிராகரணம். இவற்றை நீ கேள்விப்பட்டதில்லையா?

புனிதா :—அரசி, கேள்விப்படாமலென்ன, சைவராய்ப் பிறந்த நமக்குத் தெரியாமலிருக்கலாமா? இரண்டொன்று நினைவிலிருக்கின்றது.

மங்கை :—புனிதவதி, இரண்டொன்றாவது ஞாபகமிருக்கின்றது நீ பாக்கியவதியே. இரண்டொன்றை நினைவிருந்தால் சொல், கேட்போம்.

புனிதா :—சிவஞானபோதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம், திருவருட்பயன்.

மங்கை :—நீ இவ்வளவு சொன்னதே எனக்கு வியப்பாயிருக்கின்றதே. நம் பாலியருள் இவற்றை அறிந்திருப்பவரும் கேட்டிருப்பவரும் மிகக் குறைவே.

புனிதா :—அரசி, மேற்படி நூல்கள் பதினான்கையும் மறவாதிருக்க ஏதேனும் வழியுண்டா?

மங்கை :—என்றும் நினைவிருக்க வேண்டுமென்றே நம் மூதாதையர் செய்யுள் முறையில் சிறக்க அமைத்துள்ளார்.

புனிதா :—அப்படியாயின் இவற்றைக் குறிக்கும் செய்யுள் யாது? தெரியச் செப்புதி.

மங்கை :—உந்தி களிறு வுயர்போதஞ் சித்தியார்
பிந்திருபா வுண்மை பிரகாசம்-வந்தவருட்
பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
வுண்மைநெறி சங்கற்ப முற்று.

புனிதா :—இவ் வெண்பாவால் பதினான்கும் உணர்ந்தேன். இவற்றை இயற்றியருளிய பெரியார் யாவர்? திருவுந்தியார் முதற்கண் கூறக் காரணமென்ன? சிவஞானபோதமன்றோ சிறப்பாகச் சொல்லப்படுவது. இப்பதினான்குக்கும் மெய்கண்ட சாத்திரமென்று அன்றோ பெயர்! இதனை விளக்கச் சொல்வாயாக.

மங்கை :—புனிதவதி நீ புகல்வனயாவும் மெய்யே. மெய்கண்டதேவ நாயனார் சிவஞானபோதம் இயற்றுவதற்கு முன்னேயே திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார் என்கிற இரண்டு சைவசித்தாந்த நூல்கள் இயற்றப் பட்டுள்ளன. திருவுந்தியார் இயற்றியவர் திருவியலூர் உய்யவந்ததேவ நாயனார். இவர் இதில் வீடு அடைவதற்குரிய நெறியையும் அடைந்தோர் தன்மையையும் ஆசிரியர் சுவானுபவத்தையும் சிறப்பாக விளக்கியிருக்கின்றார். திருக்களிற்றுப்படியார் இயற்றியவர் மேற்குறித்த திருவுந்தியார் ஆசிரியரின் மாணாக்கரின் மாணாக்கராகிய திருக்கடவூர் உய்யவந்ததேவ நாயனார். திருவுந்தியாரின் கருத்தைத் தெள்ளிதின் விளக்கு மிந்நூல் பொன்னம்பலத்திலுள்ள திருக்களிற்றுப்படியிலே வைக்கப்பட்டபொழுது அப்படியிலே உள்ள களிற்றின் துதிக்கையானது நிமிர்ந்து அந்நூலை யெடுத்து நடேசப்பெருமான திருவடியில் சேர்ப்பித்தமையால் இப்பெயர் ஏற்பட்டது. இதில் திருவள்ளுவநாயனார் திருக்குறள்களும் மேற்கோள் களாக எடுத்தாளப்பட்டுள்ளன.

புனிதா :—இவ்விரண்டின் சிறப்பை அறிந்தேன். மற்று ஆறிரண்டின் இயல்பென்னையோ?

மங்கை :—அம்மையே, அவற்றில் முதற்கண் விளங்குவது சிவஞான போதம். இதனை இயற்றிய அருட் பெரியாரே மெய்கண்டதேவர். இவர் மாணவர்களில் தலை சிறந்தவர் அருணந்தி சிவாசாரியார். இவரே சிவ ஞானசித்தியாரும், இருபாஇருபஃது என்னும் நூலும் இயற்றியவர். சித்தியார் சிவஞானபோதத்தின் வழிநூலாய் சிவாகமப் பிரமாணத்தை ஒப்புக்கொள்ளாத புறச்சமயங்களின் நிலையுரைத்துத் தகர்க்கும் பரபக்கமும் சித்தாந்த சமயத்தின் மெய்ப்பொருள் தெரிவிக்கும் சுபக்கமும் ஆகிய இருபெரும் பகுதியையுடையது. மெய்கண்டதேவரின் மற்றொரு மாணவராகிய மனவாசகம்கடந்தார் ‘உண்மைவிளக்கம்’ என்னும் நூல் இயற்றினவர். 53 வெண்பாக்களையுடைய இந்நூலில் தத்துவங்கள் ஆன்மாக்கள் இயல்பு, ஐந்தெழுத்து முதலியன ஆசிரிய மாணவர்களின் வினாவிடையாக விளக்கப்பெற்றுள்ளன.

புனிதா :—செல்வி, ஒவ்வொன்றையும் நீ விரிவாக விளக்கிக்கூறுவாயானால் எனக்குக் கேட்டுக்கொள்ள ஆற்றலும் நேரமுமில்லை. ஆதலின் மற்ற வெட்டின் இயல்பையும் சுருக்கிக்கூறுக.

மங்கை :—புனிதவதி இவ்வெட்டையும் செய்தவர் சிதம்பரம் உமாபதி சிவாசாரியர். இவர் அருணந்தி சிவாசாரியார் மாணவராகிய மறைஞான சம்பந்த சிவாசாரியாரின் மாணவர். இந்நால்வரும் மெய்கண்ட சந்தானாசாரியர் எனப்பெறுவர். சைவசமயாசாரியர் நால்வர்போல் இவர்கள் **சந்தானசாரியர் நால்வர்** என்று அழைக்கப் பெறுவர். ஆகவே மெய்கண்

டாரும் அவர் வழிவந்த மாணவரும் இயற்றிய நூல்கள் பன்னிரண்டுடன் அவற்றிற்கு முற்பட்ட உந்திகளிறு என்னும் இரண்டோடு 14 நூல்களும் மெய்கண்டசாத்திரம் என்று பெயர் பெறும்.

புனிதா :—அம்மெய்கண்ட சாத்திரத்திற்கும் இங்குக் கூடியுள்ள மாநாட்டுக்கும் என்ன தொடர்பு?

மங்கை :—மேற்கண்ட சாத்திரங்களைப் பயில்வாரும் உணர்வாரும் தெளிவாரும் குறைந்துவரும் இக்காலத்து அவற்றின் பொருள்களையும் கருத்துக்களையும் சைவமக்கள் யாவரும் இவை என்று தெரிந்து மகிழு மாறே இம்மாநாடு கூடியுள்ளது.

புனிதா :—இத்தகைய மாநாடு இதற்கு முன்னாக் கூடியதில்லையோ? இதனைக் கூட்டுவிப்பவா யார்?

மங்கை :—இந்நகரில் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக மொன்றிருப்பதும் தமிழ் நூல்களும் சமய நூல்களும் மிகவும் அழகாக வெளிப்படுத்தி வருவதும் தெரியாதா?

புனிதா :—ஓகோ நினைவுவந்தது. பள்ளிமாணவாக்கென கழக வெளியீடுகள் பல வெளியிட்டுவருவது அக்கழகத்தார்தானே.

மங்கை :—நன்று சொன்னாய்; அவர்கள் இதுவரை மெய்கண்ட சாத்திரங்களை அச்சிட்டு வெளிப்படுத்தினர். வாங்கினவர்கள் படித்து தெளியக் கருதினர். எல்லாருக்கும் அச்சாத்திரப் பொருள்களை விளக்கி மகிழ்விக்க இம்மாநாட்டைக் கூட்டியுள்ளார்.

புனிதா :—மிகவும் நன்று, மாநாட்டு நிகழ்ச்சி முறைகளை கவனித்து யாவரும் இன்புறுவோமாக.

வேதம பசுவதன்பால் மெய்யாகமம்நால்வர்
ஓதும் தமிழ்அதனின் உள்ளுறுநெய்—போதமிகு
நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்ததமிழ் நூலின் திறம்.

நெல்லை மெய்கண்ட சாத்திர மாநாட்டில் 21-5-1941 புதன்கிழமை நிறைவேறிய

தீர்மானங்கள்

தனித்தீர்மானம் (க)

தண்டமிழ்த் தொண்டரும், சைவசமயச் சீலருமான மாபெருந் தகைமையாளர், செந்தமிழ்ப் புரவலர், **ந. வே. உமாமகேசுவரம் பிள்ளை** *அவர்கள் இவ்வாண்டு, மேத்திங்கள் 9-ம் நாள், வெள்ளிக்கிழமை இரவு, வட நாட்டிலுள்ள* **பிசாபாத்** *என்னும் ஊரின்கண் உயிர் நீத்தமை தமிழர் ஒவ்வொருவரையுந் திடுக்கிடச்செய்கின்றது. அன்னாரின் உயிர் இறைவன் திருவடியில் இன்புற்றிருக்க வேண்டுமென்று எல்லாம் வல்ல எம்பெருமானை, இம் மாநாடு வழுத்துகின்றது.*

முன்மொழிந்தவர் :—திரு. ரா. பி. சேதுப்பிள்ளை யவர்கள் B.A., B.L.
பின்மொழிந்தவர்கள் :—(1) துடிசைகிழார் அ. சிதம்பரனார் அவர்கள்.
(2) திரு. சுந்தர ஓதுவாமூர்த்தி அவர்கள்

தனித் தீர்மானம் (உ)

இம் மாநாட்டினர் தங்களது ஆழ்ந்த அநுதாபத்தைத திரு. பிள்ளையவர்களின் குடும்பத்தாருக்கு அறிவித்துக் கொள்வதுடன் அவர்களால் பெரிதும் முயன்று தோற்றுவிக்கப்பட்ட மாபெருங் **கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின்** *முயற்சிகளைச் செவ்வனே நடத்தி அவர்களது புகழ் என்றும் நிலைபெறுமாறு செய்யவேண்டுமென்று மேற்படி சங்கத்தாரை வேண்டிக்கொள்கின்றனர்.*

முன்மொழிந்தவர் :—திரு. வித்துவான் ப. சி. புன்னைவனநாத முதலியார் அவர்கள்.
பின்மொழிந்தவர் :—திரு. சீ. இராமலிங்க முதலியார் அவர்கள், B.A.

திருநெல்வேலி மெயகண்ட சாத்திர மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

முதலாவது தீர்மானம்

தமிழ் வளர்த்த சங்கமிருந்து பொங்கிய நன்னகராகிய **மதுரையில்** *திருக்கோவிலில் தேவாரம் திருவாசகம் முதலிய தமிழ் மறைகளை* **ஓதுவார் ஒருவருக்கு மட்டும்** *திங்கள் ஒன்றுக்கு* **ஏழு ரூபாயும்** *அதே கோயிலில் வடமொழி வேத பாராயணம் செய்துவரும்* **சாத்திரிகள் அறுவருக்கு மொத்தத்தில் ரூ. 135-ம்** *சம்பளமாக வழங்கிவருவது தமிழுக்கும், தமிழர்களுக்கும் என்றும் அழிவிலா இழிவை அளிப்பதாக இருப்பதனால், ஆலயப் பொறுப்பாளிகளின் மேற்கண்ட செயலை இம்மாநாடு வன்மையாய்க் கண்டிப்பதுடன், இனிமேல் வடமொழி ஓதுபவருக்கு வழங்குவதுபோல் தமிழ்*

மறை ஓதுபவருக்குங் குறையாது சம்பளம் வழங்கவேண்டுமென்று இந்து சமய அறிநிலைப் பாதுகாப்பாளர்களையும், ஏனைய ஆலயப் பொறுப்பாளி களையும் இம்மாநாடு வற்புறுத்துகின்றது.

முன்மொழிந்தோர் :—திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள்.
பின்மொழிந்தோர் :—(1) திரு. ந. சிவகுருநாத பிள்ளையவர்கள்.
(2) திரு. புத்தநேரி. ரா. சுப்பிரமணியன்.

இரண்டாவது :

தமிழ் நாட்டிற்கே உரிய, சென்னை, திருச்சிறுப்பள்ளி வானொலி (ரேடியோ) நிலையங்களில் தமிழ்ச் சார்பில்லாத ஆந்திரச் சார்புடைய பாடல்களுக்கும் சொற் பொழிவுகளுக்கும், கதைகளுக்கும் முதன்மையாகவும், மிகுதியாகவும் இடம் கொடுப்பதை இம்மாநாடு கண்டிப்பதுடன் தமிழ் நாட்டில் சிறந்த இசைப்புலவர், தமிழ்ப் புலவர்களும், தேவாரத் திருவாசகப் பண்களி லும்பிற இசைக் கலைகளிலும் வல்ல திருவாளர்கள் சுந்தர ஓதுவாமூர்த்தி, தண்டபாணி தேசிகர், சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை இலக்குமணப் பிள்ளை B.A., பொன்னையாப் பிள்ளை போன்ற இசைவாணர்கள், பிற தமிழ்க் கலைஞர்கள், சொற் பொழிவாளர்கள், கதை வல்லார்கள் ஆகிய இவர்களுடைய புலமைத்திறன் தமிழுலகிற்குப் பயன் படும்வண்ணம் இவர்களுக்கு முதன்மையாகவும், மிகுதியாகவும் இடங் கொடுக்க வேண்டுமென்று இம்மாநாடு மேற்படி வானொலி நிலைய அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கிறது.

முன்மொழிந்தோர் :—திரு. பாலகவி வயிநாகரம். இராமநாதன் செட்டியார் அவர்கள்.
பின்மொழிந்தோர் :—திரு. து. சு. கந்தசாமி முதலியார், B. A., அவர்கள்,

மூன்றாவது :

சென்னைப் பல்கலைக் கழகத்தாரும், அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தாரும் சைவ சித்தாந்த வித்துவான், இலக்கண இலக்கிய வித்துவான் என்னும் பட்டங்களுக்குரிய பரிசோதனைகளையும், படிப்புமுறைகளையும் ஏற்படுத்த வேண்டுமென்று அவர்களை இம்மாநாடு வேண்டிக் கொள்கின்றது. இதன் பொருட்டுச் சென்னை அரசாங்கத்தார் மேற்படி பல்கலைக் கழகங்களுக்குத் தக்க பொருளுதவி செய்ய வேண்டுமென்றும் இம்மாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

முன்மொழிந்தோர்:—திரு. துடிசைகிழார். அ. சிதம்பரனர் அவர்கள்.
பின்மொழிந்தோர்:—திரு. த. சி. இராமலிங்கம் B.A., B.L , அவர்கள்.

நான்காவது :

சைவசமயக் கொள்கைகளைப் பரப்புவதற்கு ஆண்டுதோறும பி. ஏ. தேர்வில் தேறி வெளிவரும் மாணவர்களுக்கு விவிலிய நூற் கழகத்தினர் விவிலிய நூலைப் பரிசாக வழங்குவதுபோல, நமது பொது

மறையாகிய **திருக்குறள் உரையுடன்** கூடிய பதிப்பு நூலைப் பரிசாக வழங்கும்படி நம் தமிழ்நாட்டு மடாதிபதிகளை இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

முன்மொழிந்தோர் :—திரு. கீ. இராமலிங்க முதலியார் அவர்கள் B. A.
பின்மொழிந்தோர் :—திரு. K. A. சிவஞானம் பிள்ளையவர்கள்.

ஐந்தாவது :

தமிழ் நாட்டிலுள்ள திருககோயில்களில் தமிழ் இலககிய இலக்கண சமய நூல்களை வாங்கி நூல் நிலையம் அமைத்து மக்கள் யாவரும் படித்துப் பயன்படும்படியான ஏற்பாட்டைக் கட்டாயம் செய்ய வேண்டுமென்றும், திருக்கோயில் திருவிழாக் காலங்களில் தமிழ், சமயம் பற்றிய சொற்பொழிவுகளைச் சிறப்புற நடாத்திப் பொதுமக்கள் அறிவை வளர்க்க வேண்டு மென்றும் இம்மாநாடு தீர்மானிக்கின்றது.

முன்மொழிந்தோர் :—திரு. பு. சி. புன்னைவனநாத முதலியார் அவர்கள்.
பின்மொழிந்தோர் :—திரு. குமாரசாமிச் செட்டியாரவர்கள், குடந்தை.

ஆறாவது :

சைவத் தமிழ் மககள் ஒவ்வொருவர் வீட்டிலும், பன்னிரு திருமுறை, சித்தாந்த சாத்திரம் ஆகிய இரண்டு பெருந் தொகுதிகளையும் வாங்கிப் போற்றி வரும்படி கேட்டுக்கொள்ளப்படுவதுடன், அவர்கள் நாடோறும் திருமுறைப் பாராயணம், திருக் கோயில் வழிபாடு முதலியவற்றைத் தவறாது மேற்கொண்டு செய்து வரும்படியும் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

முன்மொழிந்தோர் :—திரு. க. வச்சிரவேல்முதலியாரவர்கள், B.A.,L.T.
பின்மொழிந்தோர் :—திரு. பெ. ராம. சு. அண்ணாமலைச்செட்டியாரவர்கள்.

ஏழாவது :

உயிர் நாடியாகிய சைவசமய சாத்திர நுட்பங்களை அறிந்துள்ள சைவ மக்கள், சிறு தெய்வங்களைச் சாந்தப்படுத்துவ தென்னும் முறையில் சைவாகமங்களுக்கு மாறான முறையில், வாயில்லா உயிர்களைப் பலி கொடுத்து வருகிறார்கள். இச்செய்கை மிகுதியும் வருந்தத்தக்கது. இக் கொடுமையை விலக்கி நன்மையைத் தரும் முறையில் அறநிலைக் காவலர்கள் மேற்குறித்த உயிர்ப் பலி யீட்டைத் தடுத்துக் கடவுள் வழிபாட்டைச் சிறப்பிக்குமாறு அவர்களை இம்மாநாடு கேட்டுக்கொள்வதுடன் பலி கொடுக்கும் கோயில்கட் கெல்லாம் பலிவிலக்கு உத்தரவை உடனே பிறப்பித்துச் சைவ சீலத்தைப் போற்றுமாறு அறநிலைப் பாதுகாவற் சங்கத்தாரையும் கேட்டுக்கொள்கிறது.

முன்மொழிந்தோர் :—திரு. ஆசிரியர் அ. வரதநஞ்சையபிள்ளையவர்கள்.
பின்மொழிந்தோர் :—திரு. சுந்தர ஓதுவாமூர்த்தியவர்கள்.

எட்டாவது :

தமிழ் நாட்டிலுள்ள சிவாலயங்கள், சைவமடங்கள் முதலிய சைவ சமயப் பொது நிலையங்களில் கௌரவ முறையிலேனும், சம்பள முறையிலேனும் நியமிக்கப்படும் தர்மகர்த்தர், நிர்வாக அதிகாரிகள் முதலியோர் சைவத் திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள் முதலியவற்றில் ஓரளவாவது பயிற்சியுடையவர்களாக இருக்கவேண்டுமாதலின், அத்தகையோரையே அவற்றிற்கு இனி நியமித்துதவும்படி சென்னை அறநிலைப் பாதுகாப்புக் கழகத் தலைவரவர்களை இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகின்றது.

முன்மொழிந்தவர்:—திரு. அ. முததையா வேள் அவர்கள், B.A.,B.L.
பின்மொழிந்தவர் :—திரு. கண்ணபிரான் வேள் அவர்கள்.

ஒன்பதாவது

இயல், இசை, நாடகம் வல்லுநர்க்கும், சமயத்தொண்டர், தமிழ்த் தொண்டர், பொது நலத தொண்டர் முதலியவர்களுக்கும், இம்மாநாட்டின் சார்பில், தகுந்த சிறப்புப் பட்டங்கள் வழங்க வேண்டுமென்று இம் மாநாடு தீர்மானிக்கின்றது.

இது தலைவரவர்களாற் படிககப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பத்தாவது

மெய்கண்ட சாத்திர நூற் பொருள்களை ஆராய்தல், உரையாடல், ஐய மறுததல், மொழிபெயர்த்தல் முதலியன செய்தற்கு, அடியிற்கண்ட தக்கோர்கள் அடங்கிய "மெய்கண்டநூல் ஆராய்ச்சிக் கழகம்" ஒன்றினை இம் மாநாடு அமைக்கின்றது.

தலைவர்

சிவத்திரு. காசிவாசி. ஞான சிவாசாரியார் அவர்கள், பழநி.

துணைத் தலைவர்கள்

திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள் B. A., *சிந்துபூந்துறை.*
,, *கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள்* M.A.,M.L., *திருநெல்வேலி.*

அமைச்சர்கள்

திரு. தா. சு. கந்தசாமி முதலியாரவர்கள் B.A., *சாத்தூர்.*
" *வித்துவான் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள், செங்கம்.*

உறுப்பினர்கள்

(1) *திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள், திருச்சி*
(2) ,, *அ. வரதநஞ்சைய பிள்ளை அவர்கள், ஜலகண்டபுரம்.*
(3) ,, *ரா. கந்தசாமியார் அவர்கள், அண்ணாமலைநகர்.*
(4) ,, *பண்டிதமணி. மு. கதிரேசச் செட்டியாரவர்கள், அண்ணாமலைநகர்.*
(5) ,, *ந. சிவகுருநாத பிள்ளை அவர்கள், தூத்துக்குடி.*
(6) ,, *பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியாரவர்கள், சென்னை.*
(7) ,, *ரா. சண்முகசுந்தரஞ் செட்டியார் அவர்கள், சென்னை.*

(8) திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள், B.A.,L.T. சென்னை
(9) ,, வித்துவான் பு. சி. புன்னைவனநாத முதலியார் அவர்கள், பாளையங்கோட்டை.
(10) ,, வே. மாணிக்கவாசகம் பிள்ளை அவர்கள், திருநெல்வேலி.
(11) ,, க. வச்சிரவேலு முதலியார் அவர்கள், B.A.,L.T., காஞ்சி.
(12) ,, C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள், B.A., கோவை.
(13) ,, அ. மு. சரவண முதலியார் அவர்கள், லாலுகுடி.
(14) ,, இளவழகனார் அவர்கள், சென்னை.
(15) ,, ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் B.A.,B.L., சென்னை.
(16) ,, அ. முத்தையா பிள்ளை அவர்கள், B.A.,B.L., பாளையங்கோட்டை.

முன்மொழிந்தவர் :—திரு. வித்துவான். **பு. சி. புன்னைவனநாத முதலியாரவர்கள்.**

பின்மொழிந்தவர் :—அம்பாசமுத்திரம் வழக்கறிஞர்,

திரு. **V. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள்.**

நெல்லை மெய்கண்ட சாத்திர மாநாட்டைச் சார்ந்த தமிழ்ப் புலவர் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட

தீர்மானங்கள்

முதலாவது

தமிழ் ஒலி யல்லாத ஷ, ஸ, ஹ, முதலிய பிற ஒலிகளையும் குறிகளையும் தமிழ் நெடுங் கணக்கிற் கையாண்டு வருவதும், அது நிலைப்பதுபற்றிச் செய்யும் கிளர்ச்சியும், தமிழ் இலககணவரம்பை முற்றிலுஞ் சீர்குலைத்துத் தமிழ் ஆக்கத்தைக கெடுத்துவிடுமாதலால், அக்கிளர்ச்சியை இக்கூட்டம் வன்மையாகக கண்டிக்கின்றது.

முன்மொழிந்தோர் :—வித்துவான். ஔவை சு. துரைசாமிப் பிள்ளையவர்கள்.

பின்மொழிந்தோர் :—திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள்.

இரண்டாவது

அரசாங்கத்தார் முன்னர் வெளியிட்டுள்ள கலைச்சொற்களை ஆட்சியிலிருந்து தள்ளிவிடவும் அவர்கள் அநுமதித்துள்ள சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தார் வெளியிட்டுள்ள “கலைச் சொற்கள்” என்ற நூலையே ஆட்சிக்குக் கொண்டுவரவும், இந்நூலின் சொற்கள் பெரும்பான்மை ஆட்சிக்கு வந்துவிட்டமையால், இப்போது அரசியலார் அமைத்துள்ள தமிழ்க் கலைச்சொற்கழகத்தை உடனே கலைத்து விடவும் இக்கூட்டம் அரசியலாரை வேண்டிக் கொள்ளுகின்றது.

தலைவரால் வாசிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

மூன்றாவது

தமிழ்ப் பாடப் புத்தகங்களும், கணக்கு, பூகோளம், வரலாறு முதலிய கலைப்பாடப் புத்தகங்களும், தமிழ் நடை பிறழ்ந்து பிழை மலிந்தனவாக இருத்தலினாலே, தக்க தமிழ்ப் புலவர்கள் நூற்றுக்கு ஐம்பது வீதமாவது தமிழ்ப்பாடப்புத்தகக்குழு (Text-Book Committee) வில் இடம் பெறுமாறு நியமிக்கவும், அதிலுள்ள கணக்கு, பூகோளம் முதலிய உட்கழகங்களிலும் புலவர்கள் 25% இடம்பெறுமாறு செய்யவும், இம்மாநாடு அரசியலாரை வேண்டிக்கொள்கின்றது.

முன்மொழிந்தோர் :—திரு. P. K. அருணசலக் கவுண்டர் அவர்கள்.
பின்மொழிந்தோர் :—திரு. பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியாரவர்கள்.

நான்காவது

தமிழ் மக்கள் பெயர்களும, தமிழ் மக்களின் இல்லம், வாணிபக் கழகங்கள் முதலிய எல்லாவற்றின் பெயர்களும் ஆங்கிலம் வடமொழி முதலிய பிறமொழிச் சொற்களிலன்றித் தமிழ்மக்கள் தம் தமிழ்மொழிச் சொற்களாலேயே அமைத்துக்கொள்ளவேண்டும் என்று அவர்கள் அனைவரையும் இம்மாநாடு அன்புடன் வற்புறுத்தி வேண்டிக்கொள்கின்றது.

முன்மொழிந்தோர் :—திரு. கி. இராமலிங்க முதலியாரவர்கள் B.A.,
பின்மொழிந்தோர் :—திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்கள்.

ஐந்தாவது

சென்னை, அண்ணமலைப் பல்கலைக் கழக நூலாயவுக் குழுக்களில் (Board of Studies) அவற்றின் உறுப்பினராயிருந்து திடீரென்று, தமிழ் நாடு கலங்கும்படி காலஞ்சென்ற தஞ்சை திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் இடத்தில் தமிழ் மக்களில் தக்காரை நியமிக்க வேண்டுமென்றும், அவ்விதம் நியமிக்கும் பொழுது நாளதுவரை இடம் பெறுமலிருக்கும், திருநெல்வேலி ஜில்லாவில் தங்கிவரும் தமிழறிஞர்களை நியமிக்க வேண்டுமென்றும் அப்பல்கலைக் கழக ஆட்சியாளர்களை இச்சிறப்புக்கூட்டம் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கின்றது.

முன்மொழிந்தோர் :—திரு. க. வச்சிரவேல்முதலியார் அவர்கள் B.A.,L.T.
பின்மொழிந்தோர் :—வித்துவான் திரு. S. அருணைவடிவேல் முதலியாரவர்கள்.

ஆறாவது

உயர்நிலைப் பள்ளிகளில் வித்துவான் முதலிய பட்டங்கள் பெறுமல் 10 ஆண்டுகட்குமேல் வேலைபார்த்து, மேலதிகாரிகளால் நன்கு மதிக்கப் பெற்ற பண்டிதர்களை, வித்துவான் முதலிய பட்டங்களைப் பெறுமாறு வற்புறுத்தாது, அவர்கட்கு விலக்குத தந்தருளுமாறு அரசியலார்க்கு இம்மாநாடு அறிவித்துக் கொள்ளுகின்றது.

முன்மொழிந்தோர் :—திரு. வித்துவான் பு. சி. புன்னைவனநாத முதலியாரவர்கள்.
பின்மொழிந்தோர் :—பாலகவி வயிநாகரம் திரு. வே. இராமநாதன் செட்டியாரவர்கள்.

ஏழாவது

உயர்நிலைப்பள்ளிகளில் வேலை பார்த்துவரும் பண்டிதர்கள் 55 வயதில் வேலையிலிருந்து நீங்கவேண்டு மென்னும் விதி கடுமையானதாக இருத்தலால், அறுபது வயது வரையிலுமாவது வேலை பார்த்து வர அனுமதிக்கும் படி விதியமைக்க, அரசியலாரை இக்கூட்டம் வேண்டிக் கொள்கின்றது.

முன்மொழிந்தோர் :—திரு. வித்துவான் பு. சி. புன்னைவனநாத முதலியாரவர்கள்.

பின்மொழிந்தோர் :—திரு. வே. மாணிக்கவாசகம் பிள்ளையவர்கள்.

எட்டாவது

உயர்நிலைப்பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் மாணவர்கள் சிலர் தாய் மொழியைப் பயிலாமலேயே B.A., வரையிலும் படிப்பதற்கு Part II என்பதில் தமிழோ, சமஸ்கிருதமோ, இந்தியோ, விருப்பப்பாடமாக எடுத்துக் கொள்வதை இம் மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது. தமிழ் நாட்டுத் தமிழ்ச் சிறுவர்கள், தங்கள் தாய்மொழியை முதன்மையாகவும், கட்டாயமாகவும் கற்கவேண்டி, அவர்கட்கு (Part II) பகுதி II என்பது தமிழ் ஒன்றிற்கே அமைய வேண்டுமென்றும், சமஸ்கிருதம் முதலிய பிற மொழிகள் பகுதி III (Part III) விருப்பப்பாடமாக அமைய வேண்டுமென்றும் விரும்பி, அதற்கானவை செய்து உதவுமாறு, அரசாங்கத்தாரையும் சென்னை, அண்ணாமலை, திருவனந்தபுரம் பல்கலைக் கழகத்தாரையும் இம் மாநாடு வற்புறுத்துகின்றது.

முன்மொழிந்தோர் :—திரு. P. K. அருணாசலக் கவுண்டரவர்கள்.

பின்மொழிந்தோர் :—(1) திரு. வித்துவான் பு. சி. புன்னைவனநாத முதலியாரவர்கள்.

(2) திரு. வித்துவான் ஔவை சு. துரைசாமிப் பிள்ளையவர்கள்.

ஒன்பதாவது

தமிழ் நெடுங் கணக்கிலுள்ள எழுத்துக்களை இப்போது சிலர் கிளர்ச்சி செய்கின்ற வகைப்படி மாற்ற வேண்டுவது அவசியமில்லை; இவ்வித மாறுதல் ஏற்படின் தமிழ் மிகுந்த இடையூறுகட்குட்படும்; உண்மை நலம் ஒழியும் என்று இம்மாநாடு எண்ணுகின்றது.

இது தலைவரவர்களாற் படிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

சிறப்புப் பட்டங்களும் பரிசுகளும்

தமிழகத்தின் கலைவல்ல சான்றோர்கள் இம்மாநாட்டிற் கலந்துகொண்டு மகிழ்வோடு சொற்பொழிவுகளும் இசையரங்குகளும் நடத்திய அருமைகளும் தொண்டர்கள் ஆற்றிய தொண்டுகளும் பெரிதும் நினைவு கூர்தற்குரியனவாகும். ஆதலின் இம் மாநாட்டார், அவ்வருமையாளர்கட்குத் தக்கவாறு சிறப்புப் பட்டங்கள் முதலியன அளித்துப் பாராட்டவேண்டுமென்று ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றனா. அதன்படி இம் மாநாட்டார் அளிப்பன வருமாறு ;

இயல் :—இயற்றமிழ்ப் புலவர்கட்குரிய சிறப்புப் பட்டங்கள் அடுதத இதழில் வெளிவரும்.

இசை :—திருவாளர் திருவனந்தை தி. இலக்குமணப் பிள்ளை B.A., அவர்கட்கு—"இசைக்கலை ஆசிரியர்" என்பதும்,

திருவாளர் மயிலம் க. வச்சிரவேல் முதலியாரவாகட்கு, "இசை மணி" ,,

,, சிதம்பரம் செல்வரத்தினம் பிள்ளை அவர்கட்கு, "இசைச்செல்வர்" ,,

,, நெல்லை சா. சுந்தர ஓதுவாமூர்த்தியவர்கட்கு, 'மறையிசை மன்னர்" ,,

,, சித்தூர் சுப்பிரமணிய பிள்ளையவர்கட்கு, "இசை மன்னர்" ,,

,, மேலகரம் சம்பந்த ஓதுவாரவர்கட்கு, "மறையிசைச் செல்வா" ,,

,, வீரவநல்லூர் சுநதர ஓதுவாமூர்த்தியவர்கட்கு, "மறையிசை மணி" ,,

நாடகம் :—திருவாளர் மதுரை தேவிபாலவிநோத சங்கீத சபையின் உரிமையாளர் நவாப் T. S. ராஜ மாணிக்கம் அவர்கட்கு, "நாடகக் கலையரசு" ,,

தொண்டு :—திரு. புத்தநேரி ரா. சுப்பிரயமணியம என்பார்கறு "தமிழ்நற் பெருந்தொண்டர்" ,,

,, ரா. நடராசன் என்பார்க்கு "நற்றொண்டர்" ,,

மாநாட்டார் மகிழ்வோடு வழங்கும் சிறப்புப்பட்டங்களாகும். இசைச் செல்வர்களுள் முதல் ஐவரும் மாநாட்டில் இசையரங்கு நடததினவராவர். பின் இருவரும் மாநாட்டில் இடையிடையே மறையிசை ஓதினோராவர் ; இவருள், முதன் முறையாக நமது மாநாட்டுக்கு வந்தவர்களான திருவாளர்கள் தி. இலக்குமணப் பிள்ளையவர்கள் B.A., மயிலம் க. வச்சிரவேல் முதலியாரவர்கள், சிதம்பரம் செல்வரத்தினம் பிள்ளையவாகள், சித்தூர் சுப்பிரமணியம் பிள்ளையவர்கள் என்னும் இசைச் செல்வர்கள் நால்வர்க்கும் தனித்தனிப் பொற்பதக்கங்களும் அவ்வவ் விசையரங்கில் இம்மாநாட்டார் அன்புடன் வழங்கியிருக்கின்றனா.

அம்பாசமுத்திரம், வீரவனல்லூர், நெல்லை தேவாரப் பாடசாலைகளி லிருந்து வந்து மாநாட்டில் இடையிடையே இன்னிசையோடு தேவாரம் ஓதிய சிறுவர் சிறுமிகட்கும் அவரவர்க்குப் பயன்படத்தக்க செந்தமிழ்ச் சைவ நூல்கள் பரிசளிக்கப்பெற்றன. இவரனைவோரும் திருவருளால் மேன்மேற் சிறப்புக்களும் நலங்களும் நிறைவாழ்வும் பெற்று இனிது வாழ்க வென மாநாட்டார் மகிழ்வுடன் வாழ்த்துகின்றனர்.

மெய்கண்ட சாத்திர மாநாட்டைப்பற்றி

'வாழ்த்துக்கள்'

நம் நாட்டிலுள்ள அறிஞர்களுள், மாநாட்டுக்குவந்து அது நடை பெற்ற மாட்சியைக்கண்டு களித்தோரும், வர இயலாதோரும் பேரன்போடு மாநாடு குறித்து வழங்கிய வாழ்த்துக்கள் முதலிய பின்வருமாறு :

1- **திருப்பனந்தாள் காசிமடத்துத் தலைவர்களான சிவத்திரு. காசி வாசி சாமிநாத தம்பிரானவர்கள் :**

"மெய்கண்ட சாத்திர முதல் மாநாட்டின் நிகழ்ச்சிகள் பெரு வெற்றியுடன் நடைபெறுக"

2. **திருத்தருமபுரம் ஆதீன மகாசந்நிதானமவர்கள் :**

"சமயப் பயிற்சிக்கும் வளர்ச்சிக்கும் ஊக்கந்தருதற்குரிய முறை மையில் நடைபெறுகின்ற மெய்கண்ட சாத்திர மாநாடு சிறப் பாக நடைபெறவேண்டுமென்று விரும்புகின்றோம்"

3. **திருவாவடுதுறை ஆதீன மகாசந்நிதானமவர்கள் :**

"21-5-41-ல் நடைபெறும் மாநாட்டுக்குப் பாபவிநாசம் கோவில் பிச்சக் கட்டளை நம் சங்கரலிங்கத் தம்பிரானை அனுப்புகிறோம்."

4. **திருமயிலம் திருமடம் சிவத்திரு. சிவஞானபாலைய அடிகள் அவர்கள் :**

மெய்கண்ட சாத்திர மாநாட்டறிக்கையும் கடிதமும் கண்டனம் ; இறும்பூ தெய்தினம். முருகன் திருவருளால் மிக மேன்மை யோடு மாநாடு மிளிர்வதாக.

5. **சென்னை, அடையாறு தியசாபிகல் சங்கத் தலைவர் திரு. அருண் டேல் அவர்கள் :**

தமிழ்த திருவில் மிக ஊக்கமுடையேன் ஆயினும், மாநாட்டுக்கு வரயியலாம லிருக்கின்றது.

6. **புதுவை அரவிந்த ஆசிரமம் திரு. சுத்தானந்த பாரதியாரவர்கள் :**

உலக அமைதிக்கும் ஒற்றுமைக்கும் உரிய அடிப்படை சைவ சித்தாந்த சமயத்தில் இருக்கின்றது. ஏனையெல்லாச் சமயங்களி னும் இஃது ஆற்றல் வாய்ந்ததாயும் உலகியலோடு ஒட்டியதாயும் மிளிர்கின்றது.

மெய்கண்ட சாத்திரத்தின் மேலான தொண்டில்லை
பொய்வினைகள் போக்கிப் புனிதமுற வையமெலாம்
வாருங்கள் ; சித்தாந்த வாழ்வைப் பயிலுங்கள் ;
சேருங்கள் பேரின்பச் சீர்.

அன்புத்தாய் போலே அருளூட்டி நல்லுயிரை
இன்பத்திற் கின்பம் எடுத்தேகும்—துன்பமிலாத்
தூய சிவபோதந் துலக்குமெய் கண்டாரின்
வாய்மொழியே முத்தி வழி.

8. **சேலம் சொர்ணம்பிகா சைவசித்தாந்த சபை அமைச்சர் சிவத்திரு G. சிவசுப்பிரமணிய குருக்களவர்கள்,**

"அம்மையிலும் இம்மையிலும் அச்சந் தவிர்ந்தடியார்
எம்மையுமாம் எங்கும் இயங்குதலான்—மெய்ம்மைச்
சிவயோக மேயோகம் அல்லாத யோகம்
அவயோக மென்றே அடு.

என்பனவாதி உண்மைகளைத் தந்தருளும் மெய்கண்டார் நூலை மெய்யுணர்வு கொண்டு நோக்கும் நோக்கததால் குழுமிய அன்பர் குழாங்கள்.........சன்மார்க்கத்திடையே அருந்தழுந்தி நிற்கப், பொய்கண்டார் காணப் புனிதனவன் நீண்ட ஆயுளும நீங்காத இன்பமும் நிறைந்தருள் புரியப் பெற்று வாழ்வாராக.

8. **சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் திரு. பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள் :**

"மக்களுக்கு இன்றியமையாத மொழி சமயம் இரண்டனுள்ளும் சமய ஞானமே ஒழுக்கத்தைப் பயப்பதாகும். உயிரினும் ஓம்பப்படுவதாகிய ஒழுக்கத்தைச் செவ்வையான நெறியில் பேணிப் பயன் எய்துதற்கு நம் அரிய சைவசமயத்தைப் போலப் பிறிதொன்று காண்டலரிது. இத்தகைய சிறந்த சைவசமயப் பணியில் தலைநின்று நடத்தப்பெறும் மெய்கண்ட சாத்திர மாநாடு பல்லாற்றாலும் தமிழ்மக்களுக்கு நலம் விளைப்பதொன்றாகும். எல்லாம் வல்ல அம்மையப்பர் திருவருளால் மெய்கண்ட சாத்திர மாநாடு மிக்க வெற்றியுடன் நடைபெறப் பிரார்த்திக்கின்றேன்.

9. **நாகர்கோவில் திருநெறித் தொண்டர்குழாம் தலைவர் கெ. ஆறுமுகம் பிள்ளையவர்கள் :**

"நம் சைவ மெய்கண்ட நூல்கள் பதினான்கையும் சொற் பொழிவுக் கட்டுரை நூல்களாகத் தொகுத்து வெளியிடக் கருதிய தங்கள் பணியைப் பெரிதும் போற்றுகின்றோம். காலத்திற்கியைந்த சிவப்பணிகள் இவை போன்றனவே யாகும்.

10. **திருச்சி மலைக்கோட்டை மௌனம் சோமசுந்தரத் தம்பிரானவர்கள்,**

"இவ்வரிய பெரிய மாநாட்டைக் கூட்டுவிக்க எல்லாம் வல்ல இறைவன் இன்னருள் முன் நிற்பது "தென்னாடுடைய சிவனே எந்நாட்டவர்க்கும் இறைவன்" எனும் ஆப்த வாக்கியத்தை விளக்குவதேயாம். தென்னாடும் தமிழுலகமுமன்றி உலகெலாமே சிவம் பெருக்கும் செயல் செயற்கரிய ஒரு தவச் செயலே."

இங்ஙனமே 'மெய்கண்ட சாத்திர மாநாடு' சிறக்க நடைபெறுக வெனத் திருப்பாதிரிப்புலியூர் சிவத்திரு ஞானியாரடிகள், திருவாளர்களான இராவ்சாகிப் V. P. சுப்பிரமணிய முதலியார் G.B.,V.C., அவர்கள், S. வையாபுரிப் பிள்ளையவர்கள் B.A.,B.L., கொச்சி திவான் சர், R. K. சண்முகம் செட்டியாரவர்கள், கோவை V. C. வெள்ளியங்கிரி கவுண்டரவர்கள், சீயாழி நிலக்கிழவர் T. திருவேங்கடம் பிள்ளையவர்கள், கொடைக்கானலிலிருந்து ராவ்பகதூர் P. ஆவுடையப்பபிள்ளை B.A., B.L., அவர்கள், அண்ணாமலைநகர் தமிழாசிரியர் R. P. அமிர்தலிங்கம் பிள்ளையவர்கள், ஆசிரியர் அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள், தூத்துக்குடி சித்தாந்த ஆசிரியர் ந. சிவகுருநாத பிள்ளையவர்கள், சிதம்பரம் சிவத்திரு முத்துக்குமாரசாமித் தம்பிரான் என்னும் இலக்கணச்சுவாமிகள், சாமி வேலாயுதம் பிள்ளை B.A.,L.T., அவர்கள், சென்னை மயிலை M. பாலசுப்பிரமணிய முதலியார் B.A.,B.L., அவர்கள், நாகப்பட்டினம் N. சிங்காரம் பிள்ளையவர்கள், தஞ்சை பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள். சிந்துபூந்துறை மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள் B.A., தஞ்சை ராவ்சாகிப் த. வே. உமாமகேசுரம் பிள்ளை B.A.,B.L., அவர்கள், துடிசைகிழார் அ. சிதம்பரனாரவர்கள், லக்னோ இசபெல்லா கல்லூரி ஆசிரியை திருவாட்டி V. பரஞ்சோதி அம்மையார் M.A., Ph. D. அவர்கள், இமயமலைத் தவப்பள்ளியில் வீற்றிருக்கும் 'பிரபுத்த பாரத' இதழாசிரியர் உயர்திரு சுவாமி விபுலாநந்த அடிகள் அவர்கள், கொழும்பு கு. சபாநாதனவர்கள், விழுப்புரம் நகர் ஆட்சி ஆணையாளர் கீ. இராமலிங்க முதலியார் B.A., வேலூர் M. S. கோடீசுரன் அவர்கள் B.A.,L.T., வட்டுக்கோட்டை மு. சபாரத்தின சிங்கம் அவர்கள், திட்டை ராமகு. ராமசாமியவர்கள், கொழும்பு சி. கருணாலய பாண்டியனவர்கள், கொழும்பு முதுதமிழ்ப்புலவர் M. நல்லதம்பியவர்கள், திருப்பதி அ. கந்தசாமிப் பிள்ளையவர்கள், திருவனந்தபுரம் R. பத்மநாப பிள்ளையவர்கள், காரைக்குடி சா. கணேசனவர்கள், செங்கரையூர் திருவள்ளுவர் கழகம், வேளாங்கண்ணி அமிர்தகடேசுவரன் பிள்ளை அவர்கள், சென்னை இசையரசு M. M. தண்டபாணி தேசிகரவர்கள், கோவை சி. கே. சுப்பிரமணிய முதலியாரவர்கள் B.A., சேலம் ஆ. மாணிக்கமவர்கள், கோட்டையூர் வெ. நா. இலக்குமணன் செட்டியாரவர்கள், இடிகரை M. பழனியப்ப பிள்ளையவர்கள், கும்பகோணம் P. T. S, குமாரசாமி செட்டியாரவர்கள், திருச்செந்தூர் G. K. பகவதி B.A.,B.L., அவர்கள், புதுவயல் சரசுவதி சங்கம், மருதமலை சிவத்திரு M. R. நாகேசுரக் குருக்கள், கூனூர் ந. நமசிவாயமவர்கள், காஞ்சி வித்துவான் S. அருணை வடிவேலு முதலியாரவர்கள், காஞ்சி வித்துவான் அ. மு. பரமசிவானந்தம் அவர்கள், வித்துவான் V. குஞ்சிதபாதம் பிள்ளையவர்கள், கோவை D. N. ஆறுமுகம் பிள்ளையவர்கள், தாம்பரம் பூ. சமரபுரி முதலியாரவர்கள், திருவனந்தபுரம் C. பன்னிருகைப் பெருமாள் முதலியார் M.A.,B.L., அவர்கள், கோவை C. P. முத்துசாமி அவர்கள், வாலாஜாபாத் இந்துமத பாடசாலை, கொழும்பு வீ. சீ. சா. கழகத்நார் முதலியோர் அன்போடு வாழ்த்துக்கள் அனுப்பியிருக்கின்றனர்.

மாநாட்டுத் தொண்டர்கள் அவர்கட்குத் தம் மகிழ்ச்சியை நன்றியுடன் தெரிவித்துக்கொள்கின்றனர்.

வித்துவான் மா. இராசமாணிக்கம், B. O. L. *அவர்கள்*
1-6-41*ல் சதுர்வேதமங்கலத்திற்குச் சென்று ஆராய்ந்தது.*

பணாமூடுண்ட கோயில்